மலர் : 51 இதழ் : 11

தமிழரசு

மே 2020
விலை ரூ. 20/–

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மே 1 : மே தினம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின்
"மே தின" வாழ்த்துச் செய்தி - 30.04.2020

"உழைப்பே உயர்வு தரும், ஒளிமயமான வாழ்விற்கு வழி வகுக்கும்"

உழைக்கும் மக்களின் உரிமைத் திருநாளான மே தின நன்னாளில், உலகெங்கிலும் வாழும் தொழிலாளர்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த "மே தின" நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

உரிமைகள் மறுக்கப்பட்டு, உழைப்புக்கேற்ற ஊதியமில்லாமல், காலநேரமில்லாமல் பணி செய்து, கொத்தடிமைகளாய் அவதியுற்று இருந்த உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தினர், பல ஆண்டுகளாக ஒற்றுமையுடன் போராடி தங்களின் உரிமைகளை வென்றெடுத்த திருநாளாகவும், உடல் உழைப்பை மூலதனமாக கொண்ட உழைக்கும் மக்களின் உன்னதத்தை உலகிற்கு பறைசாற்றும் தினமாகவும் மே தினம் விளங்குகின்றது.

"மகத்தான செயல் எதுவும் கடின உழைப்பு இல்லாமல் சாதிக்க முடிவதில்லை" என்ற சுவாமி விவேகானந்தர் அவர்களின் பொன்மொழியை மனதில் நிறுத்தி, மக்கள் அனைவரும் தொய்வின்றி கடினமாக உழைத்தால் வாழ்வில் வெற்றி பெறுவது நிச்சயம்.

"உழைப்பே உயர்வு தரும், ஒளிமயமான வாழ்விற்கு வழிவகுக்கும்" என்ற நம்பிக்கையோடு, தங்களின் கடினமான உழைப்பால் வீட்டையும், நாட்டையும் உயர்த்திடும் எனது அன்பிற்குரிய தொழிலாளர் பெருமக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது உளமார்ந்த "மே தின" நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

கே. பழனிசாமி
தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி வருடம் : சித்திரை – வைகாசி
மே 2020

மலர் : 51 விலை ரூ.20 இதழ் : 11

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **பொ. சங்கர் இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
முனைவர் **இரா. பாஸ்கரன்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
மு.அ. ரோசன் குர்சிதா பேகம்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
சு. கமலா
தேச. கலையரசன்

உதவி ஆசிரியர்கள்
ச. மஞ்சுளா
மு. மோகனவல்லி
மு. மணிமேகலை
அ. மதன்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளை மக்கள் பின்பற்ற வேண்டும், கண்டிப்பாக வெளியிலே செல்கின்ற போது முகக்கவசம் அணிய வேண்டும். அதேபோல அடிக்கடி சோப்பு போட்டு கைகளைக் கழுவ வேண்டும்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

இந்த இதழில்...

தேசிய பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ரூ.1,000 கோடி உடனடியாக தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டும்!
மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள், 11.05.2020 அன்று காணொலிக் காட்சி மூலமாக அனைத்து மாநில முதலமைச்சர்களுடன் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கலந்தாய்வு மேற்கொண்டார்கள். இந்த கலந்தாய்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிய உரையின் தமிழாக்கம்....... 5

பொதுமக்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்வதற்கு "ஆரோக்கியம்" என்ற சிறப்புத் திட்டம் துவக்கம்!
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் திட்டத்தை துவக்கி வைத்தார்கள் – 23.04.2020....... 24

ரூ.5.48 கோடி மதிப்பீட்டில், நெஞ்சக தொற்று நோய்களை கண்டறிய நடமாடும் அதிநவீன எக்ஸ்–ரே கருவி பொருத்தப்பட்ட 14 வாகனங்கள்!
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமைச் செயலகத்தில் மக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார்கள்– 11.05.2020....... 56

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், 11.05.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் தேசிய நல வாழ்வு குழுமத்தின் சார்பில் ரூ.5.48 கோடி மதிப்பீட்டில், நெஞ்சக தொற்று நோய் மற்றும் கோவிட்–னால் ஏற்படும் நெஞ்சக தொற்று நோய்களை துரிதமாக கண்டறிய நடமாடும் அதிநவீன எக்ஸ்–ரே கருவி பொருத்தப்பட்ட 14 வாகனங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக துவக்கி வைக்கும் அடையாளமாக 5 வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

தேசிய பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ரூ.1,000 கோடி உடனடியாக தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டும்!

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள், 11.05.2020 அன்று காணொலிக் காட்சி மூலமாக அனைத்து மாநில முதலமைச்சர்களுடன் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கலந்தாய்வு மேற்கொண்டார்கள். இந்த கலந்தாய்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிய உரையின் தமிழாக்கம்.

மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர், மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர், மாநிலத்தின் முதலமைச்சர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் எனது வணக்கம்!

கொரோனா தொற்று நோயை கையாளுவதில் தங்களின் தொடர்ச்சியான வழிகாட்டுதலுக்கும் ஆதரவிற்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன். கொரோனா தொடர்பான இதுவரை எனது தலைமையில் 14 ஆய்வு கூட்டங்களை நடத்தியுள்ளேன். கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க தலைமைச் செயலாளர் தலைமையிலான 12 குழுக்கள் அமைக்கப்பட்டு தொடர்ந்து பல்வேறு பரிந்துரைகளை அளித்து வருகின்றன. நோய் தொற்று குறித்து நியமிக்கப்பட்ட 12 மண்டல குழுக்களும், மாவட்ட ஆட்சியர்களுக்கு நல்ல ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் அளித்து வருகின்றனர். மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல்துறை அதிகாரிகளுடன் வாரம் தோறும் கொரோனா நிலவரம் குறித்து வீடியோ கான்பிரன்ஸ் மூலம் கேட்டு வருகிறேன்.

மாநிலத்தில் ஊரடங்கு உத்தரவை கண்டிப்புடன் அமல்படுத்தும் அதே நேரத்தில், ஊரக பகுதிகளில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்திற்கான பணிகள், கட்டுமான நடவடிக்கைகள், பாசனம் மற்றும் சில பாதுகாப்பு பணிகளை அனுமதித்து இருக்கிறோம். மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்களுக்கு ஊதியத்தை ஊராட்சி செயலாளர்கள் மூலம் பணமாக அளிக்க நீங்கள் அனுமதிக்க வேண்டும். பணம் கையில் கிடைத்துவிட்டால். அவர்கள் வங்கிகளில் கூட்டமாக கூடும் நிகழ்வு தவிர்க்கப்படும்.

மத்திய அரசு அறிவித்த சில தளர்வின் அடிப்படையில் சில தொழில்கள் மற்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னர் 33 சதவீத ஊழியர்களுடன் செயல்பட அனுமதிக்கப்பட்டன. ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள ஜவுளி மற்றும் தோல் தொழில்கள் உற்பத்தி மற்றும் தயாரிப்பு பணிகளுக்கு குறைந்தபட்ச ஊழியர்களுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது இவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது .

கொரோனா நோய்த்தொற்று தொடர்பாக 10.05.2020 நிலவரப்படி 2,43,037 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. 7,204 நபர்களுக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது தற்போது 59,610 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தமிழகத்தில் அளிக்கப்படும் சிறப்பான மருத்துவ சிகிச்சை மூலம் கொரோனா நோயாளி இறப்பு சதவீதம் 0.67 என்ற அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் இதுவே மிகக்குறைந்த சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. 1,959 நோயாளிகள் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதாவது 27 சதவீதத்தினர் குணமடைந்துள்ளனர் என்பது எங்களுக்கு மேலும் ஊக்கம் அளிப்பதாக உள்ளது.

தமிழகத்தில் தற்போது கொரோனா பரிசோதனைக்காக 37 அரசு மற்றும் 16 தனியார் சோதனைக் கூடங்கள் உள்ளன. இதன் மூலம் நாளொன்றுக்கு 13 ஆயிரம் பரிசோதனைகள் செய்யப்படுகிறது. இந்த எண்ணிக்கையை உயர்த்த திட்டமிட்டுள்ளோம். எங்களுக்கு கூடுதல் எண்ணிக்கையில் பி.சி.ஆர் சோதனை உபகரணங்கள் மத்திய அரசு அனுப்ப வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

கட்டுப்பாட்டு மையங்கள் உள்ள மண்டலங்களில் வீடு வீடாக சென்று ஆய்வு மேற்கொண்டு வருகிறோம். தினமும் அங்கு இரண்டு முறை கிருமிநாசினி மூலம் சுத்திகரிப்பு பணிகள் நடைபெறுகிறது. வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம்.

ஆயுஷ் வழிகாட்டுதலின்படி, தமிழக அரசு உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. அனைத்து கட்டுப்பாட்டு பகுதிகளிலும் கபசுரக் குடிநீரை இலவசமாக அரசு வழங்குகிறது. கொரோனா தடுப்பு பணியில் ஜிங்க் மற்றும் மல்டி வைட்டமின் மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. கூடுதலாக மருத்துவ ஆலோசனையின் படி ஹைட்ராஸிக் குளோரோகுயின் வழங்கப்படுகிறது. 123 அரசு மற்றும் மாநிலம் முழுவதும் 169 தனியார் மருத்துவமனைகளில் 29,000 படுக்கைகள் கொரோனா பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க தயாராக உள்ளன.

2.02 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு, ஏப்ரல் மாதத்திற்கு அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், சர்க்கரை போன்ற அத்தியாவசிய ரேஷன் பொருட்கள் வழங்கப்பட்டது. இவை மே மாதத்திற்கும், ஜூன் மாதத்திற்கும் தொடர்ந்து வழங்கப்படும். மேலும், 35.65 அமைப்புசாரா தொழிலாளர்கள் அனைவருக்கும் இரண்டாவது முறையாக கூடுதலாக ரூ.1,000 வழங்கப்பட்டது. 2.56 புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு விலையில்லா பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. தினமும் 1.71 இலட்சம் தொழிலாளர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி இதுவரை 12 இரயில்கள் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், சிகிச்சைக்காக வந்தவர்கள். 13,289 நபர்களை அவர்களின் சொந்த மாநிலத்திற்கு அனுப்பியுள்ளோம். சொந்த ஊருக்கு செல்ல விருப்பம் தெரிவித்தவர்கள் 11.05.2020 முதல் 17.05.2020 வரையில் 61 இரயில்கள் அனுப்ப திட்டமிட்டுள்ளோம். இதற்கு சம்மந்தப்பட்ட முதலமைச்சரின் ஒப்புதலை வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

4 விமானங்கள் மற்றும் 1 கப்பலில் வந்த 900 பயணிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு முறையான சோதனைகள் நடத்தப்பட்டுள்ளது. கொரோனா தொடர்புடைய மருந்துகளை உற்பத்தி செய்ய சிறப்பு ஊக்க தொகுப்பை அறிவித்திருக்கிறேன். அதன்படி 50 நிறுவனங்கள் தயாரிப்பு பணியை தொடங்கியுள்ளன. விவசாய நடவடிக்கைகள், சிமெண்ட், காகிதம், அரிசி, சர்க்கரை சமையல் எண்ணெய் மற்றும் அனைத்து வகையான உணவு பதப்படுத்தும் தொழில்கள் மாநிலம் முழுவதும் செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தினசரி அடிப்படையில் 134 உழவர் சந்தைகள் மற்றும் 9,200 நடமாடும் வாகனங்கள் 5,700 மெட்ரிக் டன் காய்கறிகளும், பழங்களும், மாநிலம் முழுவதும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்காக உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகளுக்கு போக்குவரத்து மானியத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இதனால் விவசாயிகள் உற்பத்தியை நேரடியாக நுகர்வோருக்கு எடுத்துச் செல்ல வழிவகை ஏற்படும்.

விமான சேவைகள் மே 31 வரை தொடங்க வேண்டாம், சென்னையில் அதிக அளவில் கொரோனா தொற்று பாதித்தவர்கள் இருப்பதால், தமிழகத்தில் மே 31 வரை இரயில் சேவையை அனுமதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாங்கள் ஏற்கெனவே விடுவித்த ரூ.312 கோடி ரூபாய் முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், 2 ஆவது தவணையை பெற செயல்படுத்த தேவையான அனைத்து சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மேலும், ஏற்கெனவே நடத்தப்பட்ட வீடியோ கான்பிரன்ஸ் கூட்டத்தில் வலியுறுத்தியவாறு மருத்துவ மற்றும் கொரோனா தடுப்பு உபகரணங்களை வாங்குவதற்காக தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.2,000 கோடியை உடனடியாக தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டும். ஜி.எஸ்.டி.பி. யில் நிதிப்பற்றாக்குறை அளவை மூன்று சதவீதத்திலிருந்து 2019–2020 மற்றும் 2020–2021ஆம் ஆண்டில் 4.5 சதவீதமாக உயர்த்த வேண்டும். 2019–2020ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 33 சதவீத கூடுதல் கடன் அளவை 2020–2021ஆம் ஆண்டிற்கும் நீடிக்க வேண்டும்.

நிலுவையில் உள்ள ஜி.எஸ்.டி இழப்பீட்டுத் தொகையை உடனடியாக அனுமதிக்க வேண்டும். நிதிக் கமிஷன் பரிந்துரைத்துள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியத்தில் 50 சதவீதத்தை உடனடியாக வழங்க வேண்டும். மருத்துவ உபகரணங்கள், பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்டவற்றை கொள்முதல் செய்வதற்காகவும் புலம் பெயர்ந்து வந்துள்ள தொழிலாளர்களை சொந்த மாநிலத்திற்கு அனுப்புவதற்காகவும் தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ஆயிரம் கோடி ரூபாய் வழங்க வேண்டும். இந்த மொத்த செலவையும் தற்போது மாநில அரசே ஏற்றுக் கொண்டுள்ளது.

மத்திய அரசின் திட்டத்தின் கீழ் வரும் பயனாளிகள் உள்ளிட்ட அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் இலவசமாக உணவுதானியம் வழங்கும் வகையில் கூடுதலாக அவற்றை தமிழகத்திற்கு வழங்க வேண்டும். அரிசி கொள்முதலை ஊக்குவிக்கும் வகையில் சி.எம் ஆர். என்ற நெல் அரவை மானியத் தொகை ரூ.1,321 கோடியை வழங்க வேண்டும்.

மின்துறையில் உள்ள பல்வேறு சுமைகளை நீக்கும் வகையில் நிவாரண தொகுப்பை உடனடியாக அறிவிக்க வேண்டும். தமிழகத்தில் சிறு, குறு, நடுத்தரத் தொழிற்சாலைகளும் அதில் பணியாற்றும் பணியாளர்களும் அதிகமாக உள்ளனர். எனவே அந்த தொழிலாளர்களின் ஊதியத்தை பெறும் வகையில் பி.எப்., இ.எஸ்.ஐ உள்ளிட்ட பாக்கிகளை செலுத்தும் வகையில் அந்த பிரிவுக்கு மத்திய அரசு ஆதரவு கரம் நீட்ட வேண்டும்.

தமிழ்நாட்டில் சிறு, குறு நடுத்தர தொழில்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஆண்டுக்கடன் திட்ட இலக்கை ரூ.1,25,000 கோடியாக 2020–2021ஆம் ஆண்டில் உயர்த்த வேண்டும். அவர்களது கடனை வரும் 2020 டிசம்பர் 31ஆம் தேதி வரை திருப்பிச் செலுத்தா வகையில் அவகாசம் வழங்க வேண்டும். இந்த தொழில்களுக்கு புதிய முதலீட்டு நிதி உதவிகளை வழங்க வேண்டும். தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்துக்கு மறுநிதி ஆதாரமாக ரூ.2,500 கோடி வழங்கப்பட வேண்டும்.

வாழ்க்கை

தானாக உயரும் வயது, விடாமல் துரத்தும் காலம், தடுக்க முடியாத நேரம்,
கடக்கத் துடிக்கும் இளமை, காலத்தைத் தடுக்கும் சமூகம்,
தொடவேண்டிய இலக்கு, இத்தனை போராட்டம் தான் வாழ்க்கை.

கொரோனா தடுப்பு உபகரணங்களை வாங்குவதற்காக தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ஆயிரம் கோடி ரூபாயை மானியமாக உடனடியாக தமிழகத்துக்கு அளிக்க வேண்டும்!

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள் 27.04.2020 அன்று காணொலிக் காட்சி மூலமாக அனைத்து மாநில முதலமைச்சர்களுடன் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த கலந்தாய்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் கலந்து கொண்டார்கள்

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் 27.04.2020 அன்று, அனைத்து மாநில முதலமைச்சர்களுடன் காணொலிக் காட்சி மூலம் கொரோனா நோய்த் தொற்று பற்றிய கலந்தாய்வுக் கூட்டத்தினை நடத்தினார்கள். இதுவரை நடைபெற்ற காணொலிக் காட்சிகளில் பேசாத முதலமைச்சர்கள் அன்றைய தினம் பேசினார்கள். நேரமின்மை காரணமாக, பிற மாநில முதலமைச்சர்கள் அனைவரும் தங்களது கருத்துக்களை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நிகரி (Fax) வாயிலாக அனுப்பக் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு தனது கருத்துக்களை நிகரி மூலம் அனுப்பினார்கள். அதன் விபரத்தின் தமிழாக்கம்.

தமிழகத்தில் ஊரடங்கு உத்தரவை அமல்படுத்தும் அதேநேரத்தில், மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான பணிகள், கட்டுமான நடவடிக்கைகள், பாசனம் மற்றும் சில பாதுகாப்புப் பணிகளை அனுமதித்து இருக்கிறோம். மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு ஊதியத்தை பணமாக அளிக்க நீங்கள் அனுமதிக்க வேண்டும். இதனால் அவர்கள் வங்கிகளில் கூட்டமாக கூடும் நிகழ்வு தவிர்க்கப்படும். தமிழகத்தில் அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வு தடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திற்கு வந்த 87,159 சர்வதேச பயணிகளில் பலர் 28 நாட்கள் தனிமைப்படுத்தப்படுவதை முடித்துவிட்டனர். மீதம் 29,000 பேர் இன்னும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதுவரை 87,605 மாதிரிகளை பரிசோதித்ததில் 1,885 பேருக்கு கொரோனா இருப்பது கண்டறியப்பட்டது.

சிறப்பான மருத்துவ சிகிச்சை அளிப்பதன் மூலம் தமிழகத்தில் கொரோனா நோயாளி இறப்பு

சதவீதம் 1.2 என்ற அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 1,020 நோயாளிகள் அதாவது 54 சதவீதத்தினர் குணமடைந்துள்ளனர் என்பது எங்களுக்கு மிகுந்த ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது. பரிசோதனைகளை நாளொன்றுக்கு 10,000ஆக அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம். எனவே, எங்களுக்கு கூடுதலாக பி.சி.ஆர். உபகரணங்களை அளிக்க வேண்டும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க தேவையான உத்தரவுகளை தமிழக அரசு பிறப்பித்துள்ளது. அனைத்து தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலும் கபசுரக் குடிநீரை இலவசமாக அரசு வழங்குகிறது.

கொரோனா தடுப்புப் பணியில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஜிங்க் மற்றும் மல்டி வைட்டமின் மாத்திரைகள் வழங்க உத்தரவிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. மருந்து உற்பத்திக்கு சிறப்பு ஊக்கத்தொகை அறிவித்ததன் மூலம் 42 நிறுவனங்கள் தயாரிப்புப் பணியை மேற்கொண்டுள்ளது. விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு போக்குவரத்து மானியத்தை அளிக்க வேண்டும். இதன்மூலம் விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பாகும். இதுபோன்ற நிலையில் சில கோரிக்கையை முன் வைக்கிறேன்.

மருத்துவ உபகரணங்களை வாங்குவதற்கான நிதியை தங்களிடம் காணொலிக் காட்சி மூலமாகவும், கடிதங்கள் மூலமாகவும், கோரியிருக்கிறேன். அந்தத் தொகையை உடனடியாக அனுமதிக்க வேண்டும். ஜி.எஸ்.டி.பி.யில் நிதிப்பற்றாக்குறை அளவை 3 சதவீதத்தில் இருந்து 2019–2020 மற்றும் 2020–2021ஆம் ஆண்டில் 4.5 சதவீதமாக உயர்த்த வேண்டும். 2019–2020ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 33 சதவித கூடுதல் கடன் அளவை, 2020–2021ஆம் ஆண்டுக்கும் நீட்டிக்க வேண்டும்.

கடந்த டிசம்பர், ஜனவரிக்கான ஜி.எஸ்.டி இழப்பீட்டுத் தொகையை உடனடியாக அனுமதிக்க வேண்டும். ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியத்தில் 50 சதவீதத்தை உடனே வழங்க வேண்டும். தடுப்பு உபகரணங்களை வாங்குவதற்காக தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து 1,000 கோடி ரூபாயை மானியமாக உடனடியாக தமிழகத்துக்கு அளிக்க வேண்டும். உணவு தானியங்களை தமிழகத்திற்கு கூடுதலாக வழங்க வேண்டும். சி.எம்.ஆர். என்ற செல் அரவை மானியத்தொகை ரூ.1,321 கோடியை வழங்க வேண்டும். எரிசக்தி பிரிவிற்கு நிவாரணத் தொகுப்பை அறிவிக்க வேண்டும். தமிழகத்தில் அதிக அளவு சிறு, குறு தொழிற்சாலைகள் உள்ளது. சிறு,குறு தொழில்துறையினர் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளதால் அவர்கள் ஜி.எஸ்.டி வருமான வரி செலுத்த 6 மாதம் அவகாசம் அளிக்க வேண்டும்.

நோய்த் தொற்றினால் உயிரிழந்தவர்களின் உடலை அடக்கம் செய்வதைத் தடுக்கும் செயலை, குற்றமாக்கி கடும் தண்டனை வழங்க அரசு அவசரச் சட்டம் பிறப்பித்துள்ளது!

தமிழ்நாடு அரசினால், அறிவிக்கை செய்யப்பட்ட தொற்று நோயினால் (Notified disease) உயிரிழந்தவர்களின் உடல்களை கண்ணியமான முறையில் அடக்கம் / தகனம் செய்வதைத் தடுக்கும் செயலையும், தடுக்க முயற்சிப்பதையும் தமிழ்நாடு பொது சுகாதார சட்டத்தின்படி குற்றமாக்கி கடுமையாக தண்டனை வழங்கும் நோக்கில் மாண்புமிகு அம்மாவின் அரசு அவசரச் சட்டம் ஒன்றை பிறப்பித்துள்ளது.

இந்த அவசரச் சட்டத்தின்படி, அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட தொற்று நோயினால் (Notified disease) உயிரிழந்தவர்களின் உடலை கண்ணியமான முறையில் அடக்கம் / தகனம் செய்வதைத் தடுப்பதும், தடுக்க முயற்சிப்பதும் குற்றமாக்கப்பட்டு, அத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939, பிரிவு–74இன்படி அபராதம் உட்பட குறைந்தபட்சமாக ஓராண்டு சிறைத் தண்டனையும் அதிகபட்சமாக மூன்றாண்டுகள் வரை சிறை தண்டனையும் விதிக்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 16.04.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலமாக ஆய்வு செய்த பின்னர், செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி.

இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முன்னெச்சரிக்கையாக அனைத்து மருத்துவ உபகரணங்களையும் வாங்கி கையிருப்பில் வைத்திருக்கிறது!

அனைத்து ஊடக நண்பர்களுக்கும், அனைத்து பத்திரிகை நண்பர்களுக்கும் எனது முதற்கண் வணக்கம்...,

இன்றைய தினம் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கொரோனா வைரஸ் தடுப்புப் பணியை அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது. மேலும், அரசு அறிவித்த அனைத்து அறிவிப்புகளும் மாவட்ட நிருவாகம் எவ்வாறு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்ற ஆய்வுப் பணிகளும், மேற்கொள்ளப்பட்டன. இன்றைக்கு அரசால் அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளும் முழுமையாக மாவட்ட நிருவாகம் பின்பற்றி இந்த வைரஸ் தடுப்புப் பணியில் ஈடுபட்டிருக்கின்றது. இன்றைய தினம் மேற்கொள்ளப்பட வேண்டியது நோய் தடுப்புப் பணிதான். அதற்குத்தான் எங்களுடைய அரசு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. பாரதப் பிரதமர் அவர்களும் காணொலிக் காட்சி மூலமாக அனைத்து முதலமைச்சரோடு தொடர்பு கொண்டு ஆலோசனை நடத்திய போதும், இதே கருத்தைத்தான் வலியுறுத்தினார்கள். அனைத்து மாநில முதலமைச்சர்களும், இந்த கொரோனா வைரஸ் தடுப்புப் பணியை விரைந்து மேற்கொள்ள வேண்டும். மேலும் பரவாமல் தடுப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தினார்கள். அந்த அடிப்படையிலே மருத்துவ வல்லுநர்கள், மத்திய சுகாதாரத்துறை, உலக சுகாதார அமைப்பு சொல்லுகின்ற கருத்தின் அடைப்படையிலே, அம்மாவுடைய அரசு இந்த நோய் தடுப்புப் பணிகளை விரைந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இன்றைக்கு மாண்புமிகு அம்மாவுடைய அரசு எடுத்த நடவடிக்கை காரணமாக நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இரண்டு மூன்று நாட்களாக, தொலைக்காட்சி வாயிலாக, செய்தி வாயிலாக வெளியிடப்பட்ட செய்திகள் அனைத்தும் பத்திரிகை நண்பர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும் தெரியும். இன்றைக்கு இந்த நோயினுடைய தாக்கம், வீரியம்

அரசு எடுத்த நடவடிக்கை காரணமாக நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு அரசு நோய் தடுப்புப்பணியில் மேற்கொள்ளப்பட்ட விவரங்களை ஊடகங்கள் வாயிலாக, பத்திரிகைகள் வாயிலாக பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். முதன் முதலாக இந்த நோய் தடுப்புப்பணி மேற்கொள்ள மருத்துவ உபகரணங்கள் வாங்க பணி ஆணை வழங்கப்பட்ட நாள் 31.01.2020. மருந்துகள் வாங்க பணி ஆணை வழங்கப்பட்ட நாள் பிப்ரவரி முதல் வாரம். இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூ.146 கோடி. விமான நிலையங்கள் பரிசோதனை செய்யும் பணி துவங்கப்பட்ட நாள் 23.01.2020. தமிழ்நாட்டில் முதன்முதலில் கொரோனா நோய்த் தொற்று கண்டறியப்பட்ட நாள் 07.03.2020. இன்றைக்கு திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் பூந்தமல்லியில் தனிமைப்படுத்தும் வசதிகள் துவங்கப்பட்ட நாள் 15.03.2020. பொது இடங்களில் கூடுவதைத் தவிர்க்கவும், எல்லையோர மாவட்டங்களில் திரையரங்குகள், மால்கள் மூட உத்தரவிடப்பட்ட நாள் 15.03.2020 மற்றும் பள்ளிகள், தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டதும் 15.03.2020. ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு வரும்போது நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கையாக மாநில எல்லைகளில் பரிசோதனை துவக்கப்பட்ட நாள் 16.03.2020. தமிழ்நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு 23.03.2020 அன்று தமிழக அரசால் அறிவிக்கப்பட்டது. மத்திய அரசுக்கு முன்பாகவே மாநில அரசு இந்த தடை உத்தரவை பிறப்பித்தது. அதன் பின்னர் மத்திய அரசு 24.03.2020 அன்று அறிவிப்பில் 21 நாட்கள் ஊரடங்கு உத்தரவை அமல்படுத்த வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு உத்தரவு பிறப்பித்தது. அதையும் மாநில அரசு நடைமுறைப்படுத்தியது. அதேபோல, நோய் தடுப்புப்பணியை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக 12 முறை என்னுடைய தலைமையில் ஆய்வுக் கூட்டங்கள் நடைபெற்றன. மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன், இன்று வரை மூன்று முறை காணொலிக்காட்சி மூலமாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலேயும் கொரோனா வைரஸ் தடுப்புப்பணி எவ்வாறாக மேற்கொள்ளப்பட வேண்டும், எப்படி செயல்படுத்த வேண்டும். இந்த நோய் வேகமாக பரவுவதைத் தடுப்பதற்கு அரசு அறிவிக்கின்ற அறிவுரைகளை, ஆலோசனைகளை ஏற்று நீங்கள் செயல்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அதேபோல, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இரண்டு முறை அனைத்து மாநில முதலமைச்சர்களோடு தொடர்பு கொண்டு பேசினார்கள். என்னிடத்திலும் தொடர்பு கொண்டு தமிழ்நாடு அரசின் சார்பாக முதலமைச்சர் என்ற முறையிலே என்னிடம் காணொலிக்காட்சி மூலமாக தொடர்பு கொண்டு ஆலோசனை செய்து, ஆய்வு மேற்கொண்டார்கள். அதுமட்டுமில்லாமல், இந்த தடுப்புப் பணி துரிதமாக நடைபெற வேண்டும் என்பதற்காக 12 குழுக்கள் அமைக்கப்பட்டது. அந்த 12 குழுக்கள் அமைக்கப்பட்டபிறகு, ஒவ்வொரு குழுவிற்கும் தனித்தனி பணி ஒதுக்கப்பட்டது. இந்த 12 குழுக்களுமே அரசு செயலாளர் அந்தஸ்தில் நியமிக்கப்பட்டது. ஒவ்வொரு பணிக்குழுவிற்கும் 3 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இடம் பெற்றுள்ளார்கள். இந்த குழுவினுடைய பணி முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் இரண்டு முறை என்னுடைய தலைமையிலே நடைபெற்றது. இதில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர், வருவாய்த்துறை அமைச்சர்கள் ஆகியோரும் கலந்து கொண்டார்கள். அதேபோல தலைமைச் செயலாளர் தலைமையில் இன்றைக்கு Task Force என்ற ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. பலமுறை காணொலி காட்சி வாயிலாக ஆய்வு நடத்தியுள்ளார். அதோடு, மாவட்ட ஆட்சித்தலைவர்களோடு மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்கள் தொடர்ந்து நான்கு முறை ஆய்வுப் பணியினை மேற்கொண்டார். அதோடு அனைத்து மத தலைவர்களுடன், தலைமைச் செயலகத்தில், தலைமைச்

செயலாளர் அவர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசுக்கு நீங்கள் முழுஒத்துழைப்பு நல்க வேண்டும். மத்திய, மாநில அரசால் போடப்பட்ட அந்த உத்தரவுகளை நடைமுறைப்படுத்த அனைத்து மத தலைவர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று வழியுறுத்தப்பட்டது. அதில் அனைத்து மத தலைவர்களும் அரசுக்கு ஒத்துழைப்பு நல்குவதாக உறுதி அளித்தார்கள். அதே போல, இந்த நோய் தடுப்புப்பணி, நோய் பரவலைத் தடுப்பதற்காக 19 பேர் கொண்ட மருத்துவக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஏனென்றால் இது முழுக்க முழுக்க மருத்துவத் துறையைச் சார்ந்தது. மருத்துவர்களின் ஆலோசனையைப் பெற்றுதான் இந்த தடுப்புப்பணிகளை அரசு மேற்கொள்ள வேண்டும். அந்த குழுவின் ஆலோசனைக் கூட்டம் என்னுடைய தலைமையிலே நடைபெற்றது. அதில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர்களும், உயர் அதிகாரிகளும், மருத்துவர்களும் கலந்து கொண்டார்கள். ஒரு சில மருத்துவர்களிடம் காணொலிகாட்சி மூலமாகவும் ஆலோசனைகள் பெறப்பட்டது. நேரடியாகவும் சில மருத்துவர்கள் ஆலோசனைகளை வழங்கினார்கள். அவர்கள் கூறிய கருத்தினையும் இந்த அரசு உள்வாங்கிக் கொண்டது. அந்த மருத்துவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையிலே அரசால் இன்றைக்கு இந்த தடுப்புப்பணிகளை, நோய் பரவாமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதே போல நோய் பரவுதலை தடுப்பதற்காக, தடுப்புப்பணிகளை மேற்கொள்வதற்காக அரசு மார்ச் மாத இறுதியில் 530 மருத்துவர்கள், 1,000 செவிலியர்கள், 1,500 ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்களை நியமித்து, மருத்துவப் பணியில் ஈடுபடுத்தியது. அதேபோல 334 சுகாதார ஆய்வாளர்கள், 2,715 பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் 13.04.2020 அன்று நியமிக்கப்பட்டார்கள். இந்த நோய் மிகப்பெரிய சவாலாக இருக்கின்றது. ஆகவே எளிதாக பரவக்கூடிய இந்த நோயை கட்டுப்படுத்துவதற்காக தேவையான பணியாளர்களை அரசு நியமித்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல, எல்லா மாவட்டங்களிலும் இந்த நோய் பரவுதலை தடுப்பதற்கும், சிகிச்சை பெறுகின்ற நோயாளிகளுக்கு உரிய முறையில் சிகிச்சை அளிக்கப்படுகின்றதா என்பதை கவனிப்பதற்கும், அதோடு அதில் பணிபுரிகின்ற மருத்துவர்களுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றனவா என்பதையும் கண்டறிவதற்காக 12 மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்த 12 குழுக்களிலும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் அந்தஸ்து உள்ள அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அந்தப் பணியும் துவக்கப்பட்டு, அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களிலே அந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் அதிகாரிகள் சென்று அந்தப்பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் மருத்துவ உபகரணங்கள் நம்மிடத்தில் எவ்வளவு இருக்கின்றது என்ற விபரத்தையும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அரசிடத்திலும், தனியாரிடத்திலும் சேர்த்து இன்றைக்கு நம்மிடம் 3,371 வென்டிலேட்டர்கள் இருக்கின்றன. 2,501 வென்டிலேட்டர்கள் அரசிடம் இருக்கின்றது. தனியார் மருத்துவமனையில் உள்ள வென்டிலேட்டர்களின் எண்ணிக்கை 870. மும்மடிப்பு முகக் கவசங்களின் எண்ணிக்கை 65 இலட்சம் இருக்கிறது. N–95 முகக் கவசங்கள் 3 இலட்சம் இருக்கின்றது. PPE முழு உடல் பாதுகாப்பு கவசங்கள் 2 இலட்சம் இருக்கின்றது. இதெல்லாம் நமக்குத் தேவையான அளவிற்கு அரசின் கையிருப்பில் இருக்கின்றது. ஆய்வக உபகரணங்கள் PCR தொகுப்பு ICMR மூலமாக 20,000, டாடா நிறுவனம் 40,000 கொடுத்திருக்கிறார்கள், TNMSC–யில் 1,35,000 என மொத்தம் 1,95,000 PCR Kit நம்மிடம் இருக்கிறது. இவற்றில், 68,000 PCR Kit அனைத்து மாவட்டங்களுக்கும் பரிசோதனைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இப்பொழுது தேவையான அளவிற்கு நம்மிடம் இருக்கிறது. ஒரு வேளை, அமெரிக்கா, இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகளைப் போல நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தால், அதற்குத் தேவையான உபகரணங்கள் தேவை.

அதற்காகத் தான் எங்களுடைய அரசு கொள்முதல் செய்ய ஆணை பிறப்பித்திருக்கிறது. 2,571 வென்டிலேட்டர்கள் புதிதாக வாங்குவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறது. PCR தொகுப்பு 35,000 பெறுவதற்கும், துரிதமாக பரிசோதனை மேற்கொள்வதற்காக 5 இலட்சம் Rapid Testஐ வாங்குவற்கும் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இதை எதற்காக சொல்கிறேனென்றால், சில எதிர்க்கட்சித் தலைவர்கள் இவர்கள் இப்பொழுது தான் வென்டிலேட்டர்கள் வாங்குவதற்கு முயற்சி செய்கிறார்கள், இப்பொழுது தான் PCR வாங்குவதற்கு முயற்சி செய்கிறார்கள், இப்பொழுது தான் Mask வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று விமர்சனம் செய்கின்றார்கள். அது தவறு. ஏற்கெனவே அரசிடம் போதுமான அளவு இருக்கின்றது. இந்த நோய் ஆரம்பமானவுடனேயே முன்னெச்சரிக்கையாக, நமக்கு தேவையானவற்றை வாங்கி கையிருப்பில் வைக்கப்பட்டுவிட்டது. நான் ஏற்கெனவே கூறியது போல வென்டிலேட்டர்கள், மாஸ்க், PCR Kits போன்ற அனைத்தும் தேவையான அளவு இருக்கின்றது. ஒருவேளை, வெளிநாட்டில் வளர்ந்த நாடுகளில் ஏற்பட்ட அந்த நோய்கள் அதனால் ஏற்பட்ட உயிரிழப்பு நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடாது என்பதற்காகத் தான் முன்னெச்சரிக்கையாக இவைகளையெல்லாம் வாங்கலாம் என்று மருத்துவக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசால், வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கின்றேன். அதுமட்டுமல்ல, நாம் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்தோம். ஆகவே கொரோனா வைரஸ் பாதிப்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்தால், அவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள் தேவை. அதைத்தான் மாண்புமிகு பாரதப் பிரதமர் காணொலிக் காட்சியின்போது எங்களுக்கு வென்டிலேட்டர்கள், மாஸ்க், PCR Kits போன்றவைகள் தேவை, அதே போல Rapid Test Kits உடனடியாக தேவை, அவைகளை வழங்க வேண்டும், விரைந்து பரிசோதனை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் தான் அத்தனை கோரிக்கைகளையும் வைத்திருக்கிறோம். தமிழ்நாடு அரசு தான், இந்தியாவிலேயே, முன்னெச்சரிக்கையாக அனைத்து உபகரணங்களையும் வாங்கி கையிருப்பில் வைத்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல தமிழ்நாட்டில் தான் பரிசோதனை மையங்களும் இன்றைக்கு அதிகரித்திருக்கின்றது. தமிழகத்தில் அரசு சார்பாக 17 ஆய்வக பரிசோதனை மையங்கள், தனியார் சார்பாக 10 என மொத்தம் 27 ஆய்வக பரிசோதனை மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த 27 மையங்களிலும் நாள் ஒன்றுக்கு பரிசோதனைத் திறன் 5,590 நபர்களுக்கு பரிசோதனை செய்யலாம். இன்றைக்கு கொரோனா சிகிச்சை அளிக்கும் அரசு சார்பாக மருத்துவமனைகளின் எண்ணிக்கை 22. கொரோனா சிசிக்சைக்கான தனிமைப்படுத்தப்பட்ட பிரிவுகளைக் கொண்ட அரசு மருத்துவமனைகளின் எண்ணிக்கை 101. கொரோனா சிசிக்சைக்கான தனிமைப்படுத்தப்பட்ட பிரிவுகளைக் கொண்ட தனியார் மருத்துவமனைகளின் எண்ணிக்கை 154. இந்த நோயின் அறிகுறி உள்ளவர்கள், விருப்பப்பட்டால், தனியார் மருத்துவமனைகளிலும் சேர்ந்து பரிசோதனை செய்துகொண்டு அவர்கள் குணமடையலாம். தனிமைப்படுத்தப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை 29,074. தீவிர சிகிச்சைப் பிரிவுப் படுக்கைகளின் எண்ணிக்கை 2,521. தீவிர தனிமைப்படுத்தலில் உள்ள நபர்களின் எண்ணிக்கை 34,841. தீவிர தனிமைப்படுத்தல் காலத்தை முடித்தவர்களின் எண்ணிக்கை 72,326. பரிசோதனை செய்யப்பட்டவர்களுடைய எண்ணிக்கை 17,835. பரிசோதனை முடிவுகள் பெறப்பட்டவை 16,452. பரிசோதனை முடிவுகள் வரவேண்டியவை 1,383. நேற்று முன்தினம் வரை நோய் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுடைய எண்ணிக்கை 1,204 இருந்தது. நேற்று பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 38, மொத்த எண்ணிக்கை 1,242 ஆக இருந்தது.

இன்றைய தினம் இதுவரையில் வந்த தகவலின்படி பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 25. இதுவரை தமிழகத்தில் நோய் தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 1,267. ஆக, நாளுக்கு நாள், இந்தத் தொற்று நோயை அரசு கட்டுப்படுத்தி இன்றைக்கு 25 பேருக்குத் தான் positive வந்திருக்கிறது. நோய்த் தொற்று சந்தேகத்தின் பேரில் தனிமைப்படுத்தப்பட்ட வார்டுகளில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,876. சிகிச்சைக்குப் பின் ஏற்கெனவே வீடு திரும்பியவர்களின் எண்ணிக்கை 118 பேர், இன்றைக்கு 62 பேர் வீடு திரும்புகிறார்கள், ஆக மொத்தம் 180 பேருக்கு positive வந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, நம்முடைய மருத்துவர்களால் உரிய முறையிலே சிகிச்சை அளிக்கப்பட்டு 180 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளார்கள். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று வரை 14, இன்றைக்கு 1, மொத்தம் 15 பேருக்கு உயிரிழப்பு ஏற்பட்டிருக்கின்றது.

கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் (Containment Zone) எண்ணிக்கை 558. கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளிலுள்ள குடும்பங்களில், பரிசோதனை செய்யப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 22,51,371. இதில் பரிசோதனை செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 85,07,064. நம் மாநிலத்தில் கொரோனா நோய் தடுப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த அரசு மருத்துவர்கள் 6 பேர், தனியார் மருத்துவர்கள் 5 பேர், தூய்மைப் பணியாளர் 1, சுகாதாரப் பணியாளர் 1 என மொத்தம் 13 நபர்களுக்கு நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கிறது. புதுடெல்லியில் 24 மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியார்களுக்கு இந்த நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது. மும்பையில் மட்டும் 100 மருத்துவர்கள் மற்றும் சுகாதரரரப் பணியாளர்கள் இந்த நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பிற நாடுகளைப் பொறுத்தவரை சீனாவில் 3,300 மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் மருத்துவ சிகிச்சை அளிக்கின்றபொழுது இந்த நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கிறது. இத்தாலியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, வளர்ந்த நாடுகளிலேயே இவ்வளவு பேர் இந்தத் தொற்று நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நோய் ஏற்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

நோயால் பாதிக்கப்பட்ட மருத்துவர்கள் மற்றும் சுகாதார பணியாளர்களுக்கு நோய் எதிர்ப்பு மருந்துகள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கக்கூடிய சத்தான உணவு வகைகள் வழங்கப்பட்டு அவர்களுக்கு உயர்தர சிகிச்சை தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது.

அதேபோல, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் எல்லா அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1,000 ரூபாய் கொடுத்து கொண்டு இருக்கிறோம். இதுவரைக்கும் சுமார் 97.09 சதவிகிதம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 1,000 ரூபாயும் அந்த குடும்ப அட்டைக்கு தேவையான அரிசியும் வழங்கப்பட்டு உள்ளது. இதில் 1,000 ரூபாய் மட்டும் 97.09 சதவிகிதம் பேர்களுக்கு கொடுத்தாகிவிட்டது. நிவாரண பொருட்கள் 84.25 சதவிகிதம் கொடுக்கப்பட்டு விட்டது. எஞ்சியுள்ளவர்களுக்கு 2 நாட்களில் கொடுத்துவிடுவோம்.

அதேபோல தொழிலாளர்களுக்கு நிவாரணமாக, ரொக்கம் நிவாரணம் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு கொடுத்து கொண்டு இருக்கிறோம். அதேபோல வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு அவர்களுக்கு வேண்டிய அரிசி, பருப்பு, எண்ணெய் எல்லாம் வழங்கி கொண்டு இருக்கிறோம். ஏனென்றால், அவர்கள் ஒவ்வொரு பகுதியிலும் இருக்கிறார்கள். அவர்களை கண்டுபிடித்து கொடுப்பது சிரமமாக இருக்கிறது. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அவர்களுடைய வங்கி கணக்கிலே செலுத்தப்படுகிறது. இதர தொழிலாளர்களுக்கு 8.60 இலட்சம் பேர் வேண்டும் என்று கேட்டார்கள். அவர்களுக்கும் இந்த நிவாரணத் தொகை அரசு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளிமாநில தொழிலாளர்கள் 311 இடங்களில் தங்க வைத்து இருக்கிறோம். இன்றைக்கு வரைக்கும் அந்த முகாம்களில் 13,407 பேர் இடம் பெற்றிருக்கிறார்கள். சமுதாயக் கூடங்களின் எண்ணிக்கை 1,379. அதில் தினசரி பயன்பெறுவோர் எண்ணிக்கை சுமார் 1.80 இலட்சம் பேர். இதில் யார் யாரெல்லாம் இடம் பெற்றிருக்கிறார்கள் என்றால், மாற்றுத்திறனாளிகள் 14,244 பேர், முதியோர் 26,836 பேர், 54,238 ஆதரவற்றோர் மற்றும் 69,682 இதர மக்களுக்கும் உணவு வழங்கப்பட்டு வருகின்றன. ஆகவே, யாரும் பட்டினி கிடக்கவில்லை. யார் யாருக்கெல்லாம் உணவு தேவையோ அவர்களுக்கு எல்லாம் அரசு முறையாக உணவு வழங்கி வருகிறது.

இதர மாநிலத்தில் உள்ள தமிழக தொழிலாளர்கள் நம் மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்கு சென்று தொழில் புரிந்து வருபவர்கள் 10,819 பேர் இருக்கிறார்கள்.

“பொதுமக்களுக்கு தடையில்லாமல் தங்களுடைய பகுதிகளிலேயே காய்கறிகளை விற்பனை செய்ய வேண்டும் என்று அரசு அறிவித்து, அதை இன்றைக்கு அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. சென்னை மாநகராட்சியை பொறுத்தவரைக்கும், காய்கறி விநியோகம் செய்ய 1,100 நடமாடும் காய்கறி கடைகள் அமைக்கப்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் 4,900 தள்ளுவண்டிகள் மூலமாக காய்கறி விற்பனை தொடங்கப்பட்டுள்ளது. அதனால் சென்னை மாநகர மக்கள் மார்க்கெட்டிற்கு செல்லாமல் தாங்கள் இருக்கும் பகுதிக்கே இந்த நடமாடும் வாகனங்களின் மூலமாக, தள்ளுவண்டி மூலமாக வருகின்ற காய்கறிகளை வாங்கிக் கொள்ளவும்.”

அவர்களுக்கு தேவையான உதவிகளை அந்தந்த மாநில அரசுகளின் உதவியுடன் செய்யப்பட்டு வருகிறது.

அதேபோல, அங்கன்வாடி பயனாளிகளுக்கு சத்துமாவு (Dry Ration) 01.04.2020 முதல் 14.04.2020 வரை கொடுத்திருக்கிறோம். இரண்டாவது முறையாக வழங்க இருக்கிறோம். 6 மாதம் முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் 24,99,428, பேறுகால பெண்கள் 7 இலட்சத்து 256, வளரிளம் பெண்கள் 596 என மொத்தம் பயனாளிகள் 32 இலட்சத்து 310. இந்த பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட சத்துமாவு 8 ஆயிரத்து 303 மெட்ரிக் டன்.

உணவு பொருட்கள் பெற்று பயன்பெறும் 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் எண்ணிக்கை 11,45,086. இன்றைக்கு இதுவரைக்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு பெறப்பட்ட தொகை 134.64 கோடி ரூபாய். பல்வேறு தரப்பிலிருந்து கொடுத்திருக்கிறார்கள், நிறுவனங்கள், பொதுமக்கள் கொடுத்திருக்கிறார்கள், அவர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வாரி வழங்கிய கொடை வள்ளல்களுக்கும், பொதுமக்களுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும், பத்திரிகை மற்றும் ஊடகத்தின் வாயிலாக எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளுடைய பிரச்சினை – விவசாயிகளுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று அம்மாவுடைய அரசு உத்தரவு பிறப்பித்து, வேளாண் துறையை சேர்ந்த அதிகாரிகள் மூலம் வேளாண் பெருமக்களுக்கு தேவையான உதவிகளை அரசு செய்து கொண்டு இருக்கிறது.

விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய காய்கறிகள் மற்றும் பழங்கள், ஒரு குறிப்பிட்ட காலத்தில் தான் அதனை வெளியில் வைத்திருக்க முடியும். அந்த குறிப்பிட்ட காலத்திற்குள் அதனை விற்பனை செய்ய முடியவில்லை என்றால், அந்த காய்கறி பழங்கள் எல்லாம் அழுகி, அவர்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி விடும். அதனால் விவசாய பெருங்குடி மக்களால் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறி பழங்களை குளிர்பதன கிடங்குகளில் வைத்து கொள்ளலாம் என்று அறிக்கை வெளியிட்டோம். தமிழகத்திலே 138 குளிர்பதன கிடங்குகள் இருக்கின்றன. அதன் மொத்த கொள்ளளவு 13,600 மெட்ரிக் டன் அதில் இருப்பு வைக்கலாம். இன்றைய தினம் 4,371 மெட்ரிக் டன் தான் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அதையெல்லாம் விவசாய பெருங்குடி மக்கள் எல்லாம் பயன்படுத்தி, தங்கள் விளைநிலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறி பழங்களை அவர்கள் வேண்டுமென்றால் இந்த குளிர்பதன கிடங்குகளில் வைத்துக் கொள்ளலாம். அதற்கு வாடகை கிடையாது. விலை உயர்கின்ற போது அதனை எடுத்து விற்பனை செய்து கொள்ளலாம்.

விவசாய நிறுவனங்கள் 11 கிடங்குகளையும், வியாபாரிகள் 93 கிடங்குகளையும், வேளாண் துறையின் 427 கிடங்குகளின் மொத்த கொள்ளளவு 3.07 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். கூட்டுறவுத் துறையில் விளைபொருட்களை சேமிக்க 3,879 கிடங்குகளின் கொள்ளளவு 5 இலட்சம் மெட்ரிக் டன். இங்கு விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருட்களை அங்கே அடுக்கி வைத்து குறைவான வட்டியில் 50 சதவிகிதம் கடன் பெற்றுக் கொள்ளலாம். 6 மாதத்தில் அதை விற்று அரசினுடைய கடனை திருப்பி செலுத்தலாம். ஏன் என்றால், விவசாயிகள் உற்பத்தி செய்த விளை பொருட்களை தற்போது விற்பனை செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதற்கு அரசு உரிய ஏற்பாடுகளை செய்திருக்கிறது.

பொதுமக்களுக்கு தடையில்லாமல் தங்களுடைய பகுதிகளிலேயே காய்கறிகளை விற்பனை செய்ய வேண்டும் என்று அரசு அறிவித்து, அதை இன்றைக்கு அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. சென்னை மாநகராட்சியை பொறுத்தவரைக்கும், காய்கறி விநியோகம் செய்ய 1,100 நடமாடும் காய்கறி கடைகள் அமைக்கப்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் 4,900 தள்ளுவண்டிகள் மூலமாக காய்கறி விற்பனை

தொடங்கப்பட்டுள்ளது. அதனால் சென்னை மாநகர மக்கள் மார்க்கெட்டிற்கு செல்லாமல் தாங்கள் இருக்கும் பகுதிக்கே இந்த நடமாடும் வாகனங்களின் மூலமாக, தள்ளுவண்டி மூலமாக வருகின்ற காய்கறிகளை வாங்கிக் கொள்ளவும். ஆகவே, பொதுமக்கள் இதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும், வெளியே வராமல் தங்களுக்கு தேவைப்படும் காய்கறிகளை தங்கள் பகுதிகளிலேயே விநியோகம் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

நகராட்சி, பேரூராட்சி, தோட்டக்கலைத் துறை மூலமாக இன்றைக்கு வாகனங்களின் வாயிலாக தமிழ்நாடு முழுவதும் 4,500 வாகனங்கள் மூலமாக தினமும் 2,200 மெட்ரிக் டன் காய்கறிகள் விநியோகம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு முழுவதும் இந்த திட்டத்தை நாங்கள் அமல்படுத்தி இருக்கின்றோம். கூட்டுறவுத்துறை மூலமாக 361 வாகனங்களில் காய்கறி விநியோகம் செய்யப்படுகிறது. இதில் 42 வாகனங்கள் மூலம் மலை கிராமங்களிலும் காய்கறி கொண்டு போய் விற்பனை செய்து கொண்டு இருக்கிறோம்.

சி.எம்.டி.ஏ. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் 154 வாகனங்கள் மூலமாக சராசரியாக தினமும் 50 மெட்ரிக் டன் காய்கறிகளை அந்தந்த பகுதி மக்களுக்கு அந்தந்த இடங்களிலேயே கொண்டு போய் காய்கறிகள் வழங்கப்பட்டு வருகிறது.

நாளொன்றுக்கு சராசரியாக 6,115 மோட்டார் வாகனங்கள் மற்றும் 4,900 தள்ளு வண்டிகள் மூலம் காய்கறி விநியோகம் 3,550 மெட்ரிக் டன் காய்கறிகளை இன்றைக்கு பொதுமக்களுக்கு எளிதாக அவர்கள் வசிக்கும் இடங்களிலேயே அரசு விற்பனை செய்து வருகிறது. அதுமட்டுமல்ல, இன்றைக்கு விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள் பழங்கள் வீணாகாமல் உரிய முறையிலே அவர்களுக்கு அந்த வருமானத்தை ஈட்டக்கூடிய அளவிற்கு அரசாங்கமே உதவி செய்து, விவசாயமும் காப்பாற்றப்படுகிறது, இன்னொரு பக்கம் பொதுமக்களுக்கு எவ்வித சிரமமும் இன்றி தாங்கள் வசிக்கின்ற பகுதிகளிலேயே காய்கறிகள் வழங்கப்பட்டு வருகின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு எதிர்கட்சிகள் எல்லாம் குற்றம் சாட்டுகிறார்கள். காய்கறி விலை உயர்ந்து விட்டது என்று. அது முற்றிலும் தவறு. மிக மிக குறைவான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இன்றைக்கு கத்திரிக்காய் என்ன விலை விற்கின்றது, தக்காளி என்ன விலை விற்கின்றது என்று அன்றாடம் பத்திரிகைகளில் செய்தி கொடுத்து கொண்டு இருக்கிறீர்கள். சென்ற மாதம் வரை தக்காளி 20 ரூபாய்க்கு விற்றது. இப்போது 15 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பெரிய வெங்காயம் 35 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இப்போது 25 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 5 மாதத்திற்கு முன்பு வெங்காயம் 80 ரூபாய்க்கு விற்றது. சென்ற மாதம் உருளை கிழங்கு 30 ரூபாய்க்கு விற்றது, இப்போது 25 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதேபோல கேரட் 40 ரூபாய்க்கு விற்றது 20 ரூபாய்க்கும், பீன்ஸ் 65 ரூபாய் விற்றது 45 ரூபாய்க்கும், கத்திரிக்காய் 25 ரூபாய்க்கு விற்றது 20 ரூபாய்க்கும் தற்போது விற்கப்படுகிறது. ஆக எல்லா காய்கறி விலையும் குறைக்கப்பட்டு இருக்கிறது. நியாயமான முறையில் இன்றைக்கு ஏழை, எளிய மக்கள் வாங்கக்கூடிய அளவிற்கு இன்றைக்கு காய்கறி விலையை கட்டுப்பாட்டுக்குள் அரசு வைத்திருக்கிறது. தேவையான அளவிற்கு அந்தந்த பகுதிகளிலேயே காய்கறிகள் விற்பனை செய்யப்படுகிறது.

அதேபோல இன்றைக்கு உள்ளூர் கட்டுப்பாட்டு பகுதிகளில் (Containment Zone) அரசாங்கமே நேரடியாக அங்கு போய் பொருட்களை வழங்கி கொண்டு இருக்கிறது. ஏன் என்றால் அது எல்லாம் தடை செய்யப்பட்ட பகுதிகளாக இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பகுதி மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களாக இருந்தாலும் சரி, காய்கறிகளாக இருந்தாலும் சரி, இன்றைக்கு கூட்டுறவுத் துறை மூலமாகவும், உள்ளாட்சித் துறை மூலமாகவும், வருவாய்த் துறை மூலமாகவும், வேளாண்மைத் துறை மூலமாகவும், ஆங்காங்கே நேரடியாக போய் வழங்கி கொண்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு பல்வேறு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் விலைவாசி உயர்ந்து விட்டது, தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட காலத்தினால், ஒரு மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்கு வாகனங்கள் வர முடியாத காரணத்தால், அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்ந்துவிட்டது என்று சொல்கிறார்கள். ஆகவே, அத்தியாவசியப் பொருட்களின் விலையை கட்டுப்பாட்டுக்குள் வைக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய அரசு உணவு மற்றும் வேளாண்மைத் துறை செயலாளர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அந்தத் துறையின் மூலமாக துவரம் பருப்பு 500 மெட்ரிக் டன், உளுத்தம் பருப்பு 500 மெட்ரிக் டன், கடலைப் பருப்பு 250 மெட்ரிக் டன், பொட்டுக் கடலை 250 மெட்ரிக் டன், மிளகு 100 மெட்ரிக்

டன், சீரகம் 100 மெட்ரிக் டன், கடுகு 100 மெட்ரிக் டன், வெந்தயம் 100 மெட்ரிக் டன், பூண்டு 250 மெட்ரிக் டன், இவையெல்லாம் வெளி மாநிலத்திலிருந்து விலைக்கு வாங்கி, நம்முடைய மாநிலத்தில் விநியோகம் செய்கிறோம். இதனால், விலை கட்டுப்பாட்டில் இருக்கிறது. இவையெல்லாம், விலையேற்றம் இருக்கக்கூடாது என்பதற்காக அரசு எடுத்த நடவடிக்கைகள் என்பதை ஊடகம் மற்றும் பத்திரிகையின் வாயிலாக பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

144 தடை உத்தரவை மீறி செயல்பட்டவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குற்றவியல் நடைமுறைச் சட்டம் 144ன் கீழ் இதுவரை பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 1,94,995. கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,08,139. பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 1,79,827. 144 தடை உத்தரவை மீறிய காரணத்தினால் அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ.89,23,644. இவையெல்லாம் இந்த அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : உங்கள் தலைமையில் காணொலிக் காட்சி வாயிலாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. மத்திய அரசு தமிழகத்தில் 22 மாவட்டங்களை கொரோனா அதிகமாக பாதித்த மாவட்டங்களாக அறிவித்திருக்கிறார்கள். அந்த மாவட்டங்களில் எந்தமாதிரியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதேபோல மத்திய அரசு அறிவித்துள்ள வழிகாட்டு முறைகள் பின்பற்றுவது குறித்து ஏதாவது முடிவு எடுக்கப்பட்டுள்ளதா ?

பதில் : மத்திய அரசு, Red Zone, Orange Zone, Green Zone என்றும் மூன்று பகுதிகளாக அறிவித்துள்ளது. எந்த மாவட்டத்தில் கொரோனா தொற்று யாருக்குமே ஏற்படவில்லையோ அந்தப் பகுதி பச்சை பகுதி, 1 முதல் 15 பேர் வரை தொற்று ஏற்பட்டு இருந்தால் அந்தப் பகுதி ஆரஞ்சு பகுதி, 15 பேருக்கு மேல் கொரோனா வைரஸ் தொற்று நோய் இருந்தால் அது சிவப்பு பகுதி என்று அறிவித்திருக்கிறார்கள். Red Zone–ல் இப்பொழுது நடைமுறைப்படுத்துவதைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

கேள்வி : Rapid Test Kit–ஐ பொறுத்தவரை மத்திய அரசு order செய்வதற்கு முன்னாலேயே தமிழக அரசு தான் order கொடுத்தது, Rapid Test Kit எப்பொழுது வந்து சேரும் ?

பதில் : பத்திரிகையாளர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும் நன்றாகத் தெரியும். இதை நாம் வெளிநாட்டிலிருந்து விலைக்கு வாங்குகிறோம். இதற்குண்டான தொகை முதல்கட்டமாக எவ்வளவு என்று தெரிவித்தோம், அது செலுத்தப்பட்டு விட்டது. ஆனால் நமக்கு வரவேண்டியது வேறு நாட்டிற்குச் சென்று விட்டது. இருந்தாலும், தொடர்ந்து சீன நாட்டிலிருந்து பெறுவதற்குண்டான முயற்சியை மேற்கொள்கிறோம். அதேபோல மத்திய அரசும் அங்கே தான் order செய்திருக்கிறார்கள். அதுவும் வரவில்லை, இந்தியாவிலே எந்த மாநிலத்திற்கும் வரவில்லை. இருந்தாலும், அனைத்து மாநிலங்களைக் காட்டிலும், தமிழகத்தை பொறுத்தவரை, இன்றைக்கு தொடர்ந்து தொடர்பு கொண்டிருக்கிறோம், விரைவாக எங்களுக்கு Rapid Test Kits கிடைக்க வேண்டும், வேகமாக, துரிதமாக பரிசோதனை செய்ய வேண்டும், மிக மிக அவசியம் என்று கேட்டிருக்கின்றோம். குறுகிய காலத்திலே அவர்கள் அனுப்பி வைப்பதாக தெரிவித்திருக்கிறார்கள்.

கேள்வி : இந்த நோய்த் தொற்று எந்த stage–ல் இருக்கிறது ?

பதில் : இரண்டாம் நிலையில் தான் இப்பொழுது இருக்கிறது. இப்பொழுது நோய்த் தொற்று குறைந்து விட்டது. நேற்றைய தினம் 38 வந்தது, இன்று 25 தானே வந்திருக்கிறது. இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் படிப்படியாக குறைந்துவிடும். நேரடியாக அல்லது contact மூலமாக நோய்த் தொற்று உள்ளவர்களெல்லாம் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு வருகிறார்கள். பரிசோதனைகள் மேற்கொண்டதன் விதமாக, நாளுக்கு நாள் இந்த நோயின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. இன்னும் மூன்று நாட்களில் நாம் zero வந்துவிடும் என்று நாங்கள் எண்ணுகிறோம். எனவே, அதையே நீங்களும் எண்ணுங்கள்.

கேள்வி : எந்தெந்த தொழிற்சாலைகளை திறப்பது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளதா ?

பதில் : மத்திய அரசாங்கத்திடமிருந்து முழுமையாக இன்னும் கிடைக்கவில்லை, tentativeஆகத் தான் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது அதற்கென்று ஒரு Committee அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த committee மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு எந்தெந்த தொழிற்சாலையைத் துவங்குவது என்பதை ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்.

கேள்வி : இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் பாதிப்பட்டவர்களின் எண்ணிக்கையில் இரண்டாவது

நமக்கு என்னவெல்லாம் தேவையென்று தெரிவித்திருக்கின்றோம், அவர்கள் பரிசீலிப்பதாக தெரிவித்திருக்கின்றார்.

கேள்வி : அமைப்பு சாரா தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் போன்று பொதுமக்களுக்கு வழங்கப்படுமா ?

பதில் : ஏப்ரல் 20ஆம் தேதியிலிருந்து 100 நாள் வேலைதிட்டத்தை தொடங்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். அதேபோல, கிராமப்புற மக்கள் வேளாண் பணியை மேற்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டோம். மேலும் உணவு சம்பந்தமான தொழிற்சாலைகளெல்லாம் துவங்கலாம் என்று சொல்லிவிட்டோம். ஏப்ரல் 20ஆம் தேதி எந்த தொழிற்சாலைகளை துவங்கலாம் என்பதற்குண்டான கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த கமிட்டி முடிவு செய்து மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்று, அந்த தொழிற்சாலைகளை துவங்குகின்றபொழுது, ஓரளவு வேலைவாய்ப்பு கிடைக்கும், மக்கள் சிரமமில்லாமல் இருப்பார்கள். அதுமட்டுமல்ல, கூட்டுறவுத் துறையின் மூலமாக குடும்ப அட்டைதாரர்களுக்கு மே மாதத்திற்கு வழங்கக்கூடிய அரிசி, சர்க்கரை, பருப்பு, எண்ணெய் என அத்தனை பொருட்களையும் விலையில்லாமல் இப்பொழுதே கொடுக்கிறோம்.

இடத்தில் இருக்கிறது, நிதி பற்றாக்குறை இருக்கும் இந்த நேரத்தில் ...

பதில் : நீங்கள் இரண்டாம் இடம் என்று சொல்கிறீர்கள். 180 பேரை குணப்படுத்தியிருக்கிறோம். அதை நீங்கள் சொல்வதில்லையே. இன்றைக்கு படிப்படியாக குறைகிறது. இன்றைக்கு 62 பேர் குணமடைந்திருக்கிறார்கள் என்று சொன்னால், இன்னும் 10, 15 நாட்களில் இந்த positive case எல்லாம் negative case ஆக வந்துவிடும். அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு, குணமடைந்து வீடு திரும்புகின்ற காட்சியை நாம் பார்க்கின்றோம். அதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம், ஆனால், குணமடைந்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

கேள்வி : கூடுதல் நிதி கோரி இரண்டு முறை மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு நீங்கள் கடிதம் எழுதியிருக்கிறீர்கள், அதன் நிலை என்ன ?

பதில் : இன்றைக்கு மாநிலப் பேரிடர் நிதிக்காக ரூ.510 கோடி மத்திய அரசு வழங்கியிருக்கிறது. தேசிய சுகாதார இயக்கம் ரூ.312.64 கோடி நமக்கு கொடுத்திருக்கிறது. இவையெல்லாம் மத்திய அரசால் அளிக்கப்பட்டுள்ளது. நம்முடைய மாநிலத்திற்கு தர வேண்டிய நிதியை தரவேண்டும், நோய்த் தடுப்புப் பணியை விரைந்து செயல்படுத்த வேண்டும், இந்த நோய் பரவுவதை தடுப்பதற்காக அரசு எடுக்கின்ற முயற்சிக்கு தேவையானவற்றை வழங்க வேண்டும் என்று பாரதப் பிரதமர் அவர்களுடன் காணொலிக் காட்சி மூலமாக நடைபெற்ற ஆய்விலே நான் பேசியிருக்கின்றேன்.

கேள்வி : விவசாயிகளுக்கு ஏராளமான சலுகைகளை அறிவித்திருக்கிறீர்கள். விவசாயிகள் தங்களது விளைச்சல் பொருட்களை குளிர்பதனக் கிடங்கில் வைக்கும்பொழுது ஒரு நாள், இரண்டு நாட்களே தாங்கக் கூடிய பொருட்களை அதிக நாள் வைக்க முடியாது, உதாரணத்திற்கு பூக்களை இரண்டு நாட்களுக்கு மேல் வைக்கமுடியாது, அந்தச் சூழலில் அதை எப்படி காப்பது ?

பதில் : இன்றைக்கு காய்கறி, பழங்களையெல்லாம் வாங்கி வைத்துக் கொள்ளலாம். ஆனால், பூக்களை வைக்க முடியாது. அதற்குத் தான் வேளாண் துறையின் மூலமாக, வேளாண் துறை செயலாளர் வாசனை திரவியங்கள் உற்பத்தி செய்பவர்களைத் தொடர்பு கொண்டு அந்த வாசனை திரவியங்கள் தயாரிப்பவர்களுடன் பேசி அவர்கள் இப்பொழுது அந்தப் பூக்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி : விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்றது.

பதில் : பேரிடர் என்றால் கஜா புயலில் ஒரு பகுதி தான் பாதித்தது. இது தமிழ்நாடு முழுவதும் பாதித்திருக்கிறது. ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்கே தேவையான நிவாரணம் வழங்கவேண்டிய சூழ்நிலையிலே அரசு இருக்கின்றது. அரசுக்கு உண்டான நிதியைப் பொறுத்து வழங்கப்படும்.

கேள்வி : மத்திய அரசிடம் நாம் 9,000 கோடி ரூபாய் கேட்டிருக்கின்றோம். உடனடியாக நிதியாக 1,000 கோடி ரூபாய் விடுவிக்க கேட்டிருக்கிறீர்கள். ஆனால் 510 கோடி ரூபாய் SDR fund ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கக்கூடியது. அதைத்தான் இப்போது release செய்திருக்கிறார்கள். கோரிய தொகை இன்னும் வரவில்லை, அதற்கு தமிழக அரசு வலியுறுத்துமா.

பதில் : ஏற்கெனவே காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடன் பேசுகின்ற போது, தமிழ்நாட்டை நிலைமையை தெரிவித்துள்ளேன். கொடுக்கின்ற இடத்திலே அவர்கள் இருக்கின்றார்கள். பெறுகின்ற இடத்திலே நாம் இருக்கின்றோம். ஆகவே அரசு தேவையான நிதியை நாம் கோரி இருக்கின்றோம்.

கேள்வி : மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள் தொடர்ந்து இந்த நேரத்தில் கடுமையாக பணி செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு....

பதில் : நான் ஏற்கெனவே அறிவித்துவிட்டேன். அவர்களுக்கு ஒரு மாத சம்பளம் சிறப்பு ஊதியமாக வழங்கப்படும். யாராவது பாதிக்கப்பட்டால் அவர் வேலையில் இருக்கும் போது என்ன சம்பளம் பெற்றார்களோ, அது அப்படியே வழங்கப்படும். அதோடு 2 இலட்சம் ரூபாய் கூடுதலாக வழங்கப்படும்.

அதுமட்டுமல்ல இங்கே பத்திரிகையாளர்கள், ஊடக நண்பர்கள் வந்திருக்கிறீர்கள். நீங்கள் எல்லாம் செய்தி சேகரிக்க வெளியில் செல்கிறீர்கள். செய்தி சேகரிக்க செல்லும் போது, உங்களுக்கு கொரோனா தொற்று ஏதும் ஏற்படக்கூடாது. அப்படி ஏற்பட்டால், உங்களுக்கான மருத்துவ செலவை அரசே ஏற்கும். அதுமட்டுமல்ல, அந்த நோயினால் துரதிஷ்டவசமாக உயிரிழக்க நேரிட்டால் பத்திரிகையாளர்களுக்கும் எங்களுடைய அரசு துணை நிற்கும். பதிவு செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினர்களாக உள்ள அனைவருக்கும் உயிரிழக்க நேரிட்டால் 5 இலட்சம் ரூபாய் அரசு வழங்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : கொரோனாவால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கப்படுமா ?

பதில் : வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் மூலமாக தான் இந்த நோய் பரவி இருக்கிறது. தமிழ்நாட்டில் இந்நோய் உருவாகவில்லை. ஏழைகள் யாரும் பாதிக்கவில்லை.

கேள்வி : ஒரு சில பள்ளி, கல்லூரிகள் கல்விக் கட்டணங்களை செலுத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். இல்லாவிட்டால் அபராதம் விதிக்கப்படும் என்று சொல்கிறார்கள்.

பதில் : அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும். இன்றைக்கு ரம்ஜான் நோன்பு தொடங்க இருக்கிறது. நோன்பு கஞ்சி செய்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருக்கின்ற போது, இஸ்லாம் மக்களின் கோரிக்கை ஏற்று ஒவ்வொரு ஆண்டும் அம்மாவுடைய அரசு நோன்பு கஞ்சி தயாரிப்பதற்காக அரிசி வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் 4,480 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட இருக்கிறது. இந்த ஆண்டு வழங்குவதற்கு முன்பாக காஜி மற்றும் ஜமாத் சேர்ந்த தலைவர்களையும் இன்று மாலை தலைமைச் செயலாளர் அவர்கள் அழைத்து பேச இருக்கிறார்கள். தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ள இந்த காலக்கட்டத்தில், நோன்பு எப்படி கடைப்பிடிக்க வேண்டும் என்றும், திருக்கோயில் ஆகட்டும், பள்ளிவாசல் ஆகட்டும், தேவாலயங்கள் ஆகட்டும், எங்கேயும் நிகழ்ச்சி நடத்தக் கூடாது என்று மத்திய அரசு கூறுகிறது, 144 தடை உத்தரவும் அதைத்தான் அறிவுறுத்துகிறது. இந்த நோன்பை அவர்களும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்பது அரசின் திட்டம். அதற்கு நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையிலே இஸ்லாமிய தலைவர்களை அழைத்து பேச இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் 2,195 பள்ளிவாசல்கள் இருக்கின்றன. அந்த பள்ளிவாசல்கள் மூலமாகத் தான் இந்த நோன்பு கஞ்சி தயாரிக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த சூழ்நிலையில் இப்படிப்பட்ட வாய்ப்பு இல்லாத காரணத்தினால் இன்றைக்கு அனைவரும் மதநல்லிணக்கத்தின் அடிப்படையில் ஏற்கெனவே மதத்தலைவர்களை எல்லாம் அழைத்து நம்முடைய தலைமைச் செயலாளர் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டு அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு நாங்கள் முழு ஒத்துழைப்பு நல்குவோம்

தவறியதை எல்லாம் தவறாமல், நினைவுபடுத்துகிறது தனிமை.

என்று தெரிவித்துள்ளார்கள். அதன் அடிப்படையிலே, இஸ்லாமிய தலைவர்களை அழைத்து இன்று மாலை பேச இருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசின் வழிமுறைகளுக்கு உட்பட்டு ஏப்ரல் 20ஆம் தேதிக்கு பிறகு எந்தெந்த பணிகளை அனுமதிக்கலாம் என்பது பற்றியும், மே 3ஆம் தேதிக்கு பிறகு ஊரடங்கு உத்தரவை எப்படி படிப்படியாக வாபஸ் பெறுவது என்பதை பற்றியும் ஆய்வு செய்து, அதன்பின் அரசிற்கு அறிக்கை அளிக்க நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. எஸ். கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ஏப்ரல் 20ஆம் தேதிக்கு பிறகு எந்தெந்த தொழில்களுக்கு அனுமதி அளிக்கலாம், என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற விவரங்கள் தெரிவிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி : தமிழகத்தில் ஹாட் ஸ்பாட் என்று சொல்லப்படக் கூடிய கொரோனா வைரஸ் அதிகமாக இருக்கும் மாவட்டங்கள் பெரும்பாலும் தொழில் வளர்ச்சியில் முன்னோடியாக இருக்கும் மாவட்டங்களாக இருக்கிறது. இந்த மாவட்டங்களில் 20ஆம் தேதிக்கு பிறகு எந்தமாதிரியான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.

பதில் : நான் ஏற்கெனவே சொன்னேன். மத்திய அரசு வழிகாட்டுதல்படி மாநில அரசு நடவடிக்கை எடுக்கும். சில வழிகாட்டு முறைகள் எல்லாம் மத்திய அரசு அறிவித்துள்ளது. அது பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் வெளிவந்திருக்கிறது. அரசும் அந்த வழிமுறைகளை பின்பற்றி நடக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

❖

வாரத்தில் ஆறு நாட்கள் வேலை!

50 சதவீத பணியாளர்களைக் கொண்டு சுழற்சி முறையில் அரசு ஊழியர்கள் பணி மேற்கொள்ளவேண்டும்!

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்காக அறிவிக்கப்பட்ட ஊரடங்கு–3 காலகட்டத்தில் 33 சதவீத பணியாளர்களைக் கொண்டு அரசுப் பணிகள் நடைபெற்று வருகிறது. சமூக விலகலை கடைப்பிடிப்பதற்காகவும் பொதுப் போக்குவரத்தில் கூட்ட நெரிசலை தவிர்க்கவும், சனிக்கிழமைகளிலும் அரசுப் பணிகள் மேற்கொள்ளும் நடைமுறையை அறிமுகப்படுத்தி 18.05.2020 அன்றிலிருந்து அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் வாரத்தில் ஆறு நாட்கள் வேலை நாட்களாக அறிவித்து அரசு முடிவெடுத்துள்ளது.

மேலும், 18.05.2020 அன்றிலிருந்து தொகுதி – ‘அ’ (Group-A) அலுவலர்கள் மற்றும் அந்த ஊதிய விகிதம் பெறும் அரசுப் பணியாளர்கள் அனைவரும் மற்றும் அனைத்து அலுவலகத் தலைவர்களும் (Head of Offices) பணி நாட்களான ஆறு நாட்களிலும் அலுவலகத்திற்கு வருகை புரிய வேண்டும். மற்ற அலுவலர்களை பொறுத்த வரை 50% பணியாளர்களைக் கொண்டு சுழற்சி முறையில் அரசுப் பணிகளை செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. நோய்கட்டுப்பாட்டு பகுதியில் (Containment Zone) உள்ளவர்களுக்கு இது பொருந்தாது. சுழற்சி முறையில் அலுவலக பணியில் இல்லாத நாட்களில், அலுவலகப் பணித் தொடர்பாக, அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களும் எந்தவொரு மின்னணு முறையிலும் தொடர்பில் இருக்க வேண்டும்.

இந்த முறையினை தலைமை செயலகம் முதல் அரசின் வாரியங்கள், நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், சங்கங்கள் உள்ளிட்ட அனைத்து மாவட்டம் / கள அலுவலகங்கள் உள்ளிட்ட அரசு துறைகள் அனைத்தும் பின்பற்றுதல் வேண்டும்.

உரிய பேருந்து வசதிகள் செய்து தரப்படும். அரசுப் பணியாளர்கள் அனைவரும் இந்த பணிமுறையினை தவறாமல் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

காவல், சுகாதாரம், மாவட்ட நிருவாகம், கருவூலம், உள்ளாட்சி அமைப்புகள் போன்ற துறைகளை பொறுத்த வரையில் அரசாணை நிலை எண். 172, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 25.03.2020ன்படி வெளியிடப்பட்டுள்ள ஆணைகள் பின்பற்றப்பட வேண்டும்.



தன்னலம் கருதாமல் மக்களை காக்கும் பணியில் ஈடுபட்டு, தங்கள் இன்னுயிரைத் துறப்பவர்களுக்கு, தகுந்த மரியாதை அளிக்க வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 21.04.2020

மனித குலத்திற்கே சவாலாக இருந்து வரும் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றினை கட்டுப்படுத்தும் பணியில் மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், காவல் மற்றும் வருவாய்த் துறையினர், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பினைச் சார்ந்தவர்கள் தங்கள் குடும்பத்தையே மறந்து, தன்னலம் கருதாமல் பணியாற்றி வருகின்றனர். ஒவ்வொரு உயிரும் இந்த அரசுக்கு முக்கியம் என்று கருதி, இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, களத்தில் முன்னின்று பணியாற்றும் களப் பணியாளர்களுக்கு பல்வேறு சலுகைகளை நான் ஏற்கெனவே அறிவித்து இருந்தேன். இவர்களது பணியினை நாடே போற்றி, நன்றி பாராட்டிக் கொண்டிருக்கிறது. உயிர் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இவர்களை, இறைவனுக்கு நிகராக நான் கருதுகின்றேன்.

கொரோனா நோய்த் தொற்றுக்கு ஆளாகி இறக்க நேரிட்டவர்களின் உடல்களை, உரிய பாதுகாப்பு நெறிமுறைகளை கடைபிடித்து தான் அடக்கம் அல்லது தகனம் செய்ய தமிழ்நாடு அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், மருத்துவப் பணியில் ஈடுபட்டு, நோய்த் தொற்றுக்கு ஆளாகி, தங்கள் இன்னுயிரை ஈந்தவர்களின் உடல்களை அடக்கம் அல்லது தகனம் செய்வது தொடர்பாக நடைபெற்ற ஓரிரு சம்பவங்கள் எனக்கு மிகுந்த வருத்தத்தையும், வேதனையும் அளிக்கின்றது. அவர்களை இழந்து வாடும் அவர்களது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க, தன்னலம் கருதாமல், மக்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டு, தங்கள் இன்னுயிரைத் துறப்பவர்களுக்கு, தகுந்த மரியாதை அளிக்கும் விதத்தில், பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் மக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இது போன்ற சம்பவங்கள் இனியும் நடைபெறாமல் இருக்க, தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுக்கும் எனவும், மருத்துவர்கள் மற்றும் பிற களப் பணியாளர்கள் அச்சப்படத் தேவையில்லை எனவும், மாண்புமிகு அம்மாவின் அரசு உங்கள் பக்கம் முழுமையாக நிற்கும் என்பதையும் இத்தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கொரோனா நோய்த் தடுப்பு பணியில் ஈடுபடும் மருத்துவத்துறை, காவல் துறை, உள்ளாட்சித்துறை மற்றும் தூய்மைப் பணியாளர்கள் நோய்த் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு ரூ.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 22.04.2020

கொரோனா தொற்று நோய் போராட்டத்தில் முன் நின்று பணிபுரியும் அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவத்துறையைச் சார்ந்த பணியாளர்கள், காவல்துறை மற்றும் பிற அரசுத் துறையைச் சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்பின் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள், எவருக்கேனும் இந்நோய் ஏற்பட்டால் சிகிச்சைக்கான முழு செலவையும் அரசே ஏற்கும் எனவும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.2 இலட்சம் கொடுக்கப்படும் எனவும், எதிர்பாராதவிதமாக இறப்பு ஏற்படுமானால் அவர்களின் குடும்பத்திற்கு நிவாரணமாக 10 இலட்சம் ரூபாய் வழங்குவதுடன் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு தகுதியின் அடிப்படையில் அரசுப்பணி வழங்கப்படும் எனவும் நான் ஏற்கெனவே அறிவித்திருந்தேன்.

★ கொரோனா நோய்த் தடுப்புப் பணியில் அரும்பணியாற்றி வரும் மருத்துவத் துறை சார்ந்த பணியாளர்கள் எவரேனும் இந்த நோயால் பாதிக்கப்பட்டு, உயிரிழக்க நேரிட்டால் அவர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் காப்பீட்டுத் திட்டம் மூலம் வழங்கப்படும் என மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. இந்த போர்க்காலப் பணியில் ஈடுபட்டுள்ள அரசுத் துறைகளான மருத்துவத்துறை, காவல்துறை, உள்ளாட்சித் துறை மற்றும் தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து துறை பணியாளர்களும் கொரோனா நோய்த் தடுப்புப் பணியில் ஈடுபட்டு நோய்த் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு நான் ஏற்கெனவே அறிவித்த 10 இலட்சம் ரூபாய்க்குப் பதிலாக 50 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும். மேலும், அவர்களது குடும்ப உறுப்பினர் ஒருவருக்குத் தகுதியின் அடிப்படையில் அரசுப் பணி வழங்கப்படும்.

★ இத்தகைய தன்னலமற்ற பணியை முன்னின்று செய்யும் மேற்சொன்ன நபர்கள் தனியார் மற்றும் அரசு துறையிலிருந்து இறப்பை சந்திக்க நேர்ந்தால் அவர்களின் பணிக்கு நன்றிக்கடன் செலுத்துவது அரசின் கடமை என்பதை கருத்தில் கொண்டு உயிரிழந்தவர்களின் உடலை பாதுகாப்புடனும், உரிய மரியாதையுடனும் அடக்கம் செய்ய மாண்புமிகு அம்மாவின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.கொரோனோ தொற்று தடுப்பு பணியில் பணியாற்றும் அரசு மற்றும் தனியார் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் இப்பணியில் ஈடுபட்டுள்ள பிற துறை அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் இப்பணியில் ஈடுபட்டு உயிரிழக்க நேரிடும் தனியார் மற்றும் அரசு பணியாளர்களின் பணியை பாராட்டி அவர்களுக்கு உரிய விருதுகளும், பாராட்டுச் சான்றுகளும் வழங்கப்படும்.

★ தனியார் மருத்துவமனைகளில் பணிபுரியும் பணியாளர்களில் எவருக்கேனும் கொரோனோ தொற்று ஏற்பட்டால், மருத்துவத் துறையின் வழிகாட்டி நெறிமுறைகளுக்கு ஏற்ப அந்த மருத்துவப் பிரிவில் பணிபுரியும் அனைவருக்கும் பரிசோதனை செய்யவும், அந்த மருத்துவமனையின் பிரிவில் முழுமையாக நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதற்குப் பிறகு மீண்டும் அப்பிரிவில் மருத்துவப் பணிகளைத் தொடரவும் அனுமதிக்கப்படும்.

தற்போது நிலவிவரும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, சென்னை மாநகரத்தில் நோய் தடுப்பு பகுதிகளில் மக்கள் நடமாட்டத்தை முற்றிலும் கட்டுப்படுத்தவும், நோய் தொற்று ஏற்பட்டவர்களின் தொடர்புகளை உடனுக்குடன் கண்டறிந்து சோதனைக்கு உள்ளாக்கவும், மாநகர பகுதிகளில் மூச்சிறைப்பு, காய்ச்சல், தொண்டை வலி போன்ற அறிகுறி உள்ளவர்களை உடனுக்குடன் கொரோனோ தொற்று பரிசோதனை செய்யவும், இதன் மூலம் சென்னை மாநகரில் தற்போது செய்யப்பட்டு வரும் பரிசோதனைகளை கணிசமாக உயர்த்தவும், அந்த பரிசோதனை முடிவுகள் உடனுக்குடன் பெற்று நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியுள்ளேன்.

இதற்காக திரு. கார்த்திகேயன், இ.ஆ.ப. மற்றும் திரு. பாஸ்கரன், இ.ஆ.ப. ஆகிய இரண்டு உயர் அலுவலர்கள் சென்னை மாநகரத்திற்கு கூடுதலாக மண்டல அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஈரான் நாட்டில் சிக்கித் தவிக்கும் 1,000 மீனவர்களுக்கு உணவு, குடிநீர் மற்றும் இதர அடிப்படைத் தேவைகளை உடனடியாக செய்து தரவேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்,
மாண்புமிகு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர்
டாக்டர் **ஜெய்சங்கர்** அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் – 20.04.2020

ஈரான் நாட்டில் சிருயா, கிஷ், லாவன், பந்தர்ஈமோகம், அசலுயே உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இந்த மீனவர்கள் சிக்கித் தவிக்கிறார்கள். கடந்த 28.02.2020 அன்று நான் எழுதிய ஒரு கடிதத்தில், இந்த மீனவர்கள் அனைவரும் பத்திரமாக தாயகம் திரும்புவதற்கு உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தி இருந்தேன். ஈரான் நாட்டில் சிக்கித்தவிக்கும் இந்த மீனவர்கள் சார்பிலும் அவர்களது குடும்பத்தினர் சார்பிலும் அவர்களுக்கு உணவு, குடிநீர் மற்றும் இதர அடிப்படை தேவைகளை செய்து தரவேண்டும் என்று வலியுறுத்தி தமிழக அரசுக்கு தொடர்ந்து கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. போதிய உணவும், இதர அடிப்படைத் தேவைகளும் இல்லாமல் அன்னிய மண்ணில் சொல்லொண்ணா துயரத்திற்கு அவர்கள் ஆளாகி இருக்கிறார்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்நிலையில், ஈரானில் உள்ள இந்திய தூதரகத்தை தொடர்புகொண்டு அங்கு தவிக்கும் நம் மீனவர்களுக்கு உணவு குடிநீர் மற்றும் இதர அத்தியாவசிய தேவைகள் கிடைக்க வழிகாண உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இதேபோல, அந்த மீனவர்கள் அனைவரும் பத்திரமாக தாயகம் திரும்ப தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உடனடியாக வழிவகை காண வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுமக்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்வதற்கு "ஆரோக்கியம்" என்ற சிறப்புத் திட்டம் துவக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் திட்டத்தை துவக்கி வைத்தார்கள் – 23.04.2020

கொரோனா வைரஸ் தொற்று நோயினைத் தடுக்கும் விதமாக மத்திய மற்றும் மாநில அரசுகள் பல உத்திகளைக் கையாண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மத்திய ஆயுஷ் அமைச்சகம் கோவிட்–19 தொற்று நோயினை தடுப்பதற்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்கியது. அதில் நிலவேம்பு குடிநீர் மற்றும் கபசுர குடிநீரை பொதுமக்களுக்கு வழங்கி, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க ஒரு வழிகாட்டுதலை வழங்கியது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் 11 மருத்துவ வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவில் அரசு மற்றும் தனியார் துறைகளைச் சார்ந்த மூத்த இந்திய மருத்துவர்களும், மூத்த அலோபதி மருத்துவர்களும் இடம்பெற்று, ஆலோசனை செய்து அரசுக்கு தங்களுடைய பரிந்துரைகளை வழங்கினார்கள்.

அதில், மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகத்தின் வழிகாட்டுதல்களைக் கருத்தில் கொண்டு, சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி மற்றும் ஹோமியோபதி உள்ளிட்ட மருத்துவ முறைகளில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வழிமுறைகளை மக்கள் பயன்படுத்திக் கொள்ள "ஆரோக்கியம்" என்ற சிறப்புத் திட்டம் மூலம் வழிமுறைகளை வெளியிட பரிந்துரைகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வல்லுநர்களின் பரிந்துரைகளை ஏற்று, தமிழ்நாட்டு பொதுமக்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்ளவும், சிகிச்சை பெற்ற பின் உடல் நலத்தைப் பேணவும் 23.04.2020 அன்று ஆரோக்கியம் என்ற சிறப்புத்

திட்டத்தினைத் தொடங்கி வைத்து, நோய் எதிர்ப்பு சக்தியைக் கூட்டுவதற்கும் உடல் நலம் பேணுவதற்கும், பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீர் மற்றும் கபசுரக் குடிநீர் சூரணப் பொட்டலங்களை வழங்கினார்கள்.

இதைத் தொடர்ந்து சென்னை மாநகரில் நோய்க் கட்டுப்பாட்டுப் பகுதியில் (containment zone) வசிக்கும் ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு கபசுர குடிநீர் சூரணப் பொட்டலங்கள் வழங்கப்படும். இந்த விநியோகத்திலும் சம்பந்தப்பட்ட அலுவலர்களும் பயனாளிகளும் சமூக இடைவெளியை முறையாக கடைபிடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

இந்தச் சிறப்புத் திட்டத்தின் வழிமுறைகள், கொரோனா நோய்க்கான சிகிச்சை அல்ல எனவும், பொதுவாக நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க மருத்துவ ரீதியாக ஆய்வு செய்யப்பட்ட வழிமுறைகள் எனவும் தெளிவுபடுத்தப்படுகிறது.

> கடந்துப் போன நிமிடங்களை, விலைக்கு வாங்கி அனுபவிக்க முடிகின்ற அளவுக்கு, இந்த உலகில் யாரும் பணக்காரர்கள் கிடையாது!

டெல்லியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள மையங்களில் உள்ள தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு தேவையான உதவிகளை உடனடியாக செய்துதர வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், மாண்புமிகு டெல்லி யூனியன் பிரதேச முதலமைச்சர் திரு. **அரவிந்த் கெஜ்ரிவால்** அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் – 24.04.2020

டெல்லியில் நடைபெற்ற தப்லிக் மாநாட்டில் பங்கேற்ற தமிழகத்தைச் சேர்ந்த 559 பேர் டெல்லியில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள மையங்களில் உள்ளனர் என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இவர்களில் 183 பேர் எய்ம்ஸ், ஆர்.ஜி.எஸ்.எஸ். எல்.என். எச்., டி.டி.யூ. உள்ளிட்ட மருத்துவமனைகளிலும், 376 பேர் பாதர்பூர், துவர்கா, பக்கார்வாலா மேற்கு, சுல்தான்புரி, நரேலா உள்ளிட்ட இடங்களில் உள்ள தனிமைப்படுத்தும் மையங்களில் உள்ளனர்.

இவர்களுக்கு சரியானவசதிகள் இல்லை என்று எங்களுக்கு தொடர்ந்து புகார்கள் வந்துள்ளது. இவர்களில் சிலருக்கு நீரழிவு நோய் உள்ளிட்ட நோய்கள் இருப்பதாகவும், இதனால் அவர்கள் பாதிப்படைந்து வருவதாகவும் தகவல்கள் வருகிறது.

இந்நிலையில் கடந்த 22.04.2020ஆம் தேதி தனிமைப்படுத்தப்பட்ட மையத்தில் இருந்த திரு. முகமது முஸ்தபா ஹாஜியார் மரணம் அடைந்தார். அங்கு மருத்துவமனை மற்றும் தனிமைப்படுத்தப்படும் மையங்களில் உள்ளவர்கள் தமிழக இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையருக்கு (9810254777) தகவல் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் தெரிவிக்கும் புகார்களை சம்பந்தப்பட்ட டெல்லி அதிகாரிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இவர்களுக்கு சிறப்பான மருத்துவ சிகிச்சைகளை அளிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்.

தேவையான மருந்துகளை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். தற்போது ரமலான் மாதம் துவங்க உள்ளதால் இவர்களுக்கு சரியான நேரத்தில் உணவு மற்றும் மருந்துகளை வழங்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்.

தமிழ்நாடு அரசு பணியாளர்களின் ஓய்வுபெறும் வயது 58இல் இருந்து 59ஆக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு- 07.05.2020

தமிழ்நாடு அரசின் பணியாளர்களின் பணியிலிருந்து ஓய்வு பெறும் வயது 58லிருந்து 59 வயதாக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இந்த ஆணை அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கும் பொருந்தும். இந்த ஆணை உடனடியாக அமுலுக்கு வரும்.

இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் இயங்கும் திருக்கோயில்களில் பணிபுரியும் 10,448 அர்ச்சகர்களுக்கு மேலும், ரூ.1,000 நிவாரணம் திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும்!

மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா வைரஸ் நோய்த் தொற்றினைத் தடுக்க பல்வேறு தீவிர நோய்த் தடுப்பு பணிகளையும், நிவாரணப் பணிகளையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. ஊரடங்கு காலகட்டத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை காத்திடும் வகையில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் பங்குத்தொகை / தட்டுக்காணிக்கை மட்டுமே பெறும் 2,108 அர்ச்சகர்கள்/பட்டாச்சாரியார்கள்/பூசாரிகளுக்கும், ஒரு கால பூஜை நிதியுதவி பெறும் திருக்கோயில்களில் பணிபுரியும் 8,340 அர்ச்சகர்கள் / பட்டாச்சாரியார்கள் / பூசாரிகளுக்கும், திருக்கோயில்களில் ஊதியமின்றி பங்குத்தொகை மட்டுமே பெற்றுக்கொண்டு பணிபுரியும் நாவிதர், பண்டாரம் / பண்டாரி, மாலைக்கட்டி, பரிச்சாரகர்/ சுயம்பாகம், வில்வம், காது குத்துபவர்/ ஆசாரி, நாமவளி, மிராசு கணக்கு, கங்காணி திருவிளக்கு, முறைகாவல் மேளம், நாதஸ்வரம், குயவர், புரோகிதர், தாசநம்பி போன்ற பணியாளர்களுக்கு ஏற்கெனவே சிறப்பு நேர்வாக ரூ.1,000/– ரொக்க நிவாரணமாக வழங்கப்பட்டுவிட்டது.

ஊரடங்கு மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளதால், மேற்குறிப்பிட்ட பிரிவினருக்கு மேலும் ரூபாய் 1,000/– ரொக்கம் நிவாரணத் தொகையாக திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படும்.

ஏற்றமிகு நிருவாகம்!
கொரோனாவை கொன்றொழித்து அபாரம்!!

கொரோனா வைரஸ் நோய் தொற்றால் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகள், அதனால் ஏற்படும் பின் விளைவுகளை தமிழகம் சமாளித்து வருவதைப் பார்த்து அகில இந்தியாவே ஆச்சரியத்தில் ஆழ்ந்துள்ளது.

இது சாதாரணமாக நடந்து விடவில்லை. இதன் பின்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் அளப்பரிய பணிகள் அணிவகுத்து நிற்கின்றன.

கொரோனா வைரஸ் பிரச்சினை துவங்கியதும், புயல் வேகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளையும், சிகிச்சை முறைகளையும், பாதிக்கப்பட்டோரை தனிமைப்படுத்துவதிலும் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு போர்க்கால நடவடிக்கைகளில் இறங்கியது.

மார்ச் 25ஆம் தேதி ஊரடங்கை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் அறிவித்ததுமே, அதை செவ்வனே செயல்படுத்தும் செயல்வீரராக தமிழ்நாடு அரசு பம்பரமாக சுழன்றது. கூட்டம் கூடுவது தடுக்கப்பட்டு, போக்குவரத்து நிறுத்தப்பட்டு, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, பாதிக்கப்பட்டோரின் சிகிச்சைக்கு மருத்துவமனைகளை தயார் செய்து, அவசர காலங்களில் பயன்படுத்த பள்ளிகள், கல்லூரிகளை தயார்படுத்தி, இரயில் பெட்டிகளையும் வார்டுகளாக மாற்றி, பற்றாக்குறை இல்லாமல் மருந்துகள் சப்ளை செய்யப்படுவதையும் தமிழ்நாடு அரசு பார்த்துக்கொண்டது.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அதிகமானோருக்கு கொரோனா பரிசோதனையும் தமிழகத்தில்தான் செய்யப்படுகிறது.

அதுமட்டுமா, கோயம்பேடு மார்க்கெட் மூலம் கொரோனா தொற்று பரவுகிறது என்றதுமே, போர்க்கால வேகத்தில் களத்தில் இறங்கிய தமிழக அரசு, திருமழிசையில் சில நாட்களில் புதிய கடைகள், சாலைகள், தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் வசதிகளை ஏற்படுத்தி மொத்த காய்கறி மார்க்கெட்டை இடம் மாற்றியது.

கொரோனா தொற்று முதன்முதலில் சீனாவில் பரவியபோது, வூஹான் நகரில் 10 நாட்களில் புதிய மருத்துவமனையை அந்நாடு உருவாக்கி சாதனை படைத்தது. திருமழிசையில் மொத்த மார்க்கெட்டை தமிழ்நாடு அரசு உருவாக்கிய வேகத்தைப் பார்த்தவர்கள், சீனாவில் வேகத்திற்கு தமிழக அரசின் வேகம் எந்த விதத்திலும் சளைத்தது இல்லை என வியக்கின்றனர்.

ஒருபுறம் பொதுமக்களின் சிரமத்தைப் போக்க ஊரடங்கு தளர்வுகளை தொடர்ந்து அறிவிக்கும் தமிழக அரசு, இன்னொருபுறம், பரிசோதனைகள், சிகிச்சைகள் என அதிவேகமாக செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. உலக சுகாதார அமைப்பே தமிழக அரசின் செயல்பாடுகளை பாராட்டுகிறது.

படமும்/ செய்தியும்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் இயக்குவது குறித்து காணொலிக்காட்சி மூலம் ஆய்வு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.04.2020 அன்று தலைமைச் செயலகத்தில், கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில், நோய்த் தொற்று பரவாமல் இருக்க தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாகவும், மத்திய அரசு சில தொழிற்சாலைகளுக்கு விலக்கு அளித்துள்ளதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் சில தொழிற்சாலைகளை படிப்படியாக அனுமதிப்பது தொடர்பாகவும் டி.வி.எஸ். குழுமத்தின் தலைவர் திரு. வேணு சீனிவாசன், முருகப்பா குழுமத்தின் தலைவர் திரு. வெள்ளையன், டி.வி.எஸ். & சன்ஸ் நிறுவனத்தின் இணை மேலாண் இயக்குநர் திரு. தினேஷ், ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் தலைவர் திரு. வெங்கடராமராஜா, தோல் ஏற்றுமதிக் குழுமத்தின் தலைவர் திரு. அகீல் அகமது, இந்திய தொழில் கூட்டமைப்பின் தலைவர் திரு. ஹரி தியாகராஜன், இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் தலைவர் திரு. சீனிவாசன் ஆகிய தொழிலதிபர்களுடன் காணொலிக் காட்சி மூலமாக ஆலோசனை நடத்தினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆய்வுக் கூட்டம்!

படமும்/ செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில், 28.04.2020 அன்று தலைமைச் செயலகத்தில், கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள 12 குழுக்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **ஓ. பன்னீர்செல்வம்**, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. J.K. திரிபாதி, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழகத்தில் ஊரடங்கு காலக்கட்டத்தில் 32,962 கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் தங்குதடையின்றி அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம்!

தமிழகம் முழுவதும் கூட்டுறவுத் துறையின் 32,962 நியாயவிலைக் கடைகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கொரோனா வைரஸ் நிவாரண நிதியாக அரிசி பெறும் 1,98,72,808 குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ரூ.1,000 நிவாரணம் வழங்கப்பட்டது. மேலும், ஏப்ரல் மாதத்தில் கொரோனா ரொக்க நிவாரணம் பெறாதவர்கள் இம்மாதம் பெற்றுக்கொள்ளலாம் என அரசு உத்தரவிட்டுள்ளது. கூட்டுறவு நியாய விலைக் கடைகளின் வாயிலாக அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஏப்ரல் மாதத்திற்கான அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் சர்க்கரை விலையின்றி வழங்கப்பட்டது. இதில் 3,02,487 மெ.டன் அரிசி, 19.641 மெ.டன் பருப்பு, 19,497 கிலோ லிட்டர் சமையல் எண்ணெய் மற்றும் 28,808 மெ.டன் சர்க்கரை வழங்கப்பட்டது.

மேலும், ஊரடங்கு தொடர்ந்து நீட்டிக்கப்பட்டுள்ளதால் இதே பொருட்களை மே மாதத்திற்கும் வழங்கிட மாண்புமிகு முதல்வர் உத்தரவிட்டதற்கிணங்க, 10.05.2020 வரை 3,04,943 மெ.டன் அரிசி, 13,068 மெ.டன் பருப்பு, 14,072 கிலோ லிட்டர் சமையல் எண்ணெய் மற்றும் 19,831 மெ.டன் சர்க்கரை வழங்கப்பட்டுள்ளது. இதே நடைமுறையினை ஜூன் மாதத்திற்கும் பின்பற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், பிரதம மந்திரி கரீப் கல்யாண் அன்னயோஜனா திட்டத்தின் கீழ், அந்தியோதயா அன்னயோஜனா மற்றும் முன்னுரிமை அட்டைதாரர்களின் பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் தலா 5 கிலோ அரிசி, ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களுக்கு விலையின்றி வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. இத்துடன் மாநில அரசின் சொந்த நிதி ஆதாரம் மூலம் முன்னுரிமையற்ற அரிசி பெறும் அட்டைதாரர்களின் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தலா 5 கிலோ அரிசி, ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களுக்கு விலையின்றி வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி ஏப்ரல் திங்களுக்கான கூடுதல் விலையில்லா அரிசியினை மே மற்றும் ஜூன் மாதங்களில் இரண்டு தவணையாக குடும்ப அட்டைதாரர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

❖ மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழகம் முழுவதும் கடந்த 2019–2020ஆம் ஆண்டில் பயிர்க்கடன் குறியீடாக ரூ.10,000 கோடி நிர்ணயிக்கப்பட்டு, 31.03.2020 வரை 13,02,412 விவசாயிகளுக்கு ரூ.9,352.13 கோடி அளவிற்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

❖ நடப்பாண்டில் (2020–2021) பயிர்க்கடன் குறியீடு ரூ.11,000 கோடி நிர்ணயிக்கப்பட்டு 30.04.2020 வரை 10,481 நபர்களுக்கு ரூ.78.30 கோடி அளவிற்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

❖ கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் 116 அம்மா மருந்தகங்கள் மற்றும் 173 கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் 20 சதவிகிதம் வரை தள்ளுபடி விலையில் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த 31.03.2020 வரை ரூ.962.50 கோடி மதிப்பிலான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

❖ மகளிர் சுய உதவிக்குழுக்களின் அவசரக் கடன் தேவையினை பூர்த்தி செய்யும் விதமாக கோவிட்–19 சிறப்புக் கடனுதவி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் 30.09.2020 வரை ஒரு உறுப்பினருக்கு ரூ.5,000 வரையும், ஒரு குழுவிற்கு ரூ.1 இலட்சம் வரையும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு தகுதிவாய்ந்த மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் வழங்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖



1,323 செவிலியர்களுக்கு பணி நியமன ஆணை!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 25.04.2020

மாண்புமிகு அம்மாவின் அரசு, கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. ஏற்கெனவே 1,508 ஆய்வக நுட்புனர்கள் (Lab Technician), 530 மருத்துவர்கள் மற்றும் 1,000 செவிலியர்கள் தெரிவு செய்யப்பட்டு, பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு சிறப்பாக பணியாற்றி வருகின்றனர்.

மேலும், 31.03.2020 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்ற மருத்துவர், செவிலியர் மற்றும் மருத்துவ தொழில்நுட்ப பணியாளர்கள் ஆகியோருக்கு ஒப்பந்த முறையில் 2 மாத காலத்திற்கு தற்காலிக பணி நியமனம் வழங்கப்பட்டு பணியாற்றி வருகின்றார்கள்.

அதே போன்று, 30.04.2020 அன்று பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ள மருத்துவர், செவிலியர் மற்றும் மருத்துவ தொழில்நுட்ப பணியாளர்கள் ஆகியோருக்கும் ஒப்பந்த முறையில் 2 மாத காலத்திற்கு தற்காலிக பணி நியமன ஆணைகள் வழங்கப்படும்.

இதனைத் தொடர்ந்து தற்பொழுது 1,323 செவிலியர்கள், மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு வருகிறது. இப்பணியாளர்கள் ஆணை கிடைக்கப் பெற்றவுடன் உடனடியாக பணியில் சேர அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

6 மாத காலங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் 2,570 செவிலியர்களுக்கு பணி நியமன ஆணை!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 08.05.2020

கொரோனா வைரஸ் தொற்று நோய் (கோவிட்–19) தடுப்பு நடவடிக்கைகளுக்கு மேலும் 2,570 ஒப்பந்த செவிலியர்கள் பணியமர்த்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் உத்தரவு.

மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் பன்முக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஓர் அங்கமாக மருத்துவ பணியாளர்கள் தேர்வு வாரியம் மூலம் ஏற்கெனவே 530 மருத்துவர்கள், 2,323 செவிலியர்கள், 1,508 ஆய்வக நுட்புனர்கள் மற்றும் 2,715 சுகாதார ஆய்வாளர்கள் பணியமர்த்தப்பட்டு சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள்.

இதனைத் தொடர்ந்து, 6 மாத காலங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மேலும் 2,570 செவிலியர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டு வருகிறது. இச்செவிலியர்கள், ஆணை கிடைக்கப்பெற்ற மூன்று தினங்களுக்குள், பணியில் இணைய அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு தலா 40 செவிலியர்களும், தாலுக்கா மருத்துவமனைகளுக்கு தேவைக்கேற்ப 10 முதல் 30 செவிலியர்களும் பணியமர்த்தப்படுவார்கள். இதன் மூலம் கொரோனா தடுப்பு பணிகள் மேலும் வலுவடையும்.

தமிழ்நாடு அரசின் தோட்டக்கலைத் துறை

காய்கறி, பழங்கள் உள்ளிட்டவற்றை இ.தோட்டம்.காம் என்ற இணையதளத்தின் மூலம் விற்பனை!

தமிழக தோட்டக்கலைத் துறையின் இ–தோட்டம் இணையத்தின் மூலம் மே 5ஆம் தேதி வரை 5,694 மெட்ரிக் டன் காய்கறிகளும், 4,324 மெட்ரிக் டன் பழங்களும் விற்பனைச் செய்யப்பட்டுள்ளன. மேலும், 20,786 பேர் முன்பதிவு செய்து காய்கறி, பழங்களை வாங்கியுள்ளனர்.

கொரோனா நோய்த் தொற்று காரணமாக நாடு முழுவதும் பொது முடக்கம் அமல்படுத்தப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் வாங்க மக்கள் அனுமதிக்கப்பட்டனர். ஆனால், கோயம்பேடு காய்கறிச் சந்தையில் காய்கறிகள் வாங்கும் மக்கள் கூட்டம் கட்டுப்படுத்த முடியாத நிலையில் கொரோனா தொற்று பரவுவதை கண்டு அரசு கோயம்பேடு காய்கறிச் சந்தையை திருமழிசை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு இடமாற்றம் செய்துள்ளது.

கொரோனா பாதிப்பிலிருந்து தற்காத்துக் கொள்ள ஊட்டச்சத்து மிகுந்த சத்தான காய்கறிகள், பழங்கள் உள்ளிட்டவைகளை வாங்க பொதுமக்கள் அதிகமாக கூடியதால் கோயம்பேடு காய்கறிச் சந்தைக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழ்நாடு அரசின் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை காய்கறி, பழங்கள் உள்ளிட்டவைகளை இ. தோட்டம்.காம் என்னும் இணையதளத்தின் மூலம் விற்பனை செய்து வருகிறது. இந்த ஆன்லைன் விற்பனை பொதுமக்கள் ஒரே இடத்தில் கூடுவதை தவிர்ப்பதுடன், இதுபோன்ற பேரிடர் காலங்களில் மக்களின் பாதுகாப்பு அம்சமாகவும் விளங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசின் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை காய்கறி, பழங்கள் உள்ளிட்டவைகளை இ தோட்டம்.காம் என்னும் இணையதளத்தின் மூலம் விற்பனை செய்து வருகிறது. இந்த ஆன்லைன் விற்பனை பொதுமக்கள் ஒரே இடத்தில் கூடுவதை தவிர்ப்பதுடன், இதுபோன்ற பேரிடர் காலங்களில் மக்களின் பாதுகாப்பு அம்சமாகவும் விளங்கி வருகிறது.

இ–தோட்டத்தில் பழங்கள், காய்கறிகளை எப்படி வாங்குவது ?

இணையதளத்தில் www.ethottam.com (இதோட்டம்.காம்) என டைப் செய்து உள்ளே நுழையலாம். அந்தப் பக்கத்தில் விற்பனைக்குத் தயாராக உள்ள காய்கறிகள், பழங்கள் மற்றும் தொகுப்புகளும், அதன் விலைகளும் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றில் தேவையானவற்றைத் தேர்வு செய்த பின், அந்தப் பக்கத்தில் பொருள்களை வாங்குவோரின் பெயர், செல்லிடப்பேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்ய வேண்டும். மேலும் பொருட்கள் வாங்கும் நபர்கள் ஆன்லைனில் பணம் செலுத்தியப் பின், ஆர்டர் உறுதி செய்யப்பட்டது குறித்த குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்படும்.

இந்த நடைமுறைகள் முடிவடைந்து 72 மணி நேரத்திற்குள் பொருட்கள் அனுப்பி வைக்கப்படும். பொருட்களை வீடுகளுக்கே விநியோகம் செய்ய சேவைக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை.

இதுகுறித்து தமிழ்நாடு தோட்டக்கலைத் துறை இயக்குநர் டாக்டர் என்.சுப்பையன் கூறியதாவது :

விவசாயிகளிடமிருந்து நுகர்வோர் நேரடியாக கொள்முதல் செய்துகொள்ள உருவாக்கப்பட்டதே இந்த இ. தோட்டம் என்னும் தளம். தற்போது சென்னையில் மாதவரம், கிண்டி, செம்மொழிப் பூங்கா, சிட்லபாக்கம், செங்கல்பட்டு அருகே ஆத்தூர் உள்ளிட்ட இடங்களில் இருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், திருச்சி, தேனி, கடலூர், விருதுநகர், கன்னியாகுமரி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து காய்கறிகள், பழங்கள் உள்ளிட்டவை நேரடியாக கொள்முதல் செய்யப்படுகின்றன.

கொரோனா நோய்த்தொற்றை தொடர்ந்து பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு காலத்தில் இ–தோட்டம் இணையவழியில் பல ஆர்டர்கள் கிடைக்கின்றன. குறிப்பாக முழு பொதுமுடக்க காலத்தில் நாளொன்றுக்கு 2,500 காய்கறி மற்றும் பழங்கள் அடங்கிய பைகள் விற்பனை செய்யப்பட்டன. இ. தோட்டத்தில் காய்கறி மற்றும் பழங்கள் பல்வேறு தொகுப்புகளாக விற்பனை செய்யப்படுகிறது.

தமிழ்நாடு தோட்டக்கலைத் துறையின் கூடுதல் இயக்குநர் திரு. டி.சி.கண்ணன் கூறியதாவது :

மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. எங்களுக்கு இது ஒரு புதிய அனுபவமாக இருந்து வருகிறது. பொதுமுடக்கம் காலத்தில் நாள்தோறும் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் கேட்புகள் (ஆர்டர்கள்) கிடைக்கின்றன. இணையவழியில் ஆர்டர்கள் கிடைத்த 2–3 நாட்களுக்குள் வீடுகளுக்கு விநியோகித்து வருகிறோம்.

சென்னையைப் பொருத்தவரை தற்போதுள்ள இடவசதி போதுமானதாக இல்லை. தமிழகத்தின் பெருநகரங்களான மதுரை, கோவை, திருச்சி, சேலம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்தும் ஆர்டர்கள் வருகின்றன. அவற்றை அந்தப் பகுதிகளில் உள்ள எங்களது துறைப் பணியாளர்கள் மூலம் விநியோகித்து வருகிறோம்.

சென்னையைப் பொருத்தவரை 15 மண்டலங்கள் பரந்து விரிந்த பகுதி, மாதவரத்திலிருந்து பொருட்களைக் கொண்டு சேர்ப்பதில் நடைமுறைப் பிரச்சினைகள் உள்ளன. அதுதொடர்பாக வாடிக்கையாளர்கள் பலரும் புகார் அளிக்கின்றனர். அவற்றைச் சரிசெய்ய தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

குடும்பம் என்பது கடவுள் நமக்காக பூமியில் ஏற்பாடு செய்திருக்கும் சொர்க்கம்.
அதை சொர்க்கமாக்குவதும், நரகமாக்குவதும் நம்முடைய செயலில் தான் இருக்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் அறிக்கை - 29.04.2020

சிவப்பு மற்றும் ஆரஞ்சு பகுதிகளில் உரிய நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, அப்பகுதிகளை பச்சை பகுதிகளாக மாற்றிட போர்கால அடிப்படையில் செயல்படவேண்டும்!

29.04.2020 அன்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் சென்னை மாநகராட்சியின் ஆணையாளர் அவர்களுடன் காணொலிக் காட்சி மூலமாக ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வில், ஒவ்வொரு மாவட்டத்திலும் கொரோனா வைரஸ் நோய் தொற்றின் தற்போதைய நிலவரமும், அதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறியப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்பணிகளை தீவிரப்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்பட்டன:–

ஒவ்வொரு மாவட்டத்திலும் நோய் பரவலின் தற்போதைய நிலைக்கு ஏற்ப எந்தெந்த தொழில்களையும், பணிகளையும் படிப்படியாக தொடங்கலாம் என்பது பற்றி ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும் விரிவான அறிக்கையை அரசுக்கு உடனடியாக அனுப்ப வேண்டும்.

அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களும், ஊரக மற்றும் நகர பகுதிகளில் உள்ள வெளி மாநில தொழிலாளர்களின் எண்ணிக்கையை, மாநில வாரியாக கணக்கெடுத்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். மேலும், அவர்கள் தங்கியுள்ள இடங்களில் அரசு அறிவித்த நிவாரண பொருட்கள் அவர்களிடம் சென்று சேர்வதை உறுதி செய்ய வேண்டும். அவர்களுக்கு உரிய மருத்துவ வசதிகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். விடுபட்ட தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் எவரேனும் இருந்தால், அவர்களை கண்டறிந்து, அவர்களுக்கும் நிவாரண பொருட்களை உடனடியாக வழங்க வேண்டும்.

வேளாண் பணிகள் பாதிக்காத வண்ணம், விவசாயிகளுக்குத் தேவையான உபகரணங்கள், இடுபொருட்கள் ஆகியவை எந்தவித தங்குதடையுமின்றி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். மேலும், விவசாயிகளின் விளைபொருட்களை சந்தைகளுக்குக் கொண்டு செல்ல எந்த தடையும் இருக்கக் கூடாது.

மக்கள் தங்கள் இயல்பு வாழ்க்கைக்கு விரைவாக திரும்பும் வகையில், மாவட்டங்களில் சிவப்பு மற்றும் ஆரஞ்சு பகுதிகளில் உரிய நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு, அப்பகுதிகளை, பச்சை பகுதிகளாக மாற்றிட போர்க்கால அடிப்படையில் உரிய

உறவுகள் சூழ்ந்தது துணையல்ல; அன்பின் உணர்வு சூழ்வதே துணை!

நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். தேசிய மகாத்மா காந்தி வேலை உறுதி திட்டம் எந்த தங்குதடையுமின்றி நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும். அப்போது, சமூக விலகலை கண்டிப்பாக கடைபிடித்தும், முகக்கவசம் அணிவதை உறுதி செய்தும், மூன்றில் ஒரு பங்கு பணியாளர்களைக் கொண்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் (Containment Zone) தினந்தோறும் 2 முறை கிருமிநாசினி தெளிக்கப்பட வேண்டும். மேலும் பொதுக் கழிவறைகள் தினந்தோறும் 3 முறை சுத்தப்படுத்தி கிருமிநாசினி தெளிக்கப்பட வேண்டும். இப்பகுதிகளில் அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்கு மக்கள் வெளியே வராத வகையில், அப்பொருட்களை அவர்களுடைய வசிப்பிடத்திலேயே வழங்க சிறப்பு ஏற்பாடுகளை தொடர்ந்து செய்ய வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள அம்மா உணவகங்களில் தினமும் சுமார் 7 இலட்சம் ஏழை, எளிய மக்களுக்கு தரமான உணவு 3 வேளையும் வழங்கப்பட்டு வருகிறது. அதைப்போல சமுதாய சமையல் கூடங்களும் அமைக்கப்பட்டு, தினந்தோறும் 1.50 இலட்சம் முதல் 2 இலட்சம் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்றோர் மற்றும் வெளி மாநில தொழிலாளர்களுக்கு தரமான உணவு வழங்கப்பட்டு வருகிறது. இவ்விடங்களில் தொடர்ந்து சுவையான, தரமான, சுகாதாரமான உணவு வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சியர்கள் கள ஆய்வு செய்து உறுதிப்படுத்த வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள நியாய விலைக்கடைகளில் மே மாதத்திற்கான அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான டோக்கன்கள் வழங்கும்போது அவற்றில் நேரம், நாள் ஆகியவற்றை அச்சடித்து வழங்க வேண்டும். டோக்கன்களை வழங்கும்போது, எந்த நாள் மற்றும் நேரத்தில் நியாய விலைக் கடைகளுக்கு வர வேண்டும் என்பதை வலியுறுத்தி கூறிவிட்டு வர வேண்டும்.

காய்கறி, மளிகை, இறைச்சி, மீன் மற்றும் நியாய விலைக்கடைகளில் தகுந்த சமூக இடைவெளியை கண்டிப்பாக கடைபிடிப்பதை உறுதி செய்ய வேண்டும். மக்கள் முகக்கவசம் அணிந்து வெளியே செல்வதை உறுதிப்படுத்த வேண்டும்.

காவல்துறையினர் மற்றும் உள்ளாட்சி அமைப்பினர் நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் தினமும், ஒலிபெருக்கி மூலமாக சமூக இடைவெளியை கடைபிடிக்கவும், முகக்கவசம் அணிந்து வரும்படியும், சுற்றுப்புறத்தை சுகாதாரமாக பேணவும் அறிவிப்பு செய்து, விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

மேலும், நோய்த் தொற்று தடுப்பு பணியை தீவிரப்படுத்த வேண்டிய சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருப்பூர் மற்றும் சேலம் மாநகராட்சிகளில் பகுதிகளில் நோய் பரவலை கட்டுப்படுத்த கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன:

பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களில், இராயபுரம், திரு.வி.க.நகர், திருவல்லிக்கேணி, தண்டையார்பேட்டை, அண்ணாநகர், கோடம்பாக்கம் ஆகிய ஆறு மண்டலங்களில் கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிக அளவில் உள்ளதை கருத்திற்கொண்டு, இந்த ஆறு மண்டலங்களில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு களப்பணி குழுவும், மற்ற 9 மண்டலங்களில், 3 மண்டலத்திற்கு ஒரு களப்பணி குழுவும் நியமிக்கப்படுகிறது. இந்திய ஆட்சிப் பணி அலுவலர் தலைமையில் மாவட்ட கண்காணிப்பாளர் அல்லது கூடுதல் கண்காணிப்பாளர் நிலையில் ஒரு காவல்துறை அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர், மாநகராட்சியை சார்ந்த உயர் அலுவலர் மற்றும் சுகாதாரத் துறையை சார்ந்த ஒரு உயர் அலுவலர் அடங்கிய குழுவாக இக்குழுக்கள் அமைக்கப்படும். இது போன்ற ஆறு சிறப்பு குழுக்கள் திருப்பூர், கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் மாநகராட்சிகளுக்கும் அமைக்கப்படும்.

நோய்த் தொற்று தடுப்புப் பகுதிகளில் மக்கள் நடமாட்டத்தை முற்றிலும் கட்டுப்படுத்துவது, அப்பகுதியிலுள்ள குடும்பங்களுக்கு தேவையான அடிப்படை தேவைகளை உறுதி செய்வது, நோய்த் தடுப்புப் பணிகளை தீவிரப்படுத்துவது, இப்பகுதிகளில் நோய்த் தொற்றுக்கான சோதனையை தீவிரப்படுத்தி, விரைவாக அதன் முடிவுகளை பெறுவது உள்ளிட்டவை, இக்குழுக்களின் முக்கிய பணிகளாகும். இதன்மூலம் நோய்த் தொற்று அதிகம் உள்ள பகுதிகள் தீவிர கண்காணிப்பில் கொண்டுவரப்படும்.

மிக நெருக்கமான வசிப்பிடங்களில் வாழும் ஏழை மக்கள், அவர்கள் இருப்பிடங்களில் தனிமைப்படுத்திக்கொள்ள வசதியில்லையெனில், அவர்கள் அரசால் அமைக்கப்படும் தனிமைப்படுத்தப்படும் மையங்களில் தங்கியிருக்க ஏற்பாடு செய்யப்படும்.

நோய்த் தடுப்பு பகுதிகளில் போதிய கழிப்பறை வசதிகள் இல்லை எனில், நகரும் கழிப்பறை வசதிகள் (Mobile Toilet) கூடுதலாக ஏற்படுத்தப்படும்.

சென்னை மாநகரில் நோய்த் தொற்றுக்கான சோதனை செய்வதற்கு தற்போதுள்ள நடமாடும்

சோதனை வாகனங்கள் 3இல் இருந்து 10ஆக அதிகரிக்கப்படும். இதன்மூலம் நோய்த் தொற்று உள்ளதாக சந்தேகிக்கப்படும் நபர்களின் இருப்பிடங்களுக்கே சென்று விரைவாக சோதனை மேற்கொள்ள முடியும்.

நோய்த் தொற்று உள்ள பகுதிகளில் சோதனைகள் மேலும் அதிகப்படுத்தப்படும். நோய்த் தொற்று உள்ளவர்கள் வசிக்கும் தெருக்களில் உள்ளவர்கள் அனைவரையும் முதற்கட்டமாகவும், அடுத்த கட்டமாக அந்த வார்டுகளில் உள்ளவர்களை Random Sampling அடிப்படையில் நோய்த் தொற்றுக்கான சோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் (Containment Zone) சமூக இடைவெளி தீவிரமாக கடைப்பிடிக்கப்படுவதையும், தனி நபர் சுகாதாரம் பேணுவதையும் உறுதிப்படுத்தி உரிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். அப்பகுதிகளில் மக்களுக்கு கிருமிநாசினி (hand sanitizer), முகக்கவசம் (Mask) போன்றவை வழங்கப்படுவதுடன், ஒவ்வொரு வீட்டிற்கும் 250 கிராம் கிருமிநாசினி பவுடர் வழங்கப்படும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க கபசுர குடிநீர் சூரணம் போன்ற மருந்துகளை வழங்குவது உறுதி செய்யப்படும். அப்பகுதிகளில் உள்ள வீடுகளில் நோய்த் தொற்று ஏற்படாமல் இருக்க, கிருமிநாசினி தெளிக்கப்படும். நோய்த் தொற்று பகுதிகளில், ஒரு நாளைக்கு இருமுறை கிருமிநாசினி தெளிப்பது உறுதி செய்யப்படும்.

சென்னை மாநகரில் நோய்த் தொற்று உள்ளவர்களின் தொடர்புகளை கண்டறிவதற்கான குழுக்கள் வலுப்படுத்தப்படுவதுடன், தொடர்பு இல்லாமல் நோய்த்தொற்று ஏற்படுகின்றதா என ஆராய்ந்து, அவ்வாறு ஏதும் இருப்பின், அவர்களுடைய தொடர்புகளையும் விரைவாக கண்டறிய ஒரு சிறப்புக்குழு அமைக்கப்படும்.

நோய்த் தடுப்பு பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு அத்தியாவசிய பொருட்களை தொடர்ந்து தடையின்றி வழங்குவதற்கான பிரத்யேகமாக சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படும். இதனால் அப்பகுதியிலிருந்து மக்கள் வீட்டை விட்டு வெளியில் வரவேண்டிய சூழல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

நோய்த் தடுப்பு பகுதிகளில் ஏற்கெனவே கணக்கெடுக்கப்பட்ட முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்றோர், இதய நோய், நீரிழிவு நோய் போன்ற நோய் உள்ளவர்களின் உடல்நிலையும், கர்ப்பிணி தாய்மார்களின் உடல்நிலையும் தொடர்ந்து தீவிரமாக கண்காணிக்கப்பட்டு தேவையான உதவிகள் செய்து தர வேண்டும்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றினை கட்டுக்குள் கொண்டு வர, எடுக்கப்பட உள்ள இத்தீவிர கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் தங்களது முழு ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நகர்ப்புரங்களில் ஊரடங்கை கடுமையாக்கினால் மட்டுமே நோய்த்தொற்று பரவுவதை கட்டுப்படுத்த முடியும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 24.04.2020

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவலின் தற்போதைய நிலை குறித்து 24.04.2020 அன்று என்னால் ஆய்வு செய்யப்பட்டது. கிராமப்புறங்களில் இந்த நோய்த் தொற்று ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளபோதிலும், நகரப்புரங்களில், குறிப்பாக மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதிகளில் இந்த நோய்த் தொற்று தொடர்ந்து பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. சென்னை, கோவை, மதுரை போன்ற பெருநகரங்களில் அதிக அளவில் இந்த நோய்த் தொற்று பரவ வாய்ப்பு உள்ளதால், இது குறித்து மருத்துவ மற்றும் பொது சுகாதார வல்லுநர்களுடன் ஆலோசனை செய்யப்பட்டதில், நகர்ப்புரங்களில் ஊரடங்கை மேலும் கடுமையாக்கினால் மட்டுமே, இந்த நோய்த் தொற்று பரவலை கட்டுப்படுத்த முடியும் என்று தெரிவித்துள்ளனர். எனவே, தற்போதுள்ள சூழ்நிலைகளையும், மருத்துவ மற்றும் பொது சுகாதார வல்லுநர்களின் ஆலோசனைகளையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில மாநகராட்சிகளில் தற்போதுள்ள ஊரடங்கு கட்டுப்பாடுகளை மேலும் தீவிரப்படுத்த பேரிடர் மேலாண்மை சட்டம், 2005ன் கீழ், கீழ்க்கண்ட முடிவுகளை அரசு எடுத்துள்ளது.

★ சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மூன்று மாநகராட்சிப் பகுதிகளிலும், ஊரடங்கு முழுமையாக 26.04.2020 ஞாயிறு காலை 6 மணி முதல் 29.04.2020 புதன் இரவு 9 மணி வரை அமல்படுத்தப்படும்.

★ சேலம் மற்றும் திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் ஊரடங்கு முழுமையாக 26.04.2020 ஞாயிறு காலை 6 மணி முதல் 28.04.2020 செவ்வாய் இரவு 9 மணி வரை அமல்படுத்தப்படும்.

இந்த ஊரடங்கு காலத்தில் கீழ்க்கண்ட அத்தியாவசிய பணிகள் மட்டுமே அனுமதிக்கப்படும்:

★ மருத்துவமனைகள், மருத்துவ பரிசோதனைக் கூடங்கள், மருந்தகங்கள், ஆம்புலன்ஸ் மற்றும் அமரர் ஊர்தி சேவைகள் போன்ற மருத்துவத்துறை சார்ந்த பணிகள்.

★ அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ளும் தலைமைச்செயலகம், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, காவல்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மின்சாரத்துறை, ஆவின், உள்ளாட்சிகள் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தேவையான பணியாளர்களுடன் மட்டும் செயல்படும்.

★ இதர மத்திய அரசு அலுவலகங்களிலும், வங்கிகளிலும் அத்தியாவசிய பணிகளுக்கு தேவைப்படும் 33 சதவீத பணியாளர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

★ அம்மா உணவகங்கள், தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் (ATM Centre) வழக்கம் போல் செயல்படும்.

★ உணவகங்களில் தொலைபேசி மூலம் ஆர்டர் செய்து வீடுகளுக்கு வழங்கப்படும் உணவுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

★ முதியோர், மாற்றுத்திறனாளி, ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் முதியோருக்கு உதவி புரிவோர் ஆகியோருக்கு அனுமதி வழங்கப்படும்.

★ ஆதரவற்றோருக்காக மாவட்ட நிருவாகங்கள், சமூக நலத்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்படும் சமையல் கூடங்கள் (Community Kitchens) தொடர்ந்து செயல்படும்.

★ ஏழைகளுக்கு உதவி செய்யும் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்புகள், சம்பந்தப்பட்ட அரசு அலுவலரின் உரிய அனுமதியுடன் இயங்கலாம்.

★ கோயம்பேடு போன்ற மொத்த காய்கறி சந்தைகள் உரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படும். அதே போல் காய்கறி, பழங்கள் போன்றவற்றை விற்பனை செய்ய நடமாடும் கடைகள் மட்டும் அனுமதிக்கப்படும். மேற்கண்ட நாட்களில் ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்ட பிற கடைகள் எவற்றுக்கும் அனுமதி இல்லை.

மேற்கண்ட பணிகளைத் தவிர, பிற பணிகளுக்கு முழுமையான தடை விதிக்கப்படுகிறது. இதர அரசு அலுவலகங்கள் (பத்திரப்பதிவு அலுவலகம் உட்பட) செயல்படாது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் பணியாளர்கள் வீட்டிலிருந்து பணியாற்றலாம். பிற தனியார் நிறுவனங்கள் செயல்படாது.

மேற்குறிப்பிட்ட மாநகராட்சிகளைத் தவிர பிற இடங்களில் / பகுதிகளில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகள் / அனுமதிகள் தொடரும்.

இக்கால கட்டத்தில் நோய்த்தடுப்பு பகுதிகள் (Containment Zones) கடுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும். இப்பகுதிகளில் தினந்தோறும் இருமுறை கிருமி நாசினி தெளிக்கப்படும். மாநகரத்தில் பிற பகுதிகளிலும் மக்கள் நடமாட்டம் முழுமையாக கட்டுப்படுத்தப்படும். இந்தத் தடையை யாரேனும் மீறினால், அவர்கள் வாகனம் பறிமுதல் செய்யப்படுவதுடன், தடையை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கு எளிதாகவும், தீவிரமாகவும் பரவும் தன்மையுள்ள கடும் நோய் என்பதால், இதை கட்டுப்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்துவரும் இந்த நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 21,770 தொழிலாளர்களுக்கு ரூ.1,000 நிவாரணம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 25.04.2020

தமிழ்நாடு முழுவதும், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுப்பதற்காக சமூக தனிமைப்படுத்துதலை உறுதி செய்ய மாநில பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005இன் கீழ், 24.03.2020 முதல் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை அடுத்து, பொதுமக்களின் சிரமங்களை குறைப்பதற்காக பல்வேறு தரப்பினருக்கும் கொரோனா சிறப்பு நிவாரண உதவி வழங்கப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு முழுவதும் 1,778 தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின் (E.S.I.) கீழ் பதிவு பெற்ற சுமார் 21,770 தொழிலாளர்களுக்கு தலா 1,000 ரூபாய் நிவாரணம் வழங்கப்படும். இதற்காக 2.177 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

படமும்/ செய்தியும்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் சங்கத்தின் தலைவர்கள் நன்றி தெரிவித்தார்கள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், கொரோனா நோய்த் தடுப்புப் பணியில் அரும்பணியாற்றி வரும் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவத்துறையைச் சார்ந்த பணியாளர்கள் எவரேனும் இந்த நோயால் பாதிக்கப்பட்டு, உயிரிழக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு 50 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டமைக்காக இந்திய மருத்துவர்கள் சங்கத்தின் தமிழ்நாடு கிளையின் தலைவர் மருத்துவர் சி.என். ராஜா, தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் செந்தில், தமிழ்நாடு அரசு செவிலியர்கள் சங்கத்தின் தலைவர் திருமதி வளர்மதி ஆகியோர் காணொலிக் காட்சி மூலமாக 23.04.2020 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய மருத்துவக் குழுவினருடனான ஆலோசனைக் கூட்டம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களை 27.04.2020 அன்று தலைமைச் செயலகத்தில், டாக்டர் வி. திருப்புகழ், இ.கா.ப., அவர்கள் தலைமையிலான மத்தியக் குழுவினர் டாக்டர் அனிதா கோகர், டாக்டர் சூரிய பிரகாஷ், திரு. லோகேந்தர் சிங், டாக்டர் வி. விஜயன் ஆகியோர் சந்தித்து, தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும், நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்தும் ஆலோசனை நடத்தினார்கள். இக்கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **ஓ. பன்னீர்செல்வம்**, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காய்கறிகள் மற்றும் பழங்களை குளிர்பதனக் கிடங்குகளில் பாதுகாத்திட முழு கட்டணம் ரத்து!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 26.04.2020

தமிழகத்தில் கொரோனா தாக்குதலைக் கட்டுப்படுத்திட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. விளைபொருட்களை விற்பனைக்கு எடுத்துச் செல்வதில் உள்ள பிரச்சினைகளை களைந்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விளைபொருட்களை பாதுகாத்து சேமித்திட கிடங்கு வசதி

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பயன்பாட்டிற்காக நவீன சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்பட்டு, அவை பயன்பாட்டில் இருந்து வருகின்றன. விவசாயிகள் விளைபொருட்களை இக்கிடங்குகளில் 180 நாட்கள் வரை வைத்து பாதுகாத்திடலாம். அதிக விலை கிடைக்கப்பெறும் காலங்களில் விளைபொருட்களை கிடங்கிலிருந்து எடுத்து விற்பனை செய்திட, கிடங்கு வாடகைக் கட்டணத்தை முதல் 30 நாட்களுக்கு செலுத்திட தேவையில்லை என மாண்புமிகு அம்மாவின் அரசு ஏற்கெனவே ஆணையிட்டிருந்தது. அது மேலும் ஒரு மாத காலம் நீட்டிக்கப்படுகிறது.

பொருளீட்டுக்கடன் வசதி

கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ள விளைபொருட்களை அடமானத்தின் பேரில் அதிகபட்சம் 50 சதவீத சந்தை மதிப்பு அல்லது 3 இலட்சம் ரூபாய் இவற்றில் எது குறைவோ அந்த அளவிற்கு பொருளீட்டுக்கடனைப் பெற்றிடலாம். கடனிற்கான கால அளவு 180 நாட்கள் ஆகும். இதற்கான வட்டி 5 சதவீதமாகும். கடனிற்கான வட்டி முதல் 30 நாட்களுக்கு செலுத்திட தேவையில்லை என ஆணையிடப்பட்டிருந்தது. அது மேலும் ஒரு மாத காலம் நீட்டிக்கப்படுகிறது.

காய்கறிகள் மற்றும் பழங்களை குளிர்பதனக் கிடங்குகளில் பாதுகாத்திட கட்டணம் முழுவதும் ரத்து

பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி காய்கறிகள் மற்றும் பழங்கள் கிடைத்திடவும், அவற்றை பாதுகாத்து, தேவைப்படும் காலங்களில் விற்பனை செய்வதற்கு ஏதுவாகவும், விவசாயிகளின் பயன்பாட்டிற்காக குளிர்பதனக் கிடங்குகள் இயங்கி வருகின்றன. இக்கிடங்குகளில் காய்கறிகள் மற்றும் பழங்களை சேமித்து வைக்க விவசாயிகளிடமிருந்து பயன்பாட்டுக் கட்டணத் தொகை வசூலிக்கப்பட்டு வருகின்றது. தற்போதுள்ள சூழ்நிலையினை கருத்தில் கொண்டும், மேலும் 15 நாட்களில் மாம்பழம் உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாலும், விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படும். இப்பயன்பாட்டு கட்டணத் தொகை 30.04.2020 வரை வசூலிக்கப்படமாட்டாது என்றும், இக்கட்டணத்தை முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த சலுகை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீட்டிக்கப்படுகிறது.

சந்தைக் கட்டண விலக்கு

தற்போது நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், நிலக்கடலை, எள், தேங்காய், பருத்தி, வெங்காயம், மிளகாய், புளி, முந்திரி, வெல்லம், மரவள்ளி மற்றும் சில மாவட்டங்களில் பழங்கள் மற்றும் காய்கறிகள் உள்ளிட்ட விளைபொருட்களை விவசாயிகள் விற்பனை செய்யும்போது, வியாபாரிகளிடமிருந்து விற்பனை மதிப்பில் 1 சதவீதம் சந்தைக் கட்டணமாக வசூலிக்கப்படுகின்றது.

தற்போது நிலவி வரும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் விளைபொருட்களை நியாயமான விலையில், பொதுமக்களுக்கு விநியோகம் செய்திட ஏதுவாக, தற்போது வியாபாரிகள் செலுத்தும் 1 சதவீத சந்தைக் கட்டணத்தை 30.04.2020 வரை ரத்து செய்யப்பட்டு இருந்தது. இந்த சலுகை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீட்டிக்கப்படுகிறது.

ஏரிகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் இதர நீர்நிலைகளில் உள்ள களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் சரளை மண்ணை விவசாயிகள் மற்றும் மண்பாண்டம் செய்பவர்கள் விலையில்லாமல் பெற்றுக் கொள்ளலாம் என பொதுப்பணித் துறை அறிவிப்பு - 06.05.2020

தமிழ்நாட்டில் உள்ள ஏரிகள், குளங்கள், வாய்க்கால்கள் போன்ற நீர் கட்டமைப்புகளை மக்கள் பங்களிப்புடன் தூர்வாரி அவற்றின் கொள்ளளவினை மீட்டெடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 'குடிமராமத்து திட்டம்' 2017இல் தொடங்கப்பட்டது. இதனால், பல ஆண்டுகளாக தூர்வாரப்படாமல் இருந்த நீர் ஆதாரங்களில், பருவ மழையின்போது வழக்கத்தை விட நீர் அதிகம் தேக்கப்பட்டு விவசாயத்திற்கும், குடிநீர் பயன்பாட்டிற்கும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டது.

மேலும், இந்த நீர் நிலைகளில் உள்ள களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் சரளை மண்ணை விவசாயிகள் மற்றும் மட்பாண்டம் செய்பவர்களுக்கு வழங்கும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அரசாணை எண்.50, தொழில்துறை, நாள் 27.04.2017 அன்று வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின் மூலம், இதுவரை 6,69,900 விவசாயிகளும், மண்பாண்ட தொழில் புரிவோரும் பயன் பெற்றுள்ளனர்.

தற்போது நடைமுறையில் உள்ள ஊரடங்கிலிருந்து விவசாய பணிகளுக்கு ஏற்கெனவே விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இக்கோடை காலத்தில் பாசனத்திற்கான நீர் திறப்பு நிறுத்தப்பட்டிருப்பதால், விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு தேவையான களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் சரளை மண்ணை விலையில்லாமல் தங்கள் கிராமத்திலோ அல்லது அருகாமை கிராமத்தில் உள்ள ஏரிகள் மற்றும் குளங்களிலிருந்து சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களில் மாவட்ட நிருவாகத்தின் அனுமதி பெற்று எடுத்துக் கொள்ளலாம்.

தொழில் முதலீடுகளை ஈர்ப்பதிலும், தமிழ்நாட்டை ஒரு முன்னணி மாநிலமாகத் தொடர்ந்து நிலைநிறுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும்!

கொரோனா நோய்த் தாக்கத்திற்குப் பின் குறிப்பிட்ட சில நாடுகளில் இருந்து வெளியேறும் ஜப்பான், தென்கொரியா, தாய்வான், சிங்கப்பூர் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டிற்கு ஈர்க்க தலைமைச் செயலாளர் தலைமையில் சிறப்புக்குழு அமைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு – 30.06.2020

தமிழ்நாட்டில் வேளாண்மை, தொழில் உற்பத்தி உள்ளிட்ட பொருளாதாரச் செயல்பாடுகளை கொரோனா நோய்த் தொற்று பேரிடர் காலத்திற்குப் பின்பு மீண்டும் முன்பு போலவே துடிப்புடன் இயங்க வைப்பதில் மாண்புமிகு அம்மாவின் அரசு உறுதியுடன் உள்ளது.

உலகப் பொருளாதாரத்தில் கொரோனா நோய்ப் பரவல் ஏற்படுத்தியுள்ள பெரும் தாக்கத்தால் பல வெளிநாட்டு தொழில் நிறுவனங்கள் தமது உற்பத்திச் செயல்பாடுகளைப் பரவலாக்கும் பொருட்டு, குறிப்பிட்ட சில நாடுகளில் இருந்து இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு இடம்பெயர முடிவு செய்துள்ளனர். குறிப்பாக, தமிழ்நாட்டில் அதிக முதலீடு செய்துள்ள நாடுகளான ஜப்பான், தென் கொரியா, தாய்வான், சிங்கப்பூர் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சார்ந்த தொழில் நிறுவனங்கள் தமது தொழிற்சாலைகளை இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு இடமாற்றம் செய்திட முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இச்சூழலில், தமிழ்நாட்டில் ஏற்கெனவே அதிக முதலீடுகளைச் செய்துள்ள நாடுகளைச் சார்ந்த தொழில் நிறுவனங்களின் மீது சிறப்பு கவனம் செலுத்தி, அவர்கள் பிற நாடுகளிலிருந்து இடமாற்றம் செய்யும் தொழிற்சாலைகளை இங்கு ஈர்த்து, நம் இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் பணிகளை முடுக்கிவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, இவ்வாறு இடம் பெயரும் தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டில் தொழில் துவங்க ஈர்ப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள தலைமைச் செயலாளர் தலைமையில் “முதலீடுகளை ஈர்ப்பதற்கான சிறப்புக்குழு” ஒன்றினை அமைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இக்குழுவில் ஜப்பான், தென்கொரியா, தாய்வான், சிங்கப்பூர் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சார்ந்த தொழில் கூட்டமைப்புகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள், தமிழ்நாட்டில் உள்ள ஜப்பானிய தொழில் பூங்காக்களின் பிரதிநிதிகள், தமிழ்நாடு அரசின் நிதி, பெருந்தொழில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் ஆகிய துறைகளின் செயலாளர்கள், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், வணிகவரித்துறை ஆணையர் ஆகியோர் இடம் பெறுவர்.

இடம்பெயர வாய்ப்புள்ள நிறுவனங்களைக் கண்டறிதல், அவர்களை தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பதற்கு வழங்கவேண்டிய விரைவான ஒற்றைச்சாளர அனுமதிக்கான வழிமுறைகள், சிறப்பு சலுகைகள் மற்றும் அவர்களை ஈர்க்க வாய்ப்புள்ள தொழிற்பூங்காக்கள் மற்றும் உட்கட்டமைப்பு பணிகளை கண்டறிந்து விரைந்து செயல்படுத்தும் வழிமுறைகள் உள்ளிட்ட பணிகளை இந்த சிறப்புக்குழு மேற்கொள்ளும். இந்த சிறப்புக்குழு தனது முதற்கட்ட அறிக்கையை ஒரு மாதத்திற்குள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கும்.

தமிழ்நாட்டை சீரிய முன்னேற்றப் பாதையில் தளர்வின்றி தொடர்ந்து கொண்டு செல்ல மாண்புமிகு அம்மாவின் அரசு முனைப்புடன் உள்ளது. தொழில் வளர்ச்சியிலும், தொடர்ந்து தொழில் முதலீடுகளை ஈர்ப்பதிலும் தமிழ்நாட்டை ஒரு முன்னணி மாநிலமாகத் தொடர்ந்து நிலைநிறுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு எடுக்கும்.

கண்ணை இமை காப்பது போல், அரசு மக்களை காத்து வருகிறது! அரசு அறிவிக்கின்ற அறிவிப்புகளை மக்கள் முறையாக கடைப்பிடித்தாலே, நோய் பரவலைத் தடுக்க முடியும்!

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
05.05.2020 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள அம்மா மாளிகையில், சென்னை மாநகரில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டத்திற்கு பிறகு ஆற்றிய உரை

பொதுமக்கள் அனைவருக்கும் பணிவான வணக்கம்,

உலகையே உலுக்கி, அச்சுறுத்தி, உரையவைத்த கொடிய நோய் கொரோனா வைரஸ் நோய். வல்லரசு நாடுகளிலிருந்து, வளந்து வரும் நாடுகள் வரை பல்லாயிரக்கணக்கான பேர் இந்த நோயினால் இறந்துள்ளார்கள். அப்படி வல்லரசு நாடுகளே, வளர்ந்த நாடுகளே கட்டுப்படுத்த முடியாத, பரவிக்கொண்டிருக்கின்ற இந்த சூழ்நிலையிலே, தமிழத்திலே இந்த கொரோனா வைரஸ் நோயை எதிர்கொள்ள தமிழ்நாடு அரசு பல்வேறு போர்கால நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இன்றைக்கு தமிழகத்தை பொறுத்த வரைக்கும் மத்திய அரசு அறிவித்த வழிகாட்டுதல்களின்படி, நோய் பரவலைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம்.

இந்த நோய் பரவலைத் தடுப்பதற்கு என் தலைமையிலே 14 முறை ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. உயர்திரு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு,

அந்த உயர் மட்டக்குழுவும் பல்வேறு முறை ஆலோசனை கூட்டங்களை நடத்தி முடித்திருக்கின்றன. அதேபோல, நோய் பரவலைத் தடுப்பதற்கு, 12 குழுக்கள் அமைக்கப்பட்டன. எல்லா குழுக்களிலுமே தனித்தனியாக தங்களுடைய பணியை துவக்கி சிறப்பாக மேற்கொண்டு வருகிறது. எல்லா குழுவிலும் துறை செயலாளர் அந்தஸ்திலே நியமிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிலும் இரண்டு மூன்று ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் நியமித்து இருக்கின்றோம்.

அதோடு, பல்வேறு மருத்துவமனைகளிலே நோய்த் தொற்று உள்ளவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். தமிழகம் முழுவதும் நோய் பரவுதலை தடுக்க வேண்டும் என்பதற்காக, மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த குழுக்களிலே இந்திய ஆட்சிப் பணியாளர்கள், ஐ.பி.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களிலே அவர்கள் நேரடியாகச் சென்று முறையாக சிகிச்சை அளிக்கப்படுகின்றதா, அதோடு அந்தப் பகுதியில் நோய் பரவல் எவ்வாறு தடுக்கப்படுகின்றது என்றெல்லாம் உடனுக்குடன் நேரடியாக கவனித்து, நடவடிக்கை எடுத்து, நோய் பரவாமல் தடுக்கின்ற பணியில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

அதோடு, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே காணொலிக் காட்சி மூலமாக தொடர்பு கொண்டு 4 முறை ஆலோசனை நடத்தியிருக்கின்றேன். இந்த ஆலோசனைக் கூட்டத்தில், அரசு கொடுத்த ஆலோசனையின்படி அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அந்தந்த மாவட்டத்திலேயே சிறப்பாக பணியாற்றியதன் விளைவு, புறநகர் மாவட்ட பகுதிகளிலே இந்த நோய் பரவல் வெகுவாக குறைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல், மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் தடையில்லாமல் கிடைப்பதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரைக்கும், சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, நோய் பரவலை தடுப்பதற்கு உண்டான முயற்சியை எடுத்து வருகிறார்கள். அவர்களுக்குத் துணையாக முதற்கட்டமாக மூன்று இந்திய ஆட்சிப் பணியாளர்களை நியமித்தோம், அவர்கள் 3 Region-க்கு நியமிக்கப்பட்டு அந்தப் பணிகளை துவங்கினார்கள். அவர்களுக்கு உதவியாக 10 குழுக்கள் அமைக்கப்பட்டு, 10 குழுக்களிலுமே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் நியமித்தோம். அவர்களோடு DRO அந்தஸ்தில் உள்ள அதிகாரிகளை நியமித்தோம். மருத்துவ இணை இயக்குநர்கள் அவர்களோடு இணைக்கப்பட்டு அவர்கள், அந்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இந்தப் பணி செம்மையாக நடைபெறுவதற்காக, காவல்துறை உயர் அதிகாரிகள். ADGP அந்தஸ்தில் உள்ள 4 பேரை நியமித்துள்ளோம். அனைத்திற்கும் தலைமை ஏற்று, இந்த கொரோனா வைரஸ் நோயை சென்னை மாநகரத்திலே கட்டுப்படுத்துவதற்கு, CRA அவர்கள் சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த குழுவிலே இடம்பெற்றுள்ள அனைத்து ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளும் இன்றைக்கு Zone wise ஆக பணிகளை முடுக்கிவிட்டு, இந்த கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில் மக்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளை அறிந்துகொள்வதற்காக, கட்டுப்பாட்டு அறை ஒன்று துவக்கப்பட்டு, அந்த கட்டுப்பாட்டு அறையிலே சென்னை மாநகர மக்கள் தங்களுக்கு உள்ள பிரச்சினைகளை தெரிவிக்கின்ற போது, உடனடியாக அந்தப் பிரச்சினை தீர்ப்பதற்கு வழிவகை செய்யப்படுகின்றது. அவர்கள் ஏதாவது நோய்வாய்ப்பட்டு, நோய் அறிகுறிகள் இருந்தால் உடனடியாக கட்டுப்பாட்டு அறைக்கு தெரிவிக்கின்றார்கள். அந்த கட்டுப்பாட்டு அறையிலே, பல மருத்துவர்களையும் ஈடுபடுத்தி

இருக்கின்றோம். அந்த மருத்துவர்கள் தகுந்த ஆலோசனை வழங்குகிறார்கள். அதோடு, இன்றைக்கு இந்த கட்டுப்பாட்டு அறையின் மூலமாக, சென்னை மாநகரப் பகுதியிலே, அவர்களுக்கு ஏதாவது பிரச்சினை இருந்தால் அவர்கள் இந்த கட்டுப்பாட்டு அறைக்கு தெரிவிக்கின்ற போது, உடனடியாக அந்தக் கட்டுப்பாட்டு அறையில் பணியாற்றக் கூடியவர்கள், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்து, அந்தப் பிரச்சினையை தீர்க்கக்கூடிய வழிமுறைகளையும் நாங்கள் ஏற்பாடு செய்து கொடுத்திருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைக்கு மற்ற மாநிலத்தைக் காட்டிலும் தமிழகத்திலே இந்த நோய் பரவலைத் தடுப்பதற்கு கடுமையான முயற்சியை நாம் மேற்கொண்டிருக்கின்றோம் என்பதை இந்த நேரத்தில் மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் வேகமாக பரவுவதற்கு காரணம், அதிகமாக மக்கள் நிறைந்த நகரம், தமிழகத்திற்கு தலைநகரமாக விளங்குவது சென்னை மாநகரம். குறுகலான தெரு, அதிகமான மக்கள் வசிக்கின்ற பகுதி, இதனால் எளிதாக நோய் ஒருவரிடமிருந்து மற்றவரிடம் பரவிவிடுகிறது. அதோடு, பொதுக்கழிப்பறைகளை அதிகமாக பயன்படுத்துகின்றார்கள். இதனால், தொற்று எளிதாக பரவி விடுகின்றது. இதை எல்லாம் கட்டுப்படுத்துவதற்கு, சென்னை மாநகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த தடை செய்யப்பட்ட பகுதிகளில் தினந்தோறும் காலையிலும், மதியமும், மாலையிலும் மூன்று நேரங்களிலும் கிருமி நாசினி அடிக்கப்படுகின்றது. பொதுக்கழிப்பறைகள் அடிக்கடி சுத்தம் செய்யப்படுகின்றது. தடைசெய்யப்பட்ட பகுதிகளில் இருக்கின்ற மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் நேரடியாக வழங்கப்படுகின்றன. அதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிப்பதற்கு உண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இன்றைக்கு நடமாடும் பரிசோதனை வாகனம் அவர்கள் வசிக்கின்ற இடங்களுக்கே செல்கின்றது. இன்றைக்கு சென்னையிலே இந்த வசதிகள் முழுமையாக ஈடுபடுத்தப்படுகின்றது.

தமிழ்நாட்டை நீர் மிகை மாநிலமாக மாற்றுவோம்!

“பருவ காலங்களில் பொழிகின்ற மழை நீர் ஒரு சொட்டுக்கூட வீணாகாமல் பாதுகாப்பதற்காகத்தான் குடிமராமத்துத் திட்டத்தை நாங்கள் துவக்கி வைத்துள்ளோம். இந்தத்திட்டத்திற்கு புத்துயிர் கொடுத்த அரசு, அம்மாவின் அரசு. 2016–2017ஆம் ஆண்டு பரீட்சார்த்த முறையில் இந்தத் திட்டத்தை துவக்கினோம். முதற் கட்டமாக 1,519 ஏரிகளும், இரண்டாம் கட்டமாக 2017–2018ஆம் ஆண்டில் ரூபாய் 328 கோடியில் 1,511 ஏரிகளும், 2019–2020ஆம் ஆண்டிற்கு 1,829 ஏரிகள் ரூபாய் 499 கோடியிலும் தூர்வாருவதற்கு தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு மனிதனுக்கு நீர் எப்படியோ, அதுபோல் விவசாயத்திற்கு உயிராக இருப்பது நீர். எனவே, அந்த நீரை, ஒரு சொட்டுக்கூட வீணாகாமல் பாதுகாப்பது அரசின் கடமை என்பதால் இப்படி ஒரு செயல்திட்டத்தை தீட்டி நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.”

நீர்வளத்தை பாதுகாப்போம்!
அனைத்து வளத்தையும் பெருக்குவோம்!
வறட்சியை விரட்டுவோம்!
தமிழ்நாட்டை நீர் மிகை மாநிலமாக உருவாக்குவோம்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

ஒன்றிணைவோம்!

வளமும் வலிமையும் மிக்க தமிழ்நாட்டைப் படைத்திடவும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லவும், நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட உறுதியேற்போம்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி**

ஏனென்றால் சென்னையிலே மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே அவர்கள் மருத்துவமனைக்கு வந்து, பரிசோதனை செய்வது என்பது ஒரு கடினமானது என்ற காரணத்தினாலே, அவர்கள் வசிக்கின்ற பகுதிக்கே இந்த பரிசோதனை வாகனம் சென்று, அவர்களை பரிசோதனை செய்து, பரிசோதனை செய்கின்ற போது, நோய் அறிகுறிகள் இருந்தால் அவர்களை அழைத்து சென்று மருத்துவமனையில் சேர்த்து உரிய சிகிச்சை அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தை பொறுத்தவரைக்கும், இதுவரைக்கும் 1,724 பேர் இந்த கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 267. இறந்தவர்களின் எண்ணிக்கை 19. ஆக, இன்றைக்கு அரசு சரியான முறையிலே நடவடிக்கை எடுத்ததன் காரணமாக குணம் அடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இறப்பு எண்ணிக்கை குறைக்கப்பட்டு இருக்கிறது.

தற்போது சென்னை மாநகரத்திலே, திரு.வி.க. நகரிலே 356 பேர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். கோடம்பாக்கத்திலே 257 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அண்ணாநகரில் 141 பேர், வளசரவாக்கத்திலே 114 பேர், இராயபுரத்தில் 299 பேர், தேனாம்பேட்டையில் 206 பேர், தண்டையார்பேட்டையில் 351 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் உரிய முறையிலே சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு சிகிச்சை அளிக்கப்படுபவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக சென்னை மாநகரத்தில் மட்டும் 4000 படுக்கை வசதிகள் கூடிய மருத்துவமனை தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதோடு இந்த நோயை கட்டுப்படுத்துவதற்காக, நோய் எதிர்ப்பு சக்தியை உடலில் உருவாக்க வேண்டும் என்பதற்காக, Zinc மற்றும் வைட்டமின் மாத்திரைகள் அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. அதோடு, கபசுர குடிநீர் வழங்கப்படுகிறது. நிலவேம்பு கஷாயம் வழங்கப்படுகிறது. இதையெல்லாம் அவர்கள் அருந்துகின்ற போது நோய் எதிர்ப்பு சக்தி பெறக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, நோய் பரவலை தடுக்க முடியும்.

மத்திய சுகாதாரக் குழு தமிழகத்திற்கு வந்து பார்வையிட்டு தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கைகளை பாராட்டிவிட்டு சென்றிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், பரிசோதனையை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முழுவதும் 50 பரிசோதனை மையங்கள் இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. 50 பரிசோதனை நிலையங்களின் மூலமாக நாளொன்றுக்கு சுமார் 12 ஆயிரம் பேர் பரிசோதனை செய்கின்றோம். இவ்வளவு பேர் பரிசோதனை செய்கின்ற காரணத்தினால் தான் நோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. அதனால் மக்கள் அச்சப்பட வேண்டிய அவசியமில்லை. இன்றைக்கு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில் தான் பரிசோதனை மையங்கள் அதிகமாக இருக்கின்றன.

அதேபோல பரிசோதனை செய்பவர்களின் எண்ணிக்கையும் இன்றைக்கு அதிகரிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, நோய் அறிகுறிகள் உள்ளவர்களை கண்டறிந்து அவர்களுக்கு உண்டான சிகிச்சையை அம்மாவுடைய அரசு செய்து கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆகவே, அரசை பொறுத்தவரைக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கு என்னென்ன தேவையோ அனைத்தையும் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசினுடைய வழிகாட்டுதலின் பேரில், சில தொழில்களை தொடங்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வழிகாட்டுதலின்பேரில், சில தொழில்களை தொடங்குவதற்கு கட்டுப்பாடுகளை தளர்த்தப்பட்டு இருக்கின்றன.

தமிழகத்தில் வெளிமாநில தொழிலாளர்கள் அதிகம் பேர் இருக்கின்றார்கள். வெளிமாநில தொழிலாளர்களுக்கு பல்வேறு பகுதிகளிலே சில கட்டுப்பாடுகளுடன் இப்பொழுது பணி துவங்கப்பட்டுவிட்டன. அப்படி பணிபுரிய விருப்பமுள்ள தொழிலாளர்கள் இங்கேயே தங்கிவிடலாம். தங்களுடைய மாநிலத்திற்கு செல்ல வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தால், அவர்களை அந்த இடத்திலேயே, நீங்கள் சென்று, விவரங்களை சேகரித்து, வெளிமாநிலங்களுக்கு செல்வதற்கு தகுந்த ஏற்பாடுகளை செய்ய வேண்டும். அந்தப் பணியும்

நம்முடைய குழு கவனமாக ஆங்காங்கே பார்த்துக் கொண்டிருக்கிறது.

ஏனென்றால் ஒரே இடத்திலே வந்துவிட்டால் நமக்கு பிரச்சினை ஏற்பட்டுவிடும். ஆகவே, நாம் ஆன்லைனில் பதிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவித்து விட்டோம். இருந்தாலும் அவர்கள் தங்களுடைய சொந்த மாநிலங்களுக்கு செல்ல வேண்டும் என்று ஆர்வத்தின் காரணமாக எங்கேயாவது ஒரு இடத்தில் கணக்கெடுத்தால் உடனடியாக வந்துவிடுகிறார்கள். அதையெல்லாம் தவிர்க்க வேண்டும், நீங்கள் சுமார் 7, 8, 10 குழுக்களாக அமைத்து, ஆங்காங்கே ஏற்கெனவே காவலர்களை நியமித்து, அந்த இடத்திலிருந்து யாரும் வெளியேறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்குபிறகு தான் நீங்கள் கணக்கெடுப்பிற்கே போக வேண்டும். நீங்கள் உடனடியாக கணக்கெடுக்க சென்றால், மற்ற இடங்களுக்கு விவரம் தெரிந்து, உடனடியாக அந்தப் பகுதிகளுக்கு வந்துவிடுவார்கள். அந்தந்த பகுதியில் இருக்கின்றவர்கள் அங்கேயே இருக்க வேண்டும். அந்த குழு எங்கே தொழிலாளர்கள் தங்கி இருக்கிறார்களோ அந்த இடத்திற்கே சென்று அவர்களுடைய விவரங்களை சேகரித்து, அவர்கள் அவர்களுடைய மாநிலங்களுக்கு செல்வதற்கு நீங்கள் வாய்ப்பு ஏற்படுத்திட வேண்டும்.

நான் ஏற்கெனவே டிஜிபி அவர்களிடத்திலே கலந்து பேசியிருக்கின்றேன். அவர்களை அழைத்து செல்கின்றபோது, இரவு 10 மணிக்கு மேல் தான் இரயிலுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். ஏன் என்றால் பகல் நேரத்தில் அழைத்துச் சென்றால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும். தமிழ்நாட்டில் சுமார் 50,000 பேர் வெளிமாநில தொழிலாளர்கள் இங்கே தங்கி பணிபுரிந்து வருகிறார்கள். 50,000 பேரை ஒரே நேரத்திலே அழைத்து செல்ல வசதி ஏற்படுத்தி கொடுக்க இயலாது. ஏனென்றால் இரயில் மூலமாகத் தான் அவர்கள் செல்ல வேண்டும். ஆகவே, எந்தந்த மாநிலத்திற்கு, எந்த தேதியிலே இரயில்கள் இயக்கப்படும் என்ற விவரங்களை எல்லாம் அவர்களிடத்திலே கூறி எந்தந்த தேதிகளில் அவர்களை அழைத்து செல்ல இருக்கிறோம் என்ற விவரங்களை எல்லாம் தெளிவாக சொல்லிவிடவேண்டும். இதை எச்சரிக்கையாக கையாள வேண்டும். அவர்களிடத்திலே தெளிவாக சொல்லிவிடுங்கள். பிற மாநில தொழிலாளர்கள் எங்கெல்லாம் தங்கியிருக்கிறார்கள் என்ற விவரம் நம் கையில் இருக்கிறது. அந்த இடங்களுக்கு சென்று உங்களுக்கு இந்த தேதியில் இத்தனை மணிக்கு இரயில் இருக்கிறது, நாங்களே நேரடியாக அழைத்துச் சென்று உங்களை இரயிலில் ஏற்றிவிடுவோம் என்ற தகவலை கூறிவிட வேண்டும். அதுவரை யாரும் வெளியில்

புத்துயிர் பெறும் ஏரிகள், கால்வாய்கள்...

“நம்முடைய அம்மாவினுடைய அரசு, அம்மா விட்டுச்சென்ற பணிகளை தொடர்ந்து செவ்வனே செய்து வருகிறது. மேலும் புதிய பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல் குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக ஏரிகள் தூர்வாரப்படுகின்றன. நீர்வரத்து வாய்க்கால்கள், விநியோகக் கால்வாய்கள் சீரமைக்கப்படுகின்றன. மதகுகள் சீரமைக்ககப்படுகின்றன. கரைகள் பலப்படுத்தப்படுகின்றன. இத்தனையும் முழுக்க முழுக்க விவசாய சங்கங்கள் மூலமாக அரசினுடைய கவனத்தோடு, அரசினுடைய உதவியோடு இந்தத் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகிறது.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

வரக்கூடாது என்ற தகவலையும் தெரிவிக்க வேண்டும். ஒரேநேரத்தில் அனைவரையும் அழைத்துச் செல்ல இயலாது. அந்த அளவிற்கு நாம் இரயில் வசதியை செய்து கொடுக்க முடியாது. படிப்படியாக ஒரு வாரத்திற்குள் அவர்களுடைய சொந்த மாநிலங்களுக்கு செல்வதற்கு அரசு வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கும்.

அதேபோல, தனிக்கடைகள் திறக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசினுடைய வழிகாட்டுதலின்பேரிலே, அதற்கும் தளர்வுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. ஆகவே, மத்திய அரசினுடைய வழிகாட்டுதலின்பேரில், தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுகின்றது. தமிழ்நாட்டு மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் அம்மாவுடைய அரசு செய்து கொடுத்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

பொதுமக்களை பொறுத்தவரைக்கும், அரசு அறிவிக்கின்ற வழிகாட்டுமுறைகளை பின்பற்ற வேண்டும். வெளியில் சென்றால் கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும். அடிக்கடி கைகளை சுத்தமாக சோப்பு போட்டு கழுவ வேண்டும். பொருட்களை வாங்குகின்ற போது சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும். இதை முறையாக பின்பற்றினாலே நோய் பரவலை தடுக்க முடியும். இது மருத்துவ வல்லுநர்களும், மருத்துவ நிபுணர்களும் தெரிவிக்கின்ற கருத்து. அதை பொதுமக்கள் அருள்கூர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து அம்மா உணவகங்களிலும் நாளொன்றுக்கு 7 இலட்சம் பேருக்கு உணவு அளித்துக் கொண்டிருக்கின்றோம். சமூக கிச்சன் மூலமாக சுமார் 2 இலட்சம் பேருக்கு உணவு அளிக்கின்றோம். மாற்றுத்திறனாளிகளுக்கு உணவளிக்கின்றோம், கர்ப்பிணி பெண்களுக்கு உணவளிக்கின்றோம், ஆதரவற்றோர்களுக்கு உணவளிக்கின்றோம், முதியோர்களுக்கு உணவு அளித்து கொண்டிருக்கின்றோம். ஆகவே, தமிழகத்தில் எவரும் பட்டினி இல்லை என்ற நிலையை எங்களுடைய அரசு உருவாக்கி இருக்கிறது என்பதை தெரிவித்து கொள்கின்றேன்.

தொழிலாளர்களுக்கு தேவையான நிவாரண உதவிகளையும் செய்திருக்கின்றோம். சுமார் 36 இலட்சம் பேர்களுக்கு கருணைத் தொகை கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு விலையில்லா அரிசி, பருப்பு, சர்க்கரை கொடுக்கப்பட்டிருக்கிறது. பொதுமக்களுக்கு அனைத்து அரிசி வாங்குகின்ற குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. விலையில்லா அரிசி கொடுக்கின்றோம், விலையில்லா பருப்பு, விலையில்லா சர்க்கரை, விலையில்லா எண்ணெய் கொடுக்கப்படுகிறது. ஏப்ரல் மாதமும், மே மாதமும் தொடர்ந்து வழங்கப்படும். அதேபோல ஜூன் மாதமும் தொடர்ந்து வழங்கப்படும். இன்றைக்கு அரிசி விலையில்லாமல் கொடுக்கப்படும். மே மாதத்திற்கும் கொடுக்கப்படும், ஜூன் மாதத்திற்கும் கொடுக்கப்படும். சர்க்கரை, பருப்பு, எண்ணெய் அனைத்துமே விலையில்லாமல் அம்மாவுடைய அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆகவே, இன்றைக்கு அரசு கண்ணை இமை காப்பது போல, மக்களை காத்து வருகிறது. இந்த சோதனையான நேரத்திலே, மக்கள் அரசு அறிவிக்கின்ற அறிவிப்பை முறையாக கடைப்பிடித்தாலே, நோய் பரவலைத் தடுக்க முடியும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

மீண்டும், மீண்டும் மக்களை வேண்டி கேட்டுக் கொள்வது, இருகரம் கூப்பி வேண்டி கேட்டுக் கொள்வது, நீங்கள் அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளை பின்பற்ற வேண்டும், கண்டிப்பாக வெளியிலே செல்கின்ற போது முகக்கவசம் அணிய வேண்டும். அதேபோல அடிக்கடி சோப்பு போட்டு கைகளை கழுவ வேண்டும். பொருட்களை வாங்குகின்ற போது, காய்கறி மார்க்கெட்டிற்கு சென்றாலும் சரி, மளிகைக் கடைகளுக்கு சென்றாலும் சரி அல்லது வங்கிகளுக்கு சென்றாலும், சமூக இடைவெளியை பின்பற்றி நீங்கள் வரிசையில் நின்று பொருட்களை வாங்கிச் சென்றால் நிச்சயமாக இந்த கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவலை தடுக்க முடியும். அதற்கு நீங்கள் அரசிற்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று பொதுமக்களை வேண்டி அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

மக்கள் பணி !

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசியல் பாசறையிலும், ஆட்சிப்பணியிலும் பயிற்சி பெற்றவர்கள் நாங்கள் என்பதால், அம்மா அவர்கள் வழியில் மக்கள் பணிகளை தொடர்ந்து செய்து வருகிறோம். நாங்கள் வகுக்கும் மக்கள் நலத்திட்டங்கள் அனைத்திலும் அம்மாவின் ஆன்மா இருக்கிறது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி**

தனிநபர் இடைவெளியை பின்பற்றி பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் பாதுகாப்பாக பணிபுரிவதையும், அரசு வெளியிட்டுள்ள நடைமுறைகளை தீவிரமாக கடைபிடிப்பதையும் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாநகராட்சி ஆணையர்கள் உறுதி செய்ய வேண்டும்!

தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள முடிவுகளின் அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 02.05.2020

இந்தியா முழுவதும், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுப்பதற்காக தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், ஊரடங்கு உத்தரவு 25.03.2020 முதல் அமலில் இருந்து வருகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு, இந்த நோய்த் தொற்றிலிருந்து தமிழ்நாட்டு மக்களை காத்து, அவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்கி, முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதனால் தான், தமிழ்நாட்டில் நோய்த் தொற்று பரவல் அதிகம் இல்லாமலும், சிகிச்சைக்குப் பின் குணமடைந்து வீடு திரும்புவோர் சதவிகிதம் நாட்டிலேயே அதிகமாகவும், நோய்த் தொற்றினால் ஏற்படும் உயிரிழப்பு மிகக் குறைவாகவும் இருந்து வருகிறது.

நான் பல்வேறு தினங்களில் நடத்திய ஆய்வுக் கூட்டங்களின் அடிப்படையில், குறிப்பாக, கடந்த 27.04.2020 அன்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடன் காணொலிக் காட்சி மூலமாக நடத்தப்பட்ட கலந்தாய்வுக் கூட்டத்தின் அடிப்படையிலும்; மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட 12 ஒருங்கிணைப்புக் குழுக்களின் கருத்துக்களின் அடிப்படையிலும்; 29.04.2020 அன்று நடத்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் காணொலிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலும்; மருத்துவ நிபுணர்கள் மற்றும் பொது சுகாதார வல்லுநர்கள் குழுவுடன் 30.04.2020 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலும், 01.05.2020 அன்று நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையின்படியும்,



01.05.2020 அன்று மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிவுரைகளின்படியும், 02.05.2020 அன்று எனது தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படியும், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுப்பதற்காக மாநில பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், ஊரடங்கு உத்தரவு 04.05.2020 முதல் 17.05.2020 நள்ளிரவு 12 மணி வரை கீழ்க்காணும் வழிமுறைகளுடன் நீட்டிப்பு செய்யப்படுகிறது:–

நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் (Containment Zones) தற்போது உள்ள நடைமுறைகளின்படி, எந்தவிதமான தளர்வுகளும் இன்றி ஊரடங்கு முழுமையாக கடைபிடிக்கப்படும்.

1) பெருநகர சென்னை காவல்துறை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்ட பணிகளுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்படுகிறது (நோய் கட்டுப்பாட்டு பகுதி தவிர – Except Containment Zones):

★ கட்டுமான பணி நடைபெறும் இடத்திலேயே கட்டுமான தொழிலாளர்கள் இருக்கும் பட்சத்தில், அக்கட்டுமான பணிகள் அனுமதிக்கப்படும்.

★ அனைத்து அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் கட்டுமான பணிகள் மற்றும் சாலை பணிகள் அனுமதிக்கப்படும்.

★ சிறப்பு பொருளாதார மண்டலங்கள், ஏற்றுமதி சார்ந்த தொழில் நிறுவனங்கள், ஏற்றுமதி நிறுவனங்கள் (SEZ, EOU & Export Units): சென்னை மாநகராட்சி ஆணையர் / மாவட்ட ஆட்சியர் ஆய்வுக்குப் பின், சூழ்நிலைக்கேற்ப, 25 சதவிகித பணியாளர்களுடன் (குறைந்தது 20 நபர்கள்) செயல்பட அனுமதிக்கப்படும். நிறுவனம் ஏற்பாடு செய்யும் வாகனங்களில் மட்டுமே பணியாளர்கள் வர வேண்டும்.

★ தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் (IT & ITeS): 10 சதவிகித பணியாளர்களை கொண்டு (குறைந்தது 20 நபர்கள்) செயல்பட அனுமதிக்கப்படும். நிறுவனம் ஏற்பாடு செய்யும் வாகனங்களில் மட்டுமே பணியாளர்கள் வர வேண்டும்.

★ அத்தியாவசிய பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள், காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

★ அத்தியாவசிய பொருட்கள் வழங்கும் மின் வணிக நிறுவனங்கள்

★ (e-Commerce), ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட நேரங்களில் செயல்படலாம்.

★ உணவகங்களில் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை, பார்சல் மட்டும் வழங்கலாம்.

★ அனைத்து தனிக் கடைகள் (Standalone and neighbourhood shops) (முடி திருத்தகங்கள்/ அழகு நிலையங்கள் தவிர), ஹார்டுவேர், சிமெண்ட், கட்டுமானப் பொருட்கள், சானிடரிவேர், எலெக்ட்ரிக்கல் பொருட்கள் விற்பனை செய்யும் தனிக் கடைகள், மொபைல் போன், கணிப்பொறி, வீட்டு உபயோகப் பொருட்கள், மின் மோட்டார், கண் கண்ணாடி விற்பனை மற்றும் பழுது நீக்குதல் உள்ளிட்ட தனிக்கடைகள், காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

★ பிளம்பர், எலக்ட்ரீஷியன், ஏசி மெக்கானிக், தச்சர் உள்ளிட்ட சுயதிறன் பணியாளர்கள், சிறப்புத் தேவைகள் உள்ளோருக்கான உதவியாளர்கள் (Home Care Providers), வீட்டு வேலை பணியாளர்கள் ஆகியோர், சென்னை மாநகராட்சி ஆணையர் / சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் உரிய அனுமதி பெற்று பணிபுரிய அனுமதிக்கப்படுவர்.

2) பெருநகர சென்னை காவல்துறை எல்லைக்குட்பட்ட பகுதி தவிர, தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் (நோய் கட்டுப்பாட்டு பகுதிகள் தவிர – Except Containment Zones), கீழ்க்கண்ட பணிகளுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்படுகிறது:

★ 50 சதவிகித பணியாளர்களை கொண்டு (குறைந்தபட்சம் 20 நபர்கள்) மாநகராட்சி மற்றும் நகராட்சிக்கு வெளியிலுள்ள பகுதிகளில், அதாவது ஊரக மற்றும் பேரூராட்சி பகுதிகளில், உள்ள அனைத்து தொழிற்சாலைகள் (ஜவுளித்துறை உட்பட) செயல்பட அனுமதிக்கப்படும்.

எதார்த்தம்

எல்லோர் வாழ்விலும் நாம் மரத்தடி வேராக இருக்க முடியாது, சிலர் வாழ்வில் உதிரும் இலையாகவும், சிலர் வாழ்வில் வெட்டப்படும் கிளையாகவும் இருந்து தான் ஆக வேண்டும். அது தான் எதார்த்தம்.

★ 15,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள பேரூராட்சிகளில் மட்டும், மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்து, சூழ்நிலைக்கேற்ப, ஜவுளித்துறை நிறுவனங்களை 50 சதவிகித பணியாளர்களை கொண்டு செயல்பட அனுமதிக்கலாம்.

★ SEZ, EOU, தொழிற் நகரியங்கள், தொழிற்பேட்டைகள் (ஊரகம், நகரம்):

★ 50 சதவிகித பணியாளர்களை கொண்டு செயல்பட அனுமதிக்கலாம். நகரப் பகுதிகளிலுள்ள தொழிற்பேட்டைகளில், ஜவுளித்துறை நிறுவனங்கள் இயங்க அனுமதி இல்லை.

★ நகரப்பகுதிகளில் உள்ள ஏற்றுமதி நிறுவனங்களை மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்து சூழ்நிலைக்கேற்ப 50 சதவிகித பணியாளர்களை கொண்டு செயல்பட அனுமதிக்கப்படும்.

★ மின்னணு வன்பொருள் (Hardware Manufactures) உற்பத்தி: 50 சதவிகித பணியாளர்களை கொண்டு செயல்பட அனுமதிக்கப்படும்.

★ கிராமப்புரங்களில் உள்ள ஒருங்கிணைந்த நூற்பாலைகள் (Spinning Mills) (ஷிஃப்ட் முறையில் தக்க சமூக இடைவெளியுடன்) 50 சதவிகித பணியாளர்களை கொண்டு செயல்பட அனுமதிக்கப்படும்.

★ நகரப்பகுதிகளில் உள்ள தோல் பொருட்கள் மற்றும் ஆடை ஏற்றுமதிக்கான டிசைனிங் மற்றும் சாம்பிள்கள் உருவாக்கம்: மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்து, 30 சதவிகித பணியாளர்களை கொண்டு செயல்பட அனுமதிக்கப்படும்.

★ தகவல் தொழில்நுட்பம் (IT & ITeS): 50 சதவிகித பணியாளர்கள், குறைந்தபட்சம் 20 நபர்களை கொண்டு செயல்பட அனுமதிக்கப்படும்.

★ நகர்புரங்களில் கட்டுமானப் பணிகள்: பணியிடத்திலேயே பணியாளர்கள் இருந்தால் மட்டும் அனுமதிக்கப்படும்; பணியாளர்களை ஒருமுறை மட்டும் வேறு இடத்தில் இருந்து அழைத்துவர அனுமதிக்கப்படும்.

★ அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் கட்டுமானப் பணிகள் மற்றும் சாலை பணிகள் அனுமதிக்கப்படும்.

★ பிளம்பர், எலக்ட்ரீஷியன், ஏசி மெக்கானிக், தச்சர் உள்ளிட்ட சுயதிறன் பணியாளர்கள் அனைவரும் மாவட்ட ஆட்சியரிடம் உரிய அனுமதி பெற்ற பின்னர் அனுமதிக்கப்படுவர்.

★ மாற்றுத்திறனாளிகள், முதியோர், நோயாளிகள் ஆகியோரின் சிறப்பு தேவைகளுக்கான உதவியாளர்கள், வீட்டு வேலை பணியாளர்கள் மாவட்ட ஆட்சியரிடம் உரிய அனுமதி பெற்று பணிபுரிய அனுமதிக்கப்படுவர்.

★ அச்சகங்கள் செயல்பட அனுமதிக்கப்படுகிறது.

★ கட்டுமானப் பணிகளுக்கு தேவையான ஹார்டுவேர், சிமெண்ட், கட்டுமானப் பொருட்கள், சானிடரிவேர், மின் சாதன விற்பனைக் கடைகள்: காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மட்டும் செயல்பட அனுமதிக்கப்படும். கட்டுமானப் பொருட்களை எடுத்துச் செல்ல எந்தவித தடையும் இல்லை.

★ மொபைல் போன், கணிப்பொறி, வீட்டு உபயோகப் பொருட்கள், மின் மோட்டார் ரிப்பேர், கண் கண்ணாடி விற்பனை மற்றும் பழுது நீக்குதல் உள்ளிட்ட அனைத்து தனிக்கடைகள், காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை மட்டும் செயல்பட அனுமதிக்கப்படும்.

★ கிராமப்புரங்களில் உள்ள அனைத்து தனிக் கடைகள், காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மட்டும் செயல்பட அனுமதிக்கப்படும்.

★ உணவகங்கள் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை பார்சல் மட்டும் வழங்கலாம். மின் வணிக நிறுவனங்கள் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டவாறு செயல்படலாம்.

★ நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் உள்ள மால்கள் (Malls) மற்றும் வணிக வளாகங்கள் (Market Complexes) தவிர்த்து, அனைத்து தனிக்கடைகள், காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை மட்டும் செயல்பட மாவட்ட ஆட்சியர் சூழ்நிலைக்கேற்ப அனுமதிக்கலாம்.

பொது

அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், மாநகராட்சி ஆணையர்களும் அரசால் அறிவுறுத்தப்பட்ட தனிநபர் இடைவெளியினை பின்பற்றியும், போதுமான கிருமிநாசினிகளை பயன்படுத்தியும், பணியாளர்கள், மற்றும் தொழிலாளர்கள் பாதுகாப்பாக பணிபுரிவதை

கண்காணிக்கவும், அரசால் வெளியிடப்பட்டுள்ள நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை (Standard Operating Procedures) தீவிரமாக கடைபிடிப்பதை உறுதிசெய்யவும் அறிவுறுத்தப்படுகிறது. ஊரடங்கு உத்தரவு தொடர்வதால், பொது இடங்களில், 5 நபர்களுக்கு மேல் மக்கள் கூடாமல் இருப்பதை கண்காணிக்கவும் அறிவுறுத்தப்படுகிறது.

ஏற்கெனவே அரசால் அனுமதிக்கப்பட்ட அனைத்து தளர்வுகளும் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ள வேளாண்மைப் பணிகள், வேளாண் சார்ந்த தொழில்கள் (Agro Processing), தொழில் மற்றும் வணிக செயல்பாடுகளும், மருத்துவப் பணிகள் மற்றும் அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ளும் துறைகள், வங்கிகள், அம்மா உணவகங்கள், ATM, ஆதரவற்றோர் இல்லங்கள் ஆகியவை எவ்வித தங்குதடையின்றி தொடர்ந்து முழுமையாக செயல்படலாம்.

கனிமம் மற்றும் சுரங்கப் பணிகள், கட்டுமானப் பணிகளுக்கு தேவையான பொருட்களை வழங்கும் செங்கல் சூளைகள், கல் குவாரிகள், எம்–சாண்ட், கிரஷர்கள் மற்றும் இவற்றிற்கான போக்குவரத்து ஆகியன செயல்படலாம்.

பெரும் தொழிற்சாலைகளும், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களும், கட்டுமான பணிகளுக்கும், பணிகளைத் தொடங்க மாவட்ட ஆட்சியர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியோரிடம் இணைய வழியில் விண்ணப்பித்து பணியாளர் மற்றும் வாகனங்களுக்கு அனுமதி சீட்டுகள் பெற வேண்டும். நகரப் பகுதிகளில் பணியாளர்களை நிறுவனங்கள், தாங்கள் இயக்கும் பிரத்யேக பேருந்துகள் / வேன்கள் மூலம் பணிக்கு அழைத்து வரலாம். அந்த வாகனங்களில் 50 சதவிகிதம் அளவிற்கு மட்டுமே தக்க தனிநபர் இடைவெளியை கடைபிடித்து, பணியாளர்களை அழைத்து வர வேண்டும்.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், கிராமப்புர தொழில்கள், தனிக்கடைகள் ஆகியவை செயல்பட தனி அனுமதி தேவையில்லை.

மத்திய அரசு மற்றும் மாநில அரசு அலுவலகங்கள், 33 சதவிகித பணியாளர்களுடன் தொடர்ந்து செயல்படும்.

ஏற்கெனவே நடைமுறையில் உள்ள கீழ்க்காணும் செயல்பாடுகளுக்கான தடைகள், மறு உத்தரவு வரும்வரை தொடர்ந்து அமலில் இருக்கும்:–

1. பள்ளிகள், கல்லூரிகள், பயிற்சி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்கள்.

2. வழிபாட்டுத் தலங்களில் பொதுமக்கள் வழிபாடு மற்றும் அனைத்து மதம் சார்ந்த கூட்டங்கள்.

3. திரையரங்குகள், கேளிக்கைக்கூடங்கள், மதுக்கூடங்கள், உடற்பயிற்சிக் கூடங்கள், கடற்கரை, சுற்றுலாத் தலங்கள், உயிரியல் பூங்காக்கள், அருங்காட்சியகங்கள், நீச்சல் குளங்கள், விளையாட்டு அரங்குகள், பெரிய அரங்குகள், கூட்ட அரங்குகள் போன்ற இடங்கள்.

4. அனைத்து வகையான சமய, சமுதாய, அரசியல், விளையாட்டு, பொழுதுபோக்கு, கல்வி, கலாச்சார நிகழ்வுகள், விழாக்கள், கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள்.

5. பொதுமக்களுக்கான விமான, இரயில், பொது பேருந்து போக்குவரத்து.

6. டாக்ஸி, ஆட்டோ, சைக்கிள் ரிக்ஷா.

7. மெட்ரோ இரயில், மாநிலங்களுக்கு இடையேயான பேருந்து போக்குவரத்து.

8. மாநிலங்களுக்கு இடையேயான பொதுமக்கள் போக்குவரத்து.

9. தங்கும் விடுதிகள் (பணியாளர் விடுதிகள் தவிர), தங்கும் ஹோட்டல்கள், ரிசார்ட்டுகள்.

10. இறுதி ஊர்வலங்களில் 20 நபர்களுக்கு மேல் பங்கேற்கக் கூடாது.

11. திருமண நிகழ்ச்சிகளுக்கு, தற்போது உள்ள நடைமுறைகள் தொடரும்.

அரசு வழங்கியுள்ள இந்த நடைமுறைகளை பின்பற்றி, மாவட்ட ஆட்சியர்கள் / சென்னை மாநகர ஆணையர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து, தொழிற்சாலைகளுக்கு தக்க அனுமதி வழங்கி, 06.05.2020 முதல் தொழிற்சாலைகள் செயல்பட நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். நோய்த் தொற்றின் பரவலை தமிழ்நாடு அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. நோய்த் தொற்று குறையக் குறைய, தமிழ்நாடு அரசு மேலும் பல தளர்வுகளை அறிவிக்கும்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு, பொதுமக்கள், முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

33,630 விவசாயிகளிடமிருந்து 836 நெல் கொள்முதல் நிலையங்களின் மூலம் 2,44,647 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது!

கொரோனா நோய் பரவலை தடுப்பதற்காக 24.03.2020 முதல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையிலும், விவசாயிகளின் நலன் கருதி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் விற்பனை செய்ய வரும் விவசாயிகள் மற்றும் கொள்முதல் நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு நோய்த்தொற்று ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் முகக்கவசம், கையுறைகள், மற்றும் சுத்திகரிப்பு திரவங்கள் ஆகியவை வழங்கப்பட்டு, 24.03.2020 முதல் 30.04.2020 முடிய 836 நெல் கொள்முதல் நிலையங்களில் 33,630 விவசாயிகளிடமிருந்து 2,44,647 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், நடப்பு கொள்முதல் பருவத்தில் 30.04.2020 வரை டெல்டா மாவட்டங்களில் 1,523 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 16,22,639 மெ.டன்னும், டெல்டா அல்லாத மாவட்டங்களில் 536 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 4,80,796 மெ.டன்னும், கூட்டுறவு துறை மற்றும் தேசிய நுகர்வோர் பாதுகாப்பு இணையத்தின் மூலம் 22 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 1,05,351 மெ.டன்னும், மொத்தம் 2,081 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 22,08,786 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாயிகளுக்கு மாநில அரசு வழங்கும் ஊக்கத்தொகையும் சேர்த்து மொத்தம் 4,177.40 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் 3,71,353 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். டெல்டா மாவட்டங்கள் மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் விவசாயிகளிடமிருந்து தொடர்ந்து நெல் கொள்முதல் செய்யும் பொருட்டு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஒரு விவசாயக் குடும்பத்திலிருந்து வந்த ஒரு விவசாயி என்பதாலும், வயல்வெளியில் சேற்றில் இறங்கி நாற்று நடவுப் பணிகளை தொடங்கி வைக்கக் கூடிய இராசியான முதலமைச்சராக இருப்பதாலும், விவசாயப் பெருங்குடி மக்களின் துயரங்களை நன்கு அறிந்தவர் என்ற முறையில் விவசாயிகளுக்குத் தேவையான விதை நெல், உரங்கள், இடுபொருட்கள் முதலானவற்றை அவ்வப்போது தேவையான அளவு கிடைக்க நடவடிக்கை மேற்கொண்டதாலும், நல்ல மழைப் பொழிவின் காரணமாகவும் விவசாயிகள் அதிக பரப்பளவில் நெல் விளைவித்ததன் காரணமாக தமிழக வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு மிக அதிக அளவில், அதாவது சென்ற ஆண்டு மொத்த கொள்முதல் அளவைக் காட்டிலும் இன்றைய தேதியிலேயே கூடுதலாக 20 சதவிகிதம் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், நடப்பு கே.எம்.எஸ் 2019–2020ஆம் பருவத்தில் மொத்தம் 28 இலட்சம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கொள்முதல் அளவானது தமிழக வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு அதிகபட்ச கொள்முதல் சாதனையாக அமையும். மேலும், மத்திய அரசால் வழங்கப்படும் குறைந்தபட்ச ஆதார விலையுடன் தமிழக அரசின் ஊக்கத் தொகையும் சேர்த்து வழங்கப்படுவதாலும், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கான தொகையானது



விவசாயிகளின் வங்கிக் கணக்கில் 24 மணி நேரத்திற்குள் நேரடியாக செலுத்தப்படுவதாலும் விவசாயப் பெருங்குடி மக்கள் தாங்கள் விளைவித்த நெல்லை தமிழக அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலேயே ஆர்வத்துடன் கொண்டு வந்து விற்பனை செய்து பயனடைந்து வருகின்றனர்.

மேலும், பொதுமக்களுக்கு தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களை இடைத்தரகர்கள் பதுக்கி அதிக விலைக்கு விற்க முயற்சிப்பதை தடுக்கும் வகையில் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையினரால் மாநிலம் முழுவதும் தீவிரமாக கண்காணித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, வெளி மாநிலங்களில் இருந்து வரப்பெறும் உணவுப் பொருட்களின் வரவினை முறைப்படுத்தவும், உயர் அதிகாரிகளை கொண்ட ஒருங்கிணைப்புக்குழு அமைத்து பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயராமல் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன கிடங்குகளில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை சேமித்து வைத்து வங்கிகள் மூலம் கடன் பெறவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இன்றளவில் இக்கிடங்குகளில் சுமார் ஒரு இலட்சம் மெ.டன் கிடங்கு கொள்ளளவு வசதி இருப்பதால் விவசாயிகள் இதனை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இதுவரை கண்டிராத கொரோனா வைரஸ் தொற்று உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இந்த வேளையில், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் ஆட்சி செய்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்து வரும் உறுதியான நடவடிக்கைகளினால் மேற்கண்ட சாதனைப் பணிகள் சாத்தியமாகியுள்ளது.



திரைப்படத்துறை நலவாரியத்தில் பதிவு செய்த உறுப்பினர்களுக்கு கொரோனா வைரஸ் நிதியுதவி ரூ.1,000 வழங்க ஆணை!

கொரோனா வைரஸ் நோய் பாதிப்பிலிருந்து மக்களைக் காப்பாற்ற அரசால் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமலுக்கு வந்தது. இதனால் வேலைவாய்ப்பு இழந்த மக்களுக்கு தமிழ்நாடு அரசு நிதி உதவி உள்ளிட்ட பல்வேறு நிவாரணங்களை வழங்கியது. இந்த ஊரடங்கு காலத்தில் பொதுமக்கள் பாதுகாப்புடனும், சிரமமின்றி வாழ்வதற்கான பல்வேறு நலத்திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அறிவித்தும், அதன்படி செயல்படுத்தியும் வருகிறார்கள்.

மேலும், கோவிட் – 19 வைரஸ் நோயால் வாழ்வாதாரம் இழந்து தவித்த பல்வேறு அமைப்புசாரா வாரியங்களைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு தலா ரூ.1,000 நிவாரணத் தொகை வழங்கி தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை தமிழக அரசு பாதுகாத்தது.

அந்த வகையில், தமிழ்நாடு திரைப்படத்துறையைச் சார்ந்த தொழிலாளர்களுக்கும் தலா ரூ.1,000 கொரோனா வைரஸ் நிதியுதவி வழங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 09.04.2020 அன்று ஆணையிட்டதற்கிணங்க, கொரோனா வைரஸ் நோயால் வருவாய் இழப்பு ஏற்பட்ட திரைப்படத்துறையினர் நலவாரியத்தில் பதிவு செய்யப்பட்ட 39 சங்கங்களைச் சேர்ந்த 21,679 உறுப்பினர்களுக்கு ரூ.1,000/– உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

எனவே, 13.04.2020 முதல் 11.05.2020 வரை 10,210 திரைப்படத் துறை நலவாரிய உறுப்பினர்களுக்கு ரூ.1,02,10,000/– நிவாரண உதவியாக உறுப்பினர்களின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஊரடங்கு காலம் தொடர்வதால் 13.05.2020 அன்று கூடுதலாக ரூ.1,000/– நிவாரண உதவி வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

மாநில அரசுகளின் அதிகாரத்தை பறிக்கும் மின்சார சட்டத் திருத்த மசோதாவை நிறுத்தி வைக்கவேண்டும்!

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் – 09.05.2020.

மின்சார சட்டத்திருத்த வரைவு குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ள மத்திய மின்துறை அமைச்சகம், அனைத்து மாநிலங்கள் மற்றும் பிற பங்குதாரர்களிடமிருந்து கருத்துகளை கேட்டுள்ளது. தன்னிச்சையாக இயங்கும் மின்துறையைக் கொண்டுள்ள தமிழக அரசு சார்பாக, இதுகுறித்து சில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாநில அரசுகள் தனது மின்வாரிய அமைப்புகளோடு இது குறித்து விரிவான ஆலோசனை நடத்த வேண்டியுள்ளது. இருந்தும் மாநில மின்சாரத்துறையைப் பொறுத்தமட்டில் அது சுயேட்சையாக செயல்படும் போக்கில் நேரடி தாக்கத்தை உண்டுபண்ணும் என்ற கவலை குறித்து முக்கிய சில கருத்துக்களை தங்களின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த உத்தேச மின்சார சட்டத்திருத்த மசோதா, மாநில அரசுக்கு இருக்கும் குறிப்பிட்ட சில அதிகாரங்களை எடுத்துவிடும். அதாவது பறித்துவிடும் என்பது 12.11.2018ஆம் தேதியிட்ட என்னுடைய கடிதத்தில் தெளிவுபடுத்தியுள்ளேன். மத்திய அரசு கொண்டுவந்திருக்கும் மின்சார சட்டத்திருத்த மசோதாவில் இருக்கும் புதிய திருத்தங்கள் மாநில கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிராகவும், மாநில அரசுகளின் அதிகாரங்களில் தலையிடுவதாகவும் உள்ளது.

வீட்டு உபயோக நுகர்வோரையும், விவசாயிகளையும் பாதிக்கும் என்பதால் இந்த மின்சார சட்டத்திருத்த மசோதாவை உடனடியாக கைவிடவேண்டும். விவசாயத்துக்கு இலவச மின்சாரம் வழங்குவது மாநில அரசின் உரிமையைச் சார்ந்தது. அதை மாநில அரசிடமே விட்டுவிட வேண்டும். விவசாயிகளுக்கான மின்சார மானியத் தொகையை வழங்கும் முறையை தமிழக அரசே தீர்மானிக்க வகை செய்ய வேண்டும். அது மட்டுமல்லாமல் மின்சார சட்டத்திருத்த மசோதாவில் தெரிவிக்கப்பட்டிருக்கும் சில ஷரத்துகள், மாநில அரசுகளின் மின் துறைக்கு பல்வேறு சிரமங்களை ஏற்படுத்தும் என்பதாலும், மேலும், சில அம்சங்கள் மின்சாரத்தைப் பயன்படுத்தும் பொதுமக்களுக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது. குறிப்பாக இதுபோன்ற பேரிடர் காலத்தில் இது மேலும், சிரமத்தை ஏற்படுத்தும். எனவே, இதுபோன்ற பேரிடர் காலத்தில், புதிய மின்சார சட்டத்திருத்த மசோதாவைக் கொண்டுவர இது சரியான காலமாக இருக்காது.

மேலும், கொரோனா தடுப்புப் பணிகளில் நாட்டில் உள்ள அனைத்து மாநில அரசுகளும் கவனம் செலுத்துவதால், மத்திய அரசு அனுப்பியிருக்கும் சட்டத்திருத்த மசோதா மீது ஆலோசிக்க அவகாசம் தேவை. அவசர கதியில் சட்டத் திருத்தம் வந்தால் மாநில மின் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படும். எனவே, புதிய சட்டத்திருத்த மசோதாவை மத்திய அரசு நிறுத்தி வைக்க வேண்டும். பேரிடர் காலம் முடிந்த பிறகு இதுபற்றி தமிழ்நாடு அரசு ஆலோசித்து பரிந்துரைகளை அனுப்பும்.

9 ஆயிரம் வெளி மாநில தொழிலாளர்கள், 8 இரயில்களில் அவரவர் மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 11.05.2020

வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்து பணிபுரியும் வெளி மாநில தொழிலாளர்களை விருப்பத்தின் அடிப்படையில், அவரவர் மாநிலங்களுக்கு, சம்மந்தப்பட்ட மாநில அரசின் அனுமதியுடன், படிப்படியாக அனுப்பி வைக்க தமிழ்நாடு அரசு அனைத்து விதமான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

இதுவரை 9 ஆயிரம் வெளி மாநில தொழிலாளர்கள், சம்மந்தப்பட்ட மாநிலங்களின் ஒப்புதலுடன் 8 இரயில்களில் அவரவர் மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மீதமுள்ள வெளி மாநில தொழிலாளர்களும் சம்மந்தப்பட்ட மாநிலங்களின் ஒப்புதலுடன் இரயில்கள் மூலம் அவரவர் மாநிலங்களுக்கு ஒரு வார காலத்திற்குள் அனுப்பி வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, அதுவரை வெளி மாநில தொழிலாளர்கள் முகாம்களிலேயே தங்கியிருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை உண்டாக்கும்
கபசுரக் குடிநீர்

கொரோனா வைரஸ் தொற்று நோயினைத் தடுக்கும் விதமாக மத்திய மற்றும் மாநில அரசுகள் பல உத்திகளைக் கையாண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மத்திய ஆயுஷ் அமைச்சகம் கோவிட்–19 தொற்று நோயினை தடுப்பதற்கு கபசுரக் குடிநீர், நிலவேம்பு குடிநீரை பொதுமக்கள் அருந்தி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வழிகாட்டியுள்ளது.

கபசுர குடிநீர் சூரணம் 15 வகையான மூலிகைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

தயாரித்தல் மற்றும் அருந்தும் முறை :

1. 300 மி.லி. நீருடன் ஒரு தேக்கரண்டி (5 கிராம்) அளவிற்கு இந்த சூரணத்தைச் சேர்த்து மிதமான சூட்டில் கொதிக்க வைத்து 30 மி.லி.ஆக வற்றி வரும் வரை காய்ச்சி, பின் வடிகட்டி அருந்தவேண்டும்.
2. இக்கசாயம் மிகுந்த கசப்பு தன்மை உடையது. அதனால் குழந்தைகளுக்கு கசாயம் கொடுத்தபின் சிறிது தேன் கொடுப்பது நல்லது.
3. பெரியவர்கள் 30 மி.லிட்டரும், 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 10 மி.லி. அருந்தவேண்டும்.
4. ஏற்கெனவே வேறு ஏதாவது நீண்ட நாள் நோயினால் பாதிக்கப் பட்டவர்கள் மற்றும் வயிறு தொடர்பான பிரச்சினை உள்ளவர்கள் மருந்துவரின் ஆலோசனைக்கேற்ப செயல்படவேண்டும்.
5. கபசுர குடிநீர் அருந்துவதன் மூலம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து கொரோனா போன்ற வைரஸ் நோய் தொற்றிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ளலாம்.

ரூ.5.48 கோடி மதிப்பீட்டில், நெஞ்சக தொற்று நோய்களை கண்டறிய நடமாடும் அதிநவீன எக்ஸ்-ரே கருவி பொருத்தப்பட்ட 14 வாகனங்கள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமைச் செயலகத்தில் மக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார்கள்– 11.05.2020.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 11.05.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் தேசிய நல வாழ்வு குழுமத்தின் சார்பில் 5 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நெஞ்சக தொற்று நோய் மற்றும் கோவிட்–னால் ஏற்படும் நெஞ்சக தொற்று நோய்களை துரிதமாக கண்டறிய நடமாடும் அதிநவீன எக்ஸ்ரே கருவி பொருத்தப்பட்ட 14 வாகனங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக துவக்கி வைக்கும் அடையாளமாக 5 வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்த நடமாடும் அதிநவீன எக்ஸ்ரே கருவி பொருத்தப்பட்ட வாகனங்களின் மூலம் நோயாளிகளின் இருப்பிடத்திற்கே சென்று எக்ஸ்ரே எடுப்பதுடன், அப்பரிசோதனை முடிவினை மருத்துவர்கள் துரிதமாக கண்டறிந்து சிகிச்சை அளித்திடவும் இயலும். இன்னும் பிற நெஞ்சக நோய்களான ஆஸ்துமா, நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய்கள் (Chronic Obstructive Pulmonary Disease), தொழிற்சார்ந்த நுரையீரல் நோய்களான சிலிக்கோசிஸ், பாகோசிஸ் போன்றவற்றை ஆரம்பத்திலேயே கண்டறியவும் இவ்வாகனம் பயன்படுத்தப்படும்.

வெற்றி

தொடர் தோல்விகள் உன்னை பயமுறுத்தும் போதும்
உன் முயற்சியை ஒரு போதும் கைவிடாமல்
விடாமுயற்சியுடன் போராடியவர்களுக்கே வெற்றி தேடி தரும்.

தனியார் நிறுவனங்கள் 33 சதவீத பணியாளர்களுடன் செயல்படலாம்!

தமிழ்நாட்டில் கொரோனா நோய்த் தொற்றை தடுப்பதற்காக மாநில பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், ஊரடங்கு உத்தரவு 24.03.2020 முதல் அமலில் இருந்து வருகின்றது. கடந்த 02.05.2020 அன்று தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையிலும், மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிவுரைகளின்படியும், பெருநகர சென்னை காவல்துறையின் எல்லைக்குட்பட்ட பகுதிகள் மற்றும் தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களில் பல்வேறு பணிகளுக்கு வரைமுறைகளுடன் அனுமதி அளிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு முழுவதும் (நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகள் தவிர) கீழ்க்காணும் பணிகள், 11.05.2020 திங்கள்கிழமை முதல் குறிப்பிடப்பட்ட நேரத்தில் செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.

★ அத்தியாவசிய பொருட்களான காய்கறிகள், மளிகைப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் பெருநகர சென்னை காவல்துறை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை செயல்படும். பிற தனிக்கடைகள் (All Standalone and Neighbourhood shops) காலை 10.30 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும்.

★ அத்தியாவசிய பொருட்களான காய்கறிகள், மளிகைப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் பெருநகர சென்னை காவல்துறை எல்லைக்குட்பட்ட பகுதிகளை தவிர்த்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பகுதிகளிலும், காலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை செயல்படும். பிற தனிக்கடைகள் (All Standalone and Neighbourhood shops) காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை செயல்படும்.

★ சென்னை மாநகராட்சி உட்பட தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் (நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகள் தவிர) தேனீர் கடைகள் (Tea Shops) பார்சல் சேவைக்கு மட்டும், காலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படுகிறது. தேனீர் கடைகளில் சமூக இடைவெளியை தவறாமல் கடைபிடிக்க வேண்டும். மேலும், தினமும் 5 முறை கிருமிநாசினி தெளித்து, கடையை சுத்தமாகவும் சுகாதரமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். கடையில், வாடிக்கையாளர்கள் நின்றோ, அமர்ந்தோ, ஏதும் உட்கொள்ள அனுமதி இல்லை. இதை முறையாக கடைபிடிக்க தவறும் தேனீர் கடைகள் உடனடியாக மூடப்படும்.

★ பெட்ரோல் பம்புகள் பெருநகர சென்னை காவல்துறை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும்.

★ பெட்ரோல் பம்புகள் பெருநகர சென்னை காவல்துறை எல்லைக்குட்பட்ட பகுதிகளை தவிர்த்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பகுதிகளிலும், காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை செயல்படும். தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள பெட்ரோல் பம்புகள் 24 மணி நேரமும் செயல்படும்.

★ பெருநகர சென்னை காவல்துறை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து தனியார் நிறுவனங்கள் 33 சதவிகித பணியாளர்களுடன் காலை 10.30 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும். பெருநகர சென்னை காவல்துறை எல்லைக்குட்பட்ட பகுதிகளை தவிர்த்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பகுதிகளிலும்,

அனைத்து தனியார் நிறுவனங்கள் 33 சதவிகித பணியாளர்களுடன் காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்படும்.

அரசால் அறிவுறுத்தப்பட்ட தனிநபர் இடைவெளியை பின்பற்றுவதையும், போதுமான கிருமிநாசினிகளை பயன்படுத்தி பணிபுரிவதையும், பணியாளர் மற்றும் தொழிலாளர்கள் பாதுகாப்பாக பணிபுரிவதையும், அரசால் வெளியிடப்பட்டுள்ள நிலையான செயல்பாட்டு வழிமுறைகளை (Standard Operation Procedures) தீவிரமாக கடைபிடிப்பதையும், கண்காணிக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், மாநகராட்சி ஆணையாளர்களும், காவல்துறையினரும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அரசால் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட அனைத்து தளர்வுகளும், தடைகளும் மறு உத்தரவு வரும் வரை தொடர்ந்து முழுமையாக கடைபிடிக்கப்படும்.

கொரோனா நோய்த் தொற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளுக்கு பொதுமக்களும், தனியார் நிறுவனங்களும் முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

புற உலக சிந்தனையற்ற குழந்தைகளின் பெற்றோர்களுக்கு உதவுவதற்காக 11 வகையான பயிற்சிப் பொருட்கள் மற்றும் 2 வகையான சிறப்பு உணவுப் பொருட்கள் உள்ளடங்கிய சிறப்பு மறுவாழ்வு பெட்டகம் வழங்கப்படும்!

தமிழ்நாட்டில் 19 ஆரம்பகால பயிற்சி மையங்களில் 500 புற உலக சிந்தனையற்ற குழந்தைகளுக்கு ஆரம்ப நிலை பயிற்சிகள் வழங்கப்படுகிறது. புற உலக சிந்தனையற்ற குழந்தைகள் ஒளி, சத்தம் மற்றும் தொடுதலுக்கு மிகுந்த உணர்திறன் அல்லது குறைந்த உணர்திறன் கொண்டவர்கள். அவர்களுக்கு தொடர்ச்சியான உணர்திறன் செயலாக்கம் மற்றும் மேம்பாட்டு சிகிச்சை தேவைப்படுகிறது. மேலும், தற்போது பரவிவரும் COVID–19 தொற்று நோய் காரணமாக அரசால் அமல்படுத்தப்பட்ட ஊரடங்கின் போது இக்குழந்தைகளை, இந்த குழந்தைகளின் பெற்றோர்கள் வீட்டிற்குள்ளே வைத்து பராமரிப்பது கடினம்.

புற உலக சிந்தனையற்ற குழந்தைகளின் பெற்றோர்களுக்கு உதவுவதற்காக வீட்டிலேயே வைத்து பயன்படுத்தும் வகையில், உணர்திறன் செயலாக்கம் மற்றும் மேம்பாட்டு மருத்துவ மறுவாழ்விற்கான பயிற்சி வழங்கிடுவதற்காக பந்து, விசில், டார்ச் லைட், நுரைக்குமிழ், லிங்க் (இணைப்பு) / கட்டுமான தொகுதிகள், பாசிமணி (Beads), க்ரையான்கள் உள்ளிட்ட 11 வகையான பயிற்சி பொருட்களும், 2 வகையான சிறப்பு உணவு பொருட்களும் உள்ளடங்கிய சிறப்பு மறுவாழ்வு பயிற்சி பெட்டகம் பெற்றோர்களுக்கு வழங்க தயார் செய்யப்பட்டு 19 மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இந்த பயிற்சியின் விளைவாக, புற உலக சிந்தனையற்ற குழந்தைகளுக்கு சிறந்த கவனம் செலுத்துதல், மேம்பட்ட நடவடிக்கை மற்றும் பதட்டத்தைக் குறைக்க இயலும். இந்த சிறப்பு மறுவாழ்வு பயிற்சி பெட்டகம் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள் மூலம் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் ஆரம்ப நிலை பயிற்சி மையங்களுக்கு வழங்கப்படும். ஒரு சிறப்பு மறுவாழ்வு பயிற்சி பெட்டகம் விலை ரூ.1,000 வீதம், 500 புற உலக சிந்தனையற்ற குழந்தைகளின் பெற்றோர்களுக்கு வழங்க மொத்த செலவு ரூ.5 இலட்சம் மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து இதற்கான நிதி அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் அனைத்து அலுவலர்கள் சிறப்பான முறையிலே பணியாற்றியதால்தான் தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது!

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
13.05.2020 அன்று தலைமைச் செயலகத்தில்,
தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க
பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு
வரும் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன்
காணொலிக் காட்சி மூலமாக
ஆய்வு மேற்கொண்டு ஆற்றிய
நிறைவுரை.

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் மாவட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், இன்னும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கின்றீர்கள். அதையெல்லாம் அரசு தீர பரிசீலித்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சில ஆலோசனைகளை நாங்கள் வழங்கி இருக்கின்றோம். அதையும் பின்பற்றி இந்த கொரோனா வைரஸ் தடுப்பு பணியிலே நீங்கள் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

வேளாண்மைத் தொழிலை பொறுத்தவரைக்கும், ஏற்கெனவே விலக்கு அளிக்கப்பட்டு, அந்தப் பணிகள் அனைத்தும் சிறப்பான முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களை கொண்டு சென்று விற்பனை

செய்வதற்கு எந்தவித தடையும் இல்லாமல் இன்றைக்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சியோடு இருக்கின்றார்கள். தாங்கள் விளைவித்த விளைபொருட்களை உரிய முறையிலே விற்க அரசு ஏற்பாடு செய்திருக்கின்றது. அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் துணை நின்று அந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைகின்ற அளவிற்கு அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதேபோல, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகளை சந்தைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு வேளாண்துறை அதிகாரிகளுக்கு இந்த நேரத்திலே பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அதற்கு உறுதுணையாக இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரசினுடைய ஆலோசனையின்படி அத்தியாவசியப் பொருட்கள் உரிய நேரத்திலே அனைத்து மாவட்டங்களிலும் தங்குதடையில்லாமல் மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இதனால் எந்த இடத்திலும் மக்களுக்கு உணவு பிரச்சினை இல்லை என்ற நிலையையும் நாம் ஏற்படுத்தி கொடுத்திருக்கின்றோம்.

மருத்துவ சிகிச்சை அளிப்பதிலே இந்தியாவிலேயே நாம் முதன்மையாக விளங்கி கொண்டிருக்கின்றோம். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, நோய் அறிகுறி தென்பட்ட உடனேயே அவர்களாக மருத்துவமனையிலே சேர்ந்து சிகிச்சை பெற்றால் பூரண குணமடைந்து விடுகிறார்கள். பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் வந்தவர்கள் மூலமாகத் தான் இந்த நோய் தொற்று பரவல் அதிகமாக ஏற்பட்டுள்ளது. அந்த நோய் பரவலை தடுப்பதற்கு அரசு எடுத்த முயற்சி வெற்றிகரமாக அமைந்தது. இன்றைக்கு படிப்படியாக மருத்துவமனையிலே சேர்க்கப்பட்ட நோயாளிகள் குணமடைந்து வீடு திரும்பியிருக்கின்றார்கள். இருந்தாலும் இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பலர் குறிப்பிட்டது என்னவென்றால், தங்கள் மாவட்டத்தில் எந்த வைரஸ் பரவலும் இல்லை. அதேவேளையிலே தங்கள் மாவட்டத்திலிருந்து வாழ்வாதார பிரச்சினை காரணமாக வேறு மாவட்டத்திற்கு சென்று தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். அப்படி பணிபுரிகின்றபோது அவர்களுக்கு தொற்று ஏற்பட்டு அவர்கள் சொந்த மாவட்டத்திற்கு திரும்புகின்ற போது தொற்று எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது என்பதாகும்.

ஆகவே, நம்முடைய தமிழகத்தை பொறுத்தவரைக்கும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி இன்னும் பல மாவட்டங்களிலிருந்து பெரும்பாலான தொழிலாளர்கள் தொழில் செய்வதற்காகவும், தொழிலாளர்களாக பணிபுரிவதற்காகவும் சென்னைக்கு வருகின்றார்கள். அவர்கள் இந்த ஊரடங்கு அமல்படுத்தப்பட்ட காரணத்தினாலே சொந்த மாவட்டங்களுக்கு திரும்பிய காரணத்தினாலே, அங்கே அவர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்ட போது, பரிசோதனையிலே பெரும்பாலானவர்களுக்கு தொற்று கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. அதனால் நான் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களிலும், மற்ற மாவட்டங்களிலும் இந்த தொற்று ஏற்பட்டிருக்கின்ற செய்தியை நாம் அறிந்திருக்கின்றோம். அவர்கள் எல்லாம் குணமடைய செய்வதற்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இன்னும் மூன்று நான்கு நாட்களில் சென்னையிலிருந்து தங்களுடைய சொந்த மாவட்டங்களுக்கு சென்ற அனைவருக்குமே பரிசோதனை செய்யப்பட்டு அதன்மூலமாக அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு, குணமடைய செய்வோம்.

இன்றைக்கு சென்னையைப் பொறுத்தவரைக்கும், நோய் பரவுவதற்கு காரணம் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல சென்னை மாநகரம் அதிகமாக மக்கள் வசிக்கின்ற பகுதியாக இருக்கின்றது. சென்னை மாநகராட்சியில் மட்டும் 26 இலட்சம் பேர் குடிசைப் பகுதியிலே வசித்து வருகின்றார்கள். நெருக்கமான பகுதி, குறுகலான தெரு, அதிகமான மக்கள் வசிக்கின்றார்கள். ஆகவே, எளிதில் நோய் தொற்று ஏற்படுகின்ற சூழ்நிலை உள்ளது.

அதுமட்டுமல்லாமல், சென்னையில் உள்ள கோயம்பேடு மார்க்கெட் ஆசியாவிலேயே மிகப்பெரிய மார்க்கெட். 1996ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, 3,941 கடைகள் இங்கே இயங்கி கொண்டிருக்கின்றன. இந்த மார்க்கெட்டில் சுமார் 20,000 பேர் பணிபுரிந்து வருகின்றார்கள். அதிலே வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள், லாரிகளில் வருகின்ற

கடமை

கடமையென்பது வாழ்க்கையை வாழ்ந்து முடிப்பதற்கு அல்ல,
வாழ வழியில்லாமல் இருக்கும் எனது தலைமுறைக்கு வாழ வழி வகிப்பதே.

சரக்குகளை இறக்குகின்ற தொழிலாளர்கள், சில்லறை வியாபாரிகள் கொண்டு வருகின்ற வாகனங்களுக்கு காய்கறிகளை ஏற்றக்கூடிய தொழிலாளர்கள் என சுமார் 20,000 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள்.

இங்கு தொற்று ஏற்படும் என்று ஏற்கெனவே நம்முடைய உயரதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் 19.03.2020 அன்று சி.எம்.டி.ஏ. அதிகாரிகள் வியாபாரிகள் சங்க நிர்வாகிகளோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இங்கே அதிகமான பேர் குழுமியிருக்கின்ற காரணத்தினாலே நோய் தொற்று ஏற்பட்டுவிடும், ஆகவே அரசு உங்களுக்கு மாற்று இடம் ஏற்பாடு செய்து கொடுக்கும், நீங்கள் தற்காலிக மார்க்கெட் அமைக்கக்கூடிய பகுதியிலே சென்று காய்கறி விற்பனைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால் வியாபாரிகள் சங்க நிருவாகிகள் அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டனர். நாங்கள் இங்கேதான் வியாபாரம் செய்ய முடியும். ஏனென்றால் வேறு பகுதியிலே சென்று விற்பனையை துவங்கினால் மிகுந்த நஷ்டத்திற்கு உள்ளாகிவிடுவோம் என்ற அச்சத்தின் காரணமாக அவர்கள் சென்னைக்கு வெளியிலே அரசால் அமைக்கக்கூடிய தற்காலிக மார்க்கெட்டிற்கு செல்ல விரும்பவில்லை.

தொடர்ந்து பலமுறை பேச்சுவார்த்தை நடைபெற்றது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 29.03.2020 அன்று நேரடியாக கோயம்பேடு மார்க்கெட்டிற்கு சென்று அங்கிருக்கின்ற நிலவரத்தை பார்வையிட்டார்கள். அப்பொழுதும் அங்கே இருக்கின்ற சங்க நிருவாகிகளிடத்திலே, இங்கே அதிக அளவிலேயே மக்கள் கூடுகின்றார்கள், ஆகவே தொற்று ஏற்பட்டுவிடும். தேர்வு செய்யப்படுகின்ற தற்காலிக மார்க்கெட்டிற்கு நீங்கள் சென்றால் உங்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும், தொற்றை தடுக்க முடியும் என்று அவர்கள் எடுத்து சொன்னார்கள். ஆனால் அவர்கள் அதை பொருட்படுத்தவில்லை.

அதுமட்டுமல்லாமல் தொடர்ந்து அரசு முயற்சி செய்து வந்தது. 06.04.2020 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திலே அவருடைய அறையிலே வியாபாரிகள் சங்க நிருவாகிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார். வியாபாரிகளும் பாதிப்பார்கள், தொழிலாளர்களும் பாதிப்பார்கள், வருகின்ற மக்களும் பாதிக்கப்படுவார்கள். இதையெல்லாம் உணர்ந்து அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு நீங்கள் துணை நிற்க வேண்டும். அரசு அமைக்கின்ற அந்த தற்காலிக மார்க்கெட்டிற்கு நீங்கள் செல்கின்ற போது உங்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும். அதனால் இந்த தொற்று பரவலை தடுக்க முடியும் என்று எடுத்துச் சொன்னார்கள். ஆனால் சங்க நிருவாகிகள் நாங்கள் அங்கே இருந்து வெளியிலே சென்று வியாபாரம் செய்தால் நஷ்டத்திற்கு ஆளாகிவிடுவோம் என்ற அச்ச உணர்விலேயே அரசு சொல்கின்ற கருத்தை ஏற்கவில்லை. மீண்டும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் 11.04.2020 அன்று கோயம்பேடு சங்க நிருவாகிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார். இங்கே இருக்கின்ற பிரச்சினையை உணர்ந்து நீங்கள் அரசிற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று அப்பொழுதும் எடுத்துச் சொன்னார். இன்றைக்கு தமிழகம் முழுவதும் இருக்கின்ற காய்கறி கடைகளை நாங்கள் மாற்றி அமைத்திருக்கின்றோம். ஆனால் கோயம்பேடு பகுதியிலே யாரும் முகக்கவசம் அணிவதில்லை, சமூக இடைவெளியை பின்பற்றுவதில்லை. ஆகவே, நீங்கள் வேறு இடத்திற்கு மாற்றி சென்றால் தான் இந்த நோய் பரவலை தடுக்க முடியும் என்ற கருத்தை சொன்னார். ஆனால் அவர்கள் அதை ஏற்கவில்லை. அரசு ஏற்பாடு செய்யக்கூடிய தற்காலிக காய்கறி கடைக்கு சென்றால் தங்களுடைய தொழில் கடுமையாக பாதிக்கும், அந்த நிலையை தான் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி கொண்டிருந்தார்கள். இருந்தாலும் அரசாங்கம் எடுத்து கூறியது. தொற்று பாதிக்கப்பட்டுவிட்டால் ஒட்டுமொத்தமாக கடைகளை மூடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும், இதையெல்லாம் நீங்கள் உணர்ந்து அரசிற்கு ஒத்துழைப்பு கொடுத்து, அரசு ஏற்படுத்துகின்ற தற்காலிக மார்க்கெட்டிற்கு சென்றால் இந்த பிரச்சினை தீர்க்கப்படும், நீங்கள் சிறப்பாக வியாபாரம் செய்யலாம், தொற்றும் ஏற்படாமல் இருக்கும் என்ற செய்தியை சொன்னார். ஆனால், அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மீண்டும் 24.04.2020 அன்றும் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது.

அதுமட்டுமல்லாமல் நம்முடைய மாநகராட்சி ஆணையர் அவர்களும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதோடு இங்கே இருக்கின்ற உயரதிகாரிகள் நம்முடைய காவல்துறை ஆணையாளர் அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் அவர்கள்,

சேமிப்பு

இன்றைய சேமிப்பு, நாளைய புது வாழ்க்கைக்கான பாதுகாப்பு
சிறு துளிதான் நாளைய விடியலின் பெரு வெள்ளம்.

“அரசைப் பொறுத்தவரைக்கும் இந்த கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க கடுமையான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பலமுறை கோயம்பேடு மார்க்கெட் சங்க நிருவாகிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால், அங்கு இருக்கின்றவர்கள் தங்களுடைய விற்பனை பாதிக்கப்பட்டு விடும், அதனால் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகிவிடுவார்கள் என்ற எண்ணத்தில் இருந்த காரணத்தினாலே அவர்கள் வேறு இடத்திற்கு செல்ல மறுத்தார்கள். இருந்தாலும், அரசு இந்த நோய் பரவல் ஏற்பட்டவுடனேயே அந்த மார்க்கெட் மூடப்பட்டு, அந்த வியாபார சங்கங்களை அழைத்து இனி இங்கே காய்கறி விற்பனை நடக்க அரசு அனுமதிக்காது என்ற செய்தியைச் சொன்னவுடன் அவர்களும் ஒத்துக் கொண்டார்கள்.”

வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள், சிஎம்டிஏ அதிகாரிகள் நேரடியாக அங்கே சென்று கூட அவர்களிடத்திலே வலியுறுத்தி சொன்னார்கள்.

நோய் தொற்று ஏற்பட்டுவிட்டால் இங்கே தொழில் செய்து வருபவர்கள் அத்தனைபேரும் கடுமையாக பாதிக்கப்பட்டுவிடுவீர்கள். ஆகவே, மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களுடைய ஆலோசனையின்படி தான் நாங்கள் வந்திருக்கின்றோம். அத்தனை வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும், தொழில் செய்கின்ற தொழிலாளர்கள் அத்தனைபேருக்கும் எடுத்துச் சொல்லி, நீங்கள் இந்த மார்க்கெட்டை அரசால் வெளியிலே தேர்வு செய்த இடத்திற்கு நீங்கள் சென்றால் இந்த நோய் பரவலை தடுக்க முடியும் என்ற கருத்தை சொன்னார்கள். அதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். ஆகவே, இப்படி பலமுறை கோயம்பேடு சந்தை நிருவாகிகளை அழைத்து அரசு பேச்சுவார்த்தை நடத்தியது. அரசு கடும் முயற்சி எடுத்தது. ஆனால் வியாபாரிகளை பொறுத்தவரைக்கும் வேறு இடத்திற்கு சென்று மார்க்கெட்டை துவங்கினால் தங்களுடைய வியாபாரம் பாதிக்கப்பட்டுவிடும், நஷ்டத்திற்கு ஆளாகிவிடும் என்ற எண்ணத்திலே இருந்துவிட்ட காரணத்தினால் தான் இந்த பிரச்சனை ஏற்பட்டது.

இன்றைக்கு கோயம்பேட்டில் இருந்து அதிகமான பேர் வெளிமாவட்டத்திற்கு சென்ற காரணத்தினாலே, அந்த மாவட்டங்களிலே நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது. சென்னையிலும் இந்த எண்ணிக்கை உயர்ந்ததற்கு காரணம் இதுதான்.

அரசைப் பொறுத்தவரைக்கும் இந்த கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க கடுமையான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பலமுறை கோயம்பேடு மார்க்கெட் சங்க நிருவாகிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால், அங்கு இருக்கின்றவர்கள் தங்களுடைய விற்பனை பாதிக்கப்பட்டு விடும், அதனால் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகிவிடுவார்கள் என்ற எண்ணத்தில் இருந்த காரணத்தினாலே அவர்கள் வேறு இடத்திற்கு செல்ல மறுத்தார்கள். இருந்தாலும், அரசு இந்த நோய் பரவல் ஏற்பட்டவுடனேயே அந்த மார்க்கெட் மூடப்பட்டு, அந்த வியாபார சங்கங்களை அழைத்து இனி இங்கே காய்கறி விற்பனை நடக்க அரசு அனுமதிக்காது என்ற செய்தியைச் சொன்னவுடன் அவர்களும் ஒத்துக் கொண்டார்கள். திருமழிசை பகுதியிலே மார்க்கெட் அமைக்கப்படும் என்ற செய்தியைச் சொன்னோம். அவர்களும் ஏற்றுக் கொண்டு அந்தப் பகுதிக்கு அவர்கள் ஒத்துழைப்பை நல்கினார்கள். அங்கே மார்க்கெட் அமைக்கப்பட்டு இப்பொழுது 10.05.2020 மாலையிலிருந்து அந்த காய்கறி மார்க்கெட் பணியை துவங்கி இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆகவே, அரசைப் பொறுத்தவரைக்கும் இந்த நோய் பரவலைத் தடுப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் எடுத்தது. அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை, அதனால் கோயம்பேடு பகுதியிலே நோய் பரவல் அதிகமாக ஏற்பட்டுவிட்டது என்று இன்றைக்கு பல ஊடகங்களில், செய்திகளிலும் தவறான செய்திகளை பரப்பி வருகிறார்கள். அது உண்மைக்கு புறம்பானது. நான் சொன்ன செய்திகளின் அடிப்படையிலே பல்வேறு முயற்சிகள் அரசால் எடுக்கப்பட்டது. ஆனால் அங்கிருக்கின்ற வியாபார நிருவாகிகள் தங்கள் தொழில் பாதிக்கப்பட்டு விடும் என்ற அச்சத்தின் காரணமாக அவர்கள், அரசால் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட காய்கறி

நேர்மை

நேர்மையென்பது அடுத்தவர்களிடம் எதிர்பார்ப்பது மட்டுமல்ல, நம்மிடம் இருக்கவேண்டிய பொதுவான அடிப்படை குணமும் தான்.

மார்க்கெட் செல்ல மறுத்தார்கள், இதுதான் உண்மை நிலை என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்துகின்றேன்.

இன்றைக்கு வெளிமாநில தொழிலாளர்கள் அதிகமாக தமிழகத்திலே பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் தங்களுடைய சொந்த மாநிலத்திற்குச் செல்வதற்காக விருப்பம் தெரிவித்தார்கள். அவர்களை அவர்களுடைய சொந்த மாநிலத்திற்கு அனுப்புவதற்கு முழு ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்கள் செல்கின்ற பயணச் செலவு முழுவதும் அரசே ஏற்றுக் கொள்கிறது, இரயில்வே கட்டணம் முழுதும் அரசே ஏற்றுக் கொள்கிறது. ஆனாலும் பல்வேறு மாநிலத்தைச் சேர்ந்த முதல்வர்கள், அவர்களுக்கு முழுமையான அனுமதி கிடைக்காத காரணத்தினாலே காலதாமதம் ஏற்படுகிறது. அதோடு அவர்கள் செல்கின்ற இரயில் போக்குவரத்து மிகவும் முக்கியம். அவர்கள் குறிப்பிட்ட இரயில் தான் நமக்கு ஒதுக்கித் தருகின்றார்கள். ஆகவே, ஒரு நாளைக்கு 8, 10 இரயில் தான் நமக்கு ஒதுக்கி கொடுக்கின்றார்கள். ஆகவே, காலதாமதம் ஏற்படுகின்றது. ஆகவே, வெளிமாநிலத் தொழிலாளர்கள் படிப்படியாக அவர்கள் விருப்பப்படி தங்களுடைய சொந்த மாநிலத்திற்கு செல்வதற்கு அரசு ஏற்பாடு செய்து கொடுக்கும். அதுவரை, அவர்கள் பொறுமை காக்க வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

வெளி மாநிலத்தில் தங்கி பணிபுரிகின்ற தமிழகத்தைச் சேர்ந்த தொழிலாளிகளும் படிப்படியாக தமிழகத்திற்கு அழைத்து வருவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதன்பொருட்டு, மகாராஷ்டிராவிலிருந்து நாம் அழைத்து வந்திருக்கின்றோம். பிற மாநிலத்திலிருந்து தொழிலாளர்களை அழைத்து வந்திருக்கின்றோம். அனைவரையும் படிப்படியாக நம்முடைய மாநிலத்திற்கு அழைத்து வருவதற்குண்டான நடவடிக்கையையும் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, அரசைப் பொறுத்தவரைக்கும் மக்களுக்கு என்னென்ன வழியிலே நன்மை செய்ய முடியுமோ அனைத்து வகைகளிலும் நன்மை செய்து கொண்டிருக்கின்றோம். அவர்களுக்கு எந்தெந்த வகையிலே உதவி செய்ய முடியுமோ அனைத்து வகையிலும் உதவி செய்யப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். 24.03.2020 முதல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதிலிருந்து இதுநாள்வரை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களும், அவருக்கு கீழ் பணிபுரியும் அனைத்து அலுவலர்களும் சிறப்பான முறையிலே பணியாற்றிய காரணத்தினாலே, தமிழகத்திலே இந்த வைரஸ் பரவல் இன்றைக்கு கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அதேபோல நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள், நம்முடைய டிஜிபி அவர்கள் மற்றும் பல்வேறு துறையைச் சேர்ந்த செயலாளர்கள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் அதிகாரிகள், அவர்களுக்குத் துணையாக இருந்த அனைத்துத் துறை அலுவலர்களும் அரசுடன் ஒருங்கிணைந்து செயல்பட்ட காரணத்தினாலே இன்றைக்கு நோய் பரவல் தடுக்கப்பட்டிருக்கின்றது. அரசைப் பொறுத்தவரைக்கும், ஒருங்கிணைக்கப்பட்டு சிறப்பான முறையிலே பணியாற்றிய காரணத்தினாலே இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிகமான பரிசோதனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன, அதிகமான நபர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதனால் தான், பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறதே யொழிய, மற்ற மாநிலத்தைப் போல் அல்ல. பாதிக்கப்பட்ட அனைவரும் பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு, குணமடையச் செய்ய வேண்டும் என்பது தான் அரசினுடைய நோக்கம். ஆகவே இன்றைக்கு படிப்படியாக நாம் ஊரடங்கை தளர்த்திக் கொண்டிருக்கிறோம். இயல்புநிலைக்கு கொண்டு வருவதற்கு உண்டான முயற்சியை அரசு எடுத்து வருகின்றது.

தொழிற்சாலைகள் இன்றைக்கு திறக்கப்படுகின்றன, வேளாண் பணிகள் முழுமையாக நடைபெற்று வருகின்றன, தொழிலாளர்களுக்குத் தேவையான வேலைவாய்ப்புகள் கிடைக்கின்ற சூழ்நிலைகளை இன்றைக்கு நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம், மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் உரிய நேரத்திலே அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. ஆகவே, எவ்வித குறைபாடும் இல்லாமல், அரசு மக்களை காத்து வருகின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். அதேபோல, நம்முடைய மாவட்ட ஆட்சித்தலைவர்கள்

தைரியம்

தன் தவறுகளை ஒப்புக் கொள்வதற்கான தைரியமும் அந்த தவறுகளை திருத்திக் கொள்வதற்கான பழக்கமும் தான் வெற்றிக்கான பாதையை உருவாக்கும்.

பல்வேறு ஆலோசனைகளை வழங்கி இருக்கிறார்கள். ஆகவே, என்னுடைய கருத்துக்களையெல்லாம் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் சிறப்பாக செயல்படுத்தியதன் விளைவு, இன்றைக்கு இந்தியாவிலேயே கொரோனா நோய் தடுப்பில் தமிழ்நாடு ஒரு சிறப்பு அந்தஸ்து பெற்ற மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இன்றைக்கு மக்களுக்கு நாம் சொல்லுவதெல்லாம் விழிப்புணர்வு, அந்த விழிப்புணர்வை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல் துறை அதிகாரிகளும், உள்ளாட்சித்துறையைச் சேர்ந்தவர்களும், வருவாய்த்துறையைச் சேர்ந்தவர்களும் ஒருங்கிணைந்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு ஒவ்வொரு வீதியாக நாம் இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும். இதன்மூலமாகத் தான் நோய் பரவலை நாம் கட்டுப்படுத்த முடியும். ஆகவே, வெளியில் செல்கின்ற போது கண்டிப்பாக முகக்கவசம் அணியவேண்டும். அதேபோல, பொருட்கள் வாங்குகின்ற போது சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும். அநாவசியமாக வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும். வெளியிலே சென்று வீடு திரும்புகின்ற போது கை கால்களை சுத்தமாக சோப்பு போட்டு கழுவ வேண்டும். இதைப் பின்பற்றினாலே வைரஸ் பவுதலை தடுக்க முடியும். இதைத்தான் மருத்துவ நிபுணர்கள், மருத்துவ வல்லுநர்கள் சொல்கின்றார்கள். இதைக் கடைப்பிடித்தால் போதும், நோய் பரவலை தமிழகத்திலே தடுக்கலாம். ஆகவே நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களும், நம்முடைய காவல் துறை அதிகாரிகளும் மற்றும் பிற துறை அதிகாரிகளும் ஒருங்கிணைந்து தொடர்ந்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி பகுதிகளில் தினந்தோறும் கிருமிநாசினி தொடர்ந்து தெளிக்க வேண்டும். அதேபோல, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி பகுதிகளில் இருக்கின்ற பொதுக் கழிப்பறைகளை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். ஏனென்றால் பலர் பயன்படுத்துகின்றார்கள், அதனால் தொற்று ஏற்பட்டுவிடும். அதேபோல, தடை செய்யப்பட்ட பகுதியில் இருந்து எவரும் வெளியேறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தடை செய்யப்பட்ட பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எடுக்க வேண்டும். அரசு அறிவிக்கின்ற நலத்திட்ட உதவிகள் உரிய நேரத்திலே மக்களுக்கு போய் சேர மாவட்ட ஆட்சித்தலைவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

பிற மாநிலத்திலிருந்து வருகின்ற சரக்கு வாகனங்களை ஓட்டி வருகின்ற டிரைவர்களை, கிளினர்களை அந்தந்த மாவட்டத்தில் சரக்குகளை இறக்குகின்ற போது, டிரைவர்களையும், கிளினர்களையும் நோய் தொற்று உள்ளதா என கண்காணிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் மூலமாக தொற்று ஏற்பட்டு விடும். பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சொன்னீர்கள், வெளி மாநிலத்திலிருந்து வருகின்ற இந்த தொழிலாளர்கள் மூலமாகவும், அதேபோல லாரி டிரைவர்கள், கிளீனர்கள் மூலமாகவும் நோய் தொற்று அதிகமாக வருகின்றது என்கிறீர்கள். ஆகவே, அவர்களையும் நீங்கள் தனிமைப்படுத்தி வைத்துக் கொண்டால் நோய் தொற்று பரவுவதை தடுக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல கோடை காலமாக இருக்கின்ற காரணத்தால் குடிநீர் பிரச்சினை ஏற்படாமல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். ஜூன் 1ஆம் தேதி எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு அறிவிக்கப்பட்டிருக்கின்றன. தேர்வு எழுதுகின்ற மாணவர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதியை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். கல்வித்துறை அதிகாரிகளுடன் கலந்து பேசி, அந்த மாணவர்கள் எந்தவித தங்கு தடையும் இல்லாமல் தேர்வு எழுதுவதற்குண்டான வசதியை செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

மேற்கு தொடர்ச்சி மலையில் இருக்கின்ற மாவட்டங்களில் குடிமராமத்து மற்றும் தூர்வாரும் பணிகளை துரிதமாக முடிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர்களை கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால் பருவ மழை துவங்க இருக்கின்றன, சாரல் மழை துவங்க இருக்கின்றன, ஆகவே அது துவங்கி விட்டால் அந்தப்பணி தடைபட்டு போய்விடும். ஆகவே மேற்கு தொடர்ச்சி மலையில் இருக்கின்ற மாவட்டங்களில் குடிமராமத்து மற்றும் தூர்வாரும் பணிகளை துரிதமாக முடிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை கேட்டுக்கொள்கின்றேன்.

மகிழ்ச்சி

எதிர்பார்ப்பு இல்லாமல் நண்பர்களுடன் புன்னகையுடன் பழகுங்கள் உங்களை விட மகிழ்ச்சியானவர்கள் இவ்வுகத்தில் எவரும் இல்லை.

டெல்டா மாவட்டத்தில் இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். அதேபோல அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களும் குடிமராமத்து பணிகளை விரைவாக துவங்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்கு தமிழகத்தை பொருத்தவரைக்கும் தொழிற்சாலைகள் நிறைந்த மாநிலமாக இருக்கின்றது. சிறு தொழில்கள், தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்ற மாநிலம். ஆகவே, பாதிக்கப்பட்ட பகுதிகளை தவிர்த்து மற்ற பகுதிகள் இருக்கின்ற தொழிற்சாலைகள் 50 சதவிகித பணியாளர்களுடன் இயங்கலாம். அதற்கு நீங்கள் நேரடியாக சென்று, எந்தெந்த தொழில் துவங்க முடியுமோ அந்தந்த தொழில் துவங்க நீங்கள் அனுமதி அளிக்கலாம். அதற்கு எந்த தடையும் கிடையாது. ஏனென்றால் சென்னையை தவிர்த்து, தடை செய்யப்பட்ட பகுதியை தவிர்த்து, மற்ற பகுதியிலே தொழில் துவங்கலாம். அதோடு அரசு அறிவிக்கின்ற அந்த கடைகளை எல்லாம் துவக்கலாம். ஏற்கெனவே, விதிமீறல்கள் மீறப்பட்ட கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. மூன்று நாட்களுக்குப் பிறகு அந்த கடைகள் திறக்கப்பட்டு விடலாம். விதிமீறல்கள் மீறப்பட்டால் அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்து, தெளிவுபடுத்தி, அரசு விதிமுறைகளின்படி அவர்கள் பணிபுரிய அனுமதிக்கலாம். இன்றைக்கு அரசு அறிவிக்கின்ற விதிமுறைகளை பின்பற்றி தொழில்களை துவக்கலாம் என அறிவுறுத்துங்கள். அரசு அறிவித்த வழிமுறைகளைப் பின்பற்றித்தான் தொழிற்சாலை இயங்க வேண்டும். மிகமிக முக்கியம். தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற அனைவரும் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். சமூக இடைவெளியைப் பின்பற்ற வேண்டும். அதோடு, அடிக்கடி கிருமி நாசினி தெளிக்க வேண்டும். தொழிற்சாலையில் தொழிலாளர்கள் பயன்படுத்துகின்ற கழிப்பறைகளை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும். அதிகமான தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளாக இருந்தால் அங்கேயே மருத்துவர்களை தற்காலிகமாக நியமித்துக்கொள்ள வேண்டும். தொழிற்சாலைகளுக்கு வருகின்ற தொழிலாளர்கள் பரிசோதனை செய்த பிறகுதான் அவர்களை அனுமதிக்க வேண்டும். இதையெல்லாம் நீங்கள் கடைபிடிக்க வேண்டும் என்று நீங்கள் அந்தந்த தொழில் நிறுவனங்களை அறிவுறுத்த வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து அரசின் ஆலோசனைகளைக் கேட்டு சிறப்பான முறையில் பணியாற்றிய அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல் துறை கண்காணிப்பாளர்களுக்கும், அதோடு, அவர்களுக்கு கீழ் பணிபுரிகின்ற அனைத்து துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல இன்றைக்கு சிறப்பான பணிகளை மேற்கொண்ட மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அரசு அறிவிக்கின்ற அனைத்து திட்டங்களும் சிறப்பான முறையிலே மக்களுக்குச் சேர்வதற்கு நல்ல அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்குகின்ற நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், இன்றைக்கு தமிழகத்திலே காவல் துறை அதிகாரிகளும், காவலர்களும் சிறப்பான முறையிலே பணியாற்றுவதற்கு தலைமைப் பொறுப்பு ஏற்று இருக்கின்ற DGP அவர்களுக்கும் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த செயலாளர்களுக்கும், மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள், உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், அதேபோல வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், இன்னும் நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற பல்வேறு துறையைச் சேர்ந்த அதிகாரிகள், உடன் இணைந்து செயல்பட்ட அலுவலர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கும், அதேபோல பல்வேறு குழுக்களுக்கு தலைமைப் பொறுப்பேற்று நடத்துகின்ற அனைத்து துறைச் செயலாளர்களுக்கும், பல்வேறு மாவட்டங்களில் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்ட ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளுக்கும் தங்களுடைய கடமையை சிறப்பாக செயலாற்றிய அனைத்து உயர் அதிகாரிகள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

சாதனை

சோதனைகள் தாண்டியே, சாதனைகள் படைக்க முடியும்.
அவமானங்களை தூணாய் பிடித்தவர்களே சாதனை படைக்க முடியும்.

முதலமைச்சரின் அட்சயப் பாத்திரம் அம்மா உணவகம்!

பசியில்லாத தமிழகம்
ஏழை, எளிய மக்கள் நம்பி பெருமிதம்

கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பாதுகாப்பு தடை உத்தரவு அமலில் உள்ள இச்சூழ்நிலையில் வேலையின்றி உள்ள தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் பசியின்றி வயிறார உண்ண அம்மா உணவகங்களில் 3 வேளையும் இலவசமாக உணவு வழங்கி ஏழைகளின் இதயமாக விளங்கி கொண்டிருக்கும் எங்களின் முதல்வர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு சேலம் மாவட்ட மக்கள் மனம் உருகி நன்றி தெரிவித்தனர்.

“ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்”

வல்லவர்க்கு மேலும் வலிமை, தமது பசியை பொறுத்துக் கொள்வதே அந்த வலிமையும் பிறர் பசியைப் போக்குபவரின் வலிமைக்கு அடுத்துத்தான் வலிமையாய் அமையும் என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை எளிய மக்கள், அன்றாட கூலி வேலை செய்பவர்கள், வாகன ஓட்டுநர்கள், பாரம் தூக்குபவர்கள் என குறைந்த ஊதியத்தில் பணிபுரிபவர்கள் அன்றாடம் பயன்பெறும் வகையில் சிறப்பு திட்டங்களில் ஒன்றான அட்சயப் பாத்திரமாக விளங்கும் அம்மா உணவகங்களை நிறைவேற்றி தந்தார்கள். அவர்தம் பொற்கரங்களால் துவக்கி வைத்தார்கள்.

இத்திட்டம் முதன்முதலில் சென்னை மாநகராட்சியின் சார்பில் சுகாதாரமான மற்றும் தரமான உணவுகளை மலிவு விலையில் வழங்கும் நோக்கத்துடன் 19.02.2013 அன்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக சேலம் மாவட்டத்தில் உள்ள சேலம் மாநகராட்சியின் சார்பில் 11 அம்மா உணவகங்களும், எடப்பாடி, மேட்டூர், ஆத்தூர் மற்றும் நரசிங்கபுரம் ஆகிய 4 நகராட்சிகளிலும் 4 அம்மா உணவகங்களும் என மொத்தம் 15 அம்மா உணவகங்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டத்தில் “வரும் முன் காப்போம்” என்பதை முக்கிய நோக்கமாக கொண்டு கொரோனா வைரஸ் நோய் தடுப்பு, பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 144 தடை உத்தரவு அமல்படுத்தப்பட்டு, அனைத்து வணிக நிறுவனங்கள், உணவகங்கள் உள்ளிட்ட அனைத்து வகையான கடைகளும் முழுவதும் மூடப்பட்டது. இதன் காராணமாக ஏழை, எளிய மக்கள், அன்றாட கூலி வேலை செய்பவர்கள், வாகன ஓட்டுநர்கள், பாரம் தூக்குபவர்கள் என குறைந்த ஊதியத்தில் பணிபுரிபவர்கள் உள்ளிட்டோர் அன்றாட வருமானத்தை வைத்து தங்களது வாழ்க்கையை நடத்துபவர்களுக்கு ஏற்படும் சிரமங்களை கருத்தில் கொண்டு அவர்கள் அனைவருக்கும் அம்மா உணவகத்தின் மூலம் மூன்று வேளைகளிலும் சுகாதாரமான மற்றும் தரமான உணவுகளை இலவசமாக வழங்க மாண்புமிகு

புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் ஆணையிட்டார்கள்.

சேலம் மாவட்டத்தில், மாநகராட்சியின் சார்பில் சூரமங்கலம் மண்டலத்தில் 3 அம்மா உணவகங்களும், அஸ்தம்பட்டி மண்டலத்தில் 4 அம்மா உணவகங்களும், அம்மாப்பேட்டை மண்டலத்தில் 2 அம்மா உணவகங்களும் மற்றும் கொண்டலாம்பட்டி மண்டலத்தில் 2 அம்மா உணவகங்களும் என மொத்தம் சேலம் மாநகராட்சியின் சார்பில் 11 அம்மா உணவகங்கள் எடப்பாடி, மேட்டூர் நகராட்சி, நரசிங்கபுரம் நகராட்சி, ஆத்தூர் நகராட்சி ஆகிய 4 நகராட்சிகளிலும் அம்மா உணவகங்கள் என மொத்தம் 15 அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகின்றன.

காலை, மதியம், இரவு ஆகிய மூன்று வேளைகளிலும் ஏழை, எளிய மக்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் உத்தரவின்படி அம்மா உணவகங்களில் இன்று வரை தினசரி மூன்று வேளைகளிலும் உணவு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. காலையில் இட்டிலியுடன் சாம்பாரும், மதியம் சாம்பார் சாதம், தயிர் சாதம், எலுமிச்சை சாதம், தக்காளி சாதம், புளி சாதம், புதினா சாதம் உள்ளிட்டவைகளில் ஏதேனும் மூன்று வகையான சாதமும், இரவு சாம்பார் சாதம் என மூன்று வேளையும் இலவசமாக ஏழை, எளிய மக்கள் வயிறார உண்ணும் வகையில் சுகாதாரமான முறையில் உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தினசரி மதிய உணவுடன் இலவசமாக முட்டையும் சேர்த்து வழங்கப்படுகிறது.

அந்தவகையில், கொரோனா தடுப்பு நடவடிக்கையினை முன்னிட்டு சேலம் மாநகராட்சியின் சார்பில் செயல்படும் 11 அம்மா உணவகங்களில் ஏழை, எளிய மக்கள் வயிறார உண்ணும் வகையில் இதுவரை மொத்தம் 2,74,501 பயனாளிகளுக்கு ரூ.18.98 இலட்சம் மதிப்பிலான உணவு மூன்று வேளைகளிலும்,

எடப்பாடி நகராட்சி அம்மா உணவகத்தில் காலை, மதியம், இரவு என மூன்று வேளையும் இதுவரை 43,112 பயனாளிகளுக்கு காலை – இட்லி, பொங்கல், மதியம் – சாம்பார் சாதம், தயிர்சாதம், தக்காளி சாதம், புளி சாதம், லெமன் சாதம், இரவு – இட்லி, தக்காளி சாம்பார் என ரூ.3.90 இலட்சம் மதிப்பிலான உணவு மூன்று வேளைகளிலும்,

ஆத்தூர் நகராட்சி அம்மா உணவகத்தில் 36,363 பயனாளிகளுக்கு ரூ.1.82 இலட்சம் மதிப்பிலான உணவு மூன்று வேளைகளிலும், மேட்டூர் நகராட்சி அம்மா உணவகத்தில் 33,103 பயனாளிகளுக்கு ரூ.1.66 இலட்சம் மதிப்பிலான உணவு மூன்று வேளைகளிலும், நரசிங்கபுரம் நகராட்சி அம்மா உணவகத்தில் 37,733 பயனாளிகளுக்கு ரூ.1.80 இலட்சம் மதிப்பிலான உணவு மூன்று வேளைகளிலும் என சேலம் மாவட்டத்தில் உள்ள 4 நகராட்சிகளில் செயல்பட்டு வரும் 4 அம்மா உணவகங்களின் மூலம் மொத்தம் 1,50,311 பயனாளிகளுக்கு காலை, மதியம், இரவு என மூன்று வேளையும் ரூ.9.18 இலட்சம் மதிப்பிலான உணவு வழங்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் 15 அம்மா உணவகங்களில் மொத்தம் 4,24,812 பயனாளிகளுக்கு ரூ.28.16 இலட்சம் மதிப்பிலான உணவு மூன்று வேளைகளிலும் வழங்கப்பட்டு ஏழை, எளிய மக்கள், அன்றாட கூலி வேலை செய்பவர்கள், வாகன ஓட்டுநர்கள், பாரம் தூக்குபவர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பயன்பெற்று தமிழக அரசை பாராட்டி வருகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி சேலம் மாவட்டத்தில் உள்ள அம்மா உணவகங்களில் இலவசமாக உணவு அருந்தி வரும் ஏழை, எளிய மக்கள், கூலி தொழிலாளர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்ததாவது.

சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் அருகில் உள்ள அம்மா உணவகத்தில் தினசரி உணவருந்தும் சேலம் மாவட்டம் முத்துநாயக்கன்பட்டியை சேர்ந்த கூலித்தொழிலாளி திருமதி சண்முகவல்லி அவர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்ததாவது :

எனது பெயர் சண்முகவல்லி நான் முத்துநாயக்கன்பட்டியில் வசித்து வருகிறேன். எனது கணவர் பெயர் திரு.ஆறுமுகம் வாய்பேச இயலாதவர். நான் தினசரி அஸ்தம்பட்டி பகுதியில் உள்ள சில கடைகளை தூய்மைபடுத்தும் வேலை செய்து வருகிறேன். எனக்கு ஒரு மகன் மற்றும் இரண்டு மகள்கள் உள்ளனர்.

கொரோனா வைரஸ் நோய் தடுப்பு காரணமாக தற்பொழுது ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அனைத்து கடைகளும் தொடர்ந்து 40 நாட்களுக்கு மேலாக மூடப்பட்டுள்ளது. இதனால் எனக்கு கூலி வேலையும் இல்லாமல் போய்விட்டது. இதனால் தினசரி உணவுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் வாய் பேச இயலாத கணவனையும் குழந்தைகளையும் வைத்துக்கொண்டு மிகுந்த மன வேதனையுடன் இருந்தேன்.

அப்பொழுது, எங்களை போன்ற ஏழை, எளிய மக்கள் மீது அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஏழை, எளிய மக்கள், அன்றாட கூலி வேலை செய்பவர்கள், வாகன ஓட்டுநர்கள், பாரம் தூக்குபவர்கள் என குறைந்த ஊதியத்தில் பணிபுரிபவர்கள் உள்ளிட்டோர் அன்றாட வருமானத்தை வைத்து தங்களது வாழ்க்கையை நடத்துபவர்களுக்கு ஏற்படும் சிரமங்களை கருத்தில் கொண்டு, அனைவருக்கும் அம்மா உணவகத்தின் மூலம் மூன்று வேளைகளிலும் உணவுகளை இலவசமாக வழங்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். நான் எனது கணவர் மற்றும் குழந்தைகள் அனைவரும் இன்று வரை நாள்தோறும் மூன்று வேளையும் அம்மா உணவகத்தின் மூலமே உணவு உண்டு வருகின்றோம். காலையில் இட்டிலியுடன் சாம்பாரும், மதியம் சாம்பார் சாதம், தயிர் சாதம், எலுமிச்சை சாதம், தக்காளி சாதம், புளி சாதம், புதினா சாதம் உள்ளிட்டவைகளில் ஏதேனும் மூன்று வகையான சாதத்துடன் முட்டையும், இரவு சாம்பார் சாதமும் என மூன்று வேளைகளுக்கும் உணவு முற்றிலும் இலவசமாக கிடைக்கின்றது.

மேலும், உணவு உண்ண வருபவர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரும் வழங்கப்படுகிறது. அம்மா உணவகத்தில் வந்து உணவருந்தும் பொழுது தாய் வீட்டில் உணவு உண்பது போன்ற மன நிறைவு ஏற்படுகின்றது. என்னை போன்ற ஏழை, எளியோரின் வயிற்று பசியினை போக்க அட்சயப் பாத்திரமாக அம்மா உணவகம் தந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் ஏழை, எளிய மக்கள் உள்ளிட்ட அனைவரும் பசியின்றி வயிறார உண்ண அம்மா உணவகங்களில் 3 வேளையும் இலவசமாக உணவு வழங்கி ஏழைகளின் இதயமாக விளங்கி கொண்டிருக்கும் எங்களின் முதல்வர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது கோடான கோடி நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். என் ஆயுள் உள்ளவரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகடன் பட்டவர்களாக இருப்போம் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் அருகில் உள்ள அம்மா உணவகத்தில் தினசரி உணவருந்தும் சேலம் மாவட்டம், சின்னதிருப்பதி பகுதியை சேர்ந்த சிறு வியாபாரி திரு.செல்லப்பன் அவர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்ததாவது:

என் பெயர் செல்லப்பன் நான் சேலம் மாவட்டம், சின்னதிருப்பதி பகுதியில் வசித்து வருகிறேன். எனக்கு வயது 65 நான் சாலையோர துணி வியாபாரி, கொரோனா வைரஸ் நோய் தடுப்பு காரணமாக தற்பொழுது ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் கடந்த 40 நாட்களாக நான் சாலையோர கடை போட இயலவில்லை. இதனால் எனக்கு வருமானமும் முற்றிலும் இல்லை. தடை உத்தரவு பிறபிக்கப்பட்ட சில நாட்களிலேயே எனது கையில் இருந்த

சேமிப்பு பணம் முழுவதும் செலவாகி விட்டது. கையில் பணம் இல்லையே, இனிவரும் காலங்களில் உணவுக்கு என்ன செய்ய போகிறேன், நாள்தோறும் உணவுக்கு என்ன செய்வது என யோசித்து கொண்டு இருந்தேன்.

இந்த சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாய் உள்ளத்தோடு மக்களின் உணர்வுகளை புரிந்து, ஏழை, எளிய மக்களின் பசியினை

போக்கிட உணவுக்கு வழியில்லாமல் உள்ள எங்களை போன்ற ஏழை, எளியோருக்கு அம்மா உணவகங்களின் மூலம் மூன்று வேளையும் இலவசமாக உணவு வழங்க உத்தரவிட்டதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பு என்னை போன்ற ஏழை, எளியோருக்கு பேருதவியாக உள்ளது. நான் தினசரி காலை, மதியம் மற்றும் இரவு என மூன்று வேளையிலும் அம்மா உணவகத்தில் இலவசமாக உணவு உண்டு வருகின்றேன். கொரோனா வைரஸ் நோய் தடுப்பு காரணமாக தற்பொழுது 144 தடை உத்தரவு அமலில் உள்ள இச்சூழ்நிலையில் வருமானம் இன்றி அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் தவித்து கொண்டிருந்த என்னை போன்ற ஏழை, எளிய அடிதட்டு மக்களுக்கும், கூலி தொழிலாளர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பு மிகுந்த மகிழ்ச்சியினை அளித்துள்ளது. நாங்கள் அம்மா உணவகத்தின் மூலம் மதியம் இலவச முட்டையுடன் 3 வேளையும் வயிறார இலவசமாக உணவு உண்ணும் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது கோடான கோடி நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்கள்.

ஏழை, எளிய மக்களின் அட்சயப் பாத்திரமாக திகழும் அம்மா உணவகங்களில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பாதுகாப்பு தடை உத்தரவு அமலில் உள்ள இச்சூழ்நிலையில் வேலையின்றி உள்ள தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் பசியின்றி வயிறார இலவசமாக மூன்று வேளைகளிலும் உணவளிக்க உத்தரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஏழை, எளியோர் என்றென்றும் நன்றி கடன் பட்டவர்களாக இருப்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தொகுப்பு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சேலம் மாவட்டம்.

தமிழரசு

செய்தி–மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

தமிழரசு (தமிழ்) மாத இதழ்

தனி இதழ்	:	ரூ.20
ஆண்டுச் சந்தா	:	ரூ.240
ஆயுள் சந்தா	:	ரூ.2,000 (10 ஆண்டுகள்)

தமிழரசு (ஆங்கிலம்) மாத இதழ்

தனி இதழ்	:	ரூ.20
ஆண்டுச் சந்தா	:	ரூ.240
ஆயுள் சந்தா	:	ரூ.2,400 (10 ஆண்டுகள்)

தமிழரசு சந்தாத் தொகையினை வங்கி வரைவோலையாகவோ, பணவிடை மூலமாகவோ **துணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு அலுவலகம், இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை–600 113** என்ற முகவரிக்கு தங்களின் பெயர், கதவு எண், தெருப்பெயர், ஊர், மாவட்டம், அஞ்சல் குறியீட்டு எண் மற்றும் கைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்பி தமிழரசு இதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழரசு இதழுக்கு www.tamilarasu.org என்ற இணையதளத்தில் சந்தாத் தொகையினை நேரடியாக செலுத்தலாம்

ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை காத்த தமிழ்நாடு அரசு!



கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுக்க ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ளதால், ஏழை, எளிய மக்களின் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக விலையில்லாமல் அரிசி மற்றும் அத்தியாவசிய பொருட்களை நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பொதுமக்கள் நெஞ்சார்ந்த நன்றி தெரிவித்தனர்.

உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்று நோய் இந்தியாவில் பல மாநிலங்களில் பல பாதிப்பை உருவாக்கியுள்ளது. தமிழகத்தில் பேரிடர் ஏற்படும் காலங்களில் புயல் வேகத்தில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் பல்வேறு சிறப்பான நடவடிக்கைகள் மூலம் தமிழக மக்களின் பேராதரவினை பெற்றுள்ளார். இதேபோன்று, தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் அடிப்படையில், தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் கொரோனா வைரஸ் தொற்று நோய் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில், தமிழகத்தில் உள்ள ஏழை, எளிய மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் எளிதாக தடையின்றி கிடைக்கும் வகையில் மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் தமிழக அரசு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

தமிழகத்தில் ஊரடங்கால் பாதிக்கப்பட்டுள்ள ஏழை, எளிய மக்களின் உணவு மற்றும் அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்கின்ற வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிவாரணத் தொகையாக அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.1,000 வழங்கினார்கள். அதோடு மட்டுமல்லாமல் ஏப்ரல், மே மற்றும் ஜூன் ஆகிய 3 மாதங்களுக்கு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களின் குடும்ப அட்டைக்கு தகுதியான அளவு அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் சர்க்கரை விலையின்றி வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில் அரிசி பெறும் 6,27,004 குடும்ப அட்டைதாரர்களுக்கு நிவாரணத் தொகை ரூ.1,000 வழங்கும் பணி 02.04.2020 அன்று துவங்கப்பட்டது. இத்திட்டத்தினை இடையூறு இன்றி செயல்படுத்திடவும், பொதுமக்கள்

கூட்டம் கூடுவதை தவிர்க்கும் பொருட்டு, முன்கூட்டியே குடும்ப அட்டைதாரர்களின் வீடுகளுக்குச் சென்று டோக்கன் வழங்கப்பட்டு, குடும்ப அட்டைதாரர்கள் சமுதாய இடைவெளியை கடைப்பிடிப்பதை ஒழுங்குபடுத்துவதற்காக தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டு, நியாய விலைக்கடைகளில், தெருவாரியாக அட்டைப் பதிவேடு எண் வாரியாக தினமும் 200 முதல் 300 நபர்களுக்கு நிவாரணத்தொகை மற்றும் விலையில்லா பொருட்கள் சம்பந்தப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது. இதேபோல், மே மாதத்திற்கான விலையில்லா பொருட்கள் சம்பந்தப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திண்டுக்கல் மாவட்டத்தில், 6,18,900 குடும்ப அட்டைதாரர்களுக்கு 8,970 மெ.டன் அரிசி, 871 மெ.டன் சர்க்கரை, 296 மெ.டன் கோதுமை, 559 மெ.டன் துவரம் பருப்பு, 548 மெ.டன் பாமாயில் ஆகியவை அடங்கிய இலவச அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலத்துறையின் சார்பில் நியாய விலைக்கடையின் மூலமாக 3,481 ஆட்டோ ஓட்டுநர்களுக்கும், 17,095 கட்டட தொழிலாளர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகள் மூலம் 2,326 சாலையோர வியாபாரிகளுக்கும் நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மே மாதத்திற்கான நிவாரணமாக 6,10,280 குடும்ப அட்டைதாரர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு, தினந்தோறும் 200 முதல் 300 குடும்ப அட்டைதாரர்களுக்கு, ஒரு குடும்ப அட்டை ஒரு யூனிட்டுக்கு 5 கிலோ அரிசி வீதம் மத்திய அரசின் பங்களிப்பாக கூடுதலாக வழங்கப்பட்டு வருகிறது. ஏழை, எளிய மக்களின் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்கின்ற வகையில் 3 மாதங்களுக்கான அத்தியாவசியப் பொருட்களை விலையில்லாமல் வழங்க உத்தரவிட்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஏழை மக்களின் நெஞ்சங்களில் நிறைந்துள்ளார்.

ராஜேஸ்வரி

இத்திட்டத்தின் கீழ், பயன்பெற்ற பயனாளி சீலப்பாடி பகுதியைச் சேர்ந்த திருமதி ராஜேஸ்வரி கூறும்போது,

"கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் அச்சுறுத்தி வரும் காரணத்தினால் நோய் தொற்று பரவாமல் தடுத்திட மத்திய, மாநில அரசுகளால் பொதுமக்களின் நலன் கருதி ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக தொழிற்சாலைகள் அனைத்தும் இயக்கப்படுவது நிறுத்தப்பட்டது. இதனால் பணிமுடக்கம், தனிமைப்படுத்துதல் ஏற்படுத்தப்பட்டதினால் ஒட்டுமொத்தமாக எனது தினசரி வருவாய் இழப்பு ஏற்பட்டது. எனது குடும்பம் வருமானம் இல்லாமல் பாதிக்கப்பட்டு, அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதில் ஏற்படும் சிரமத்தினை கண்டு செய்வதறியாது இருந்த எனக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விலையில்லாமல் வழங்கிய அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் எனது குடும்பத்தின் பசியை போக்கியது. நியாயவிலைக் கடைகளில் விலையில்லாமல் அரிசி, பருப்பு, சர்க்கரை, கோதுமை, எண்ணெய் போன்ற அத்தியாவசிய பொருட்களுடன் ரூ.1,000 வழங்கப்பட்டதால் ஏழை மக்கள் பசியால் பாதிக்கப்படாமல் காப்பாற்றப்பட்டதுடன், கொரோனா நோய்த் தொற்று பரவாமலும் நாங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளோம். சிறப்பான முறையில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு தமிழக மக்களை கொரோனா வைரஸ் தொற்றிலிருந்தும், பசியில் இருந்தும், காப்பாற்றிய மாண்புமிகு

சிந்தனை

சிந்திக்காமல் செயலாற்றுவதும்,
கற்பனையில் வாழ்வதும், பேராபத்தானது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம் என தெரிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளி செட்டிநாயக்கன்பட்டியைச் சேர்ந்த திருமதி கலைவாணி கூறும்போது,

கலைவாணி

பொதுமக்கள் சமூக இடைவெளியை கடைப்பிடித்தால் மட்டுமே கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுத்திட இயலும். பொதுமக்கள் அத்தியாவசியப் பொருட்கள் வாங்கும் பொருட்டு, வெளியில் அதிகளவில் வருவதால் கொரோனா நோய்த்தொற்று பரவ அதிக வாய்ப்புகள் உள்ளன. இதனை சீர் செய்து, பொதுமக்கள் வெளியில் வருவதை தவிர்த்திடும் பொருட்டும், பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கச் செய்திடும் வகையிலும், தரமான பொருட்கள் நியாயமான விலையில் கூட்டுறவுத்துறை மூலம் நியாயவிலைக் கடைகளின் மூலமாக வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அரசு அலுவலர்களால், எங்களது குடும்ப அட்டைக்கு நிவாரண உதவி பெறுவதற்கான தேதி மற்றும் நேரம் குறிப்பிட்ட டோக்கன் வழங்கப்பட்டது. அதன்படி எங்களது குடும்பத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களுடன் ரூ.1,000 நிவாரண உதவித்தொகையும் வழங்கப்பட்டது. இதன்மூலம் நோய்த் தொற்று ஏற்படாமலும், பொருளாதார காரணங்களால் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் எங்களது வாழ்க்கை பாதுகாக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி எங்களது வாழ்க்கையினை ஆரோக்கியத்துடன் பாதுகாத்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழக மக்களாகிய நாங்கள் என்றென்றும் உறுதுணையாக இருப்போம் என தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் வாழ்வில் ஒளிவிளக்கேற்றி, அவர்களை நோய்த் தொற்றிலிருந்து பாதுகாத்து வாழ்வில் முன்னேற்றம் அடைய வழிவகை செய்துள்ளார் என்றால் அது மிகையாகாது.

தொகுப்பு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல் மாவட்டம்.

இயேசுபிரான் போதித்த தியாகம், அன்பு, சமாதானம், சகோதரத்துவம் போன்ற குணங்களை மக்கள் அனைவரும் பின்பற்றி, ஒற்றுமையாக வாழ்ந்திட வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
"ஈஸ்டர் திருநாள்" வாழ்த்துச் செய்தி – 11.04.2020

அன்பின் திருவுருவாம், கருணையின் வடிவமாம் இயேசுபிரான் உயிர்த்தெழுந்த தினமான ஈஸ்டர் திருநாளைக் கொண்டாடும் கிறிஸ்துவப் பெருமக்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த ஈஸ்டர் திருநாள் நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பகைவரிடத்தும் அன்பு காட்டும் எல்லையில்லா இரக்க குணத்தை கொண்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, கொடியவர்களால் சிலுவையில் அறையப்பட்ட தினம், புனித வெள்ளியாக அனுசரிக்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த தினம், ஈஸ்டர் திருநாளாக கிறிஸ்துவர்களால் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் கிறிஸ்துவர்கள் தங்களது புனித நூலான பைபிளின் வாசகங்களை மனதில் நிறுத்தி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை வழிபடுவார்கள்.

இந்த நன்னாளில், உலகில் அன்பும் அமைதியும் நிறைந்திட இயேசுபிரான் போதித்த தியாகம், அன்பு, சமாதானம், சகோதரத்துவம் போன்ற உயரிய குணங்களை மக்கள் அனைவரும் வாழ்வில் பின்பற்றி, சகோதரத்துவத்துடன் ஒற்றுமையாக வாழ்ந்திட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, கிறிஸ்துவப் பெருமக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது ஈஸ்டர் திருநாள் நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

அரசையும், மக்களையும் இணைக்கும் பாலமாக செயலாற்றிவரும் செய்தித்துறை

மக்களாட்சி முறை செவ்வனே செயல்பட்டு வரும் நமது நாட்டில் செய்தி–மக்கள் தொடர்புத்துறையின் பணி மிகவும் இன்றியமையாததாகும்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை, அரசையும், மக்களையும் இணைக்கும் முக்கிய பாலமாக செயலாற்றி வருகிறது.

அரசின் ஆக்கப் பணிகளைப் பொதுமக்கள் செவ்வனே புரிந்துகொள்ள அரசின் திட்டங்களை நிறைவேற்றுவதில் அவர்களின் ஒத்துழைப்பை நல்கச் செய்யும் மக்கள் தொடர்புச் சாதனங்களை இத்துறை சீரிய வகையில் திறம்படச் செயலாற்றி வருகிறது.

அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் மக்கள் வெகுவாக உணர்ந்தறியும் நோக்கத்தில் மாநில அரசின் சார்பில் இத்துறை விளம்பரங்களைத் தயாரித்து வெளிவிடுகின்றது.

செய்தி வெளியீட்டுப் பிரிவு

செய்தி மக்கள் தொடர்புத்துறையின், செய்தி வெளியீட்டுப் பிரிவு, துறையின் மிக முக்கியப் பிரிவாக செயலாற்றி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முக்கிய அறிவிப்புகள், செய்திக்குறிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகள் ஆகியவற்றினை பொதுமக்கள் உடனுக்குடன் அறிந்திடும் வகையில் கடமையாற்றுவதே இப்பிரிவின் முக்கியப்பணியாகும். தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள இப்பிரிவு ஒய்வு நாள் ஏதுமின்றி ஆண்டின் அனைத்து நாட்களிலும் 24 மணிநேரமும் செயல்பட்டுவருகிறது.

மேலும், மாண்புமிகு துணை முதலமைச்சர், அமைச்சர் பெருமக்களின் செய்திக்குறிப்புகள், அரசின் செய்தி வெளியீடுகள், அறிவிப்புகள், நலத்திட்டங்களின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் ஆகியவற்றையும், அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சியின் விவரங்கள், நிகழ்ச்சி குறித்த புகைப்படங்கள், வீடியோ ஒளிப்பதிவுகள்

ஆகியவற்றையும் தமிழ் ஆங்கிலம் மற்றும் பிற மாநில நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி முகமைகள், காலமுறை நாளிதழ்கள், இணையதள செய்தி நிறுவனங்கள் என 325க்கும் மேற்பட்ட அச்சு மற்றும் காட்சி ஊடகங்களுக்கு செய்தி வெளியீட்டுப் பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் செய்தியாளர் கூட்டங்கள் நடத்திட தேவையான அனைத்து ஏற்பாடுகள் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பங்கேற்கும் அரசுச் சார்ந்த விழாக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் வருகை தொடர்பான செய்திகளை சேகரிப்பதற்கு செய்தியாளர்கள் மற்றும் தொலைக்காட்சிப் பிரிவினர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளை வழங்கிடும் வகையில் ஒருங்கிணைப்புப் பணியை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் www.tndipr.gov.in வலைதளத்தில் தலைமையிடத்திலிருந்து வெளியிடப்படும் முக்கிய அறிவிப்புகள், செய்தி வெளியீடுகள் மற்றும் முக்கிய நிகழ்வுகள் தொடர்பான செய்திகள், காணொலிக்காட்சிப் பதிவுகள், புகைப்படங்கள் அனைத்தும் உடனுக்குடன் அதிவேக முறையில் பதிவேற்றம் செய்யப்பட்டு ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அதேபோன்று, அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் மின்னஞ்சல் மூலம் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட்டு மாவட்ட அளவிலும் செய்திகள், புகைப்படங்கள் வெளிவர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

செய்தி மக்கள் தொடர்புத்துறை வலைதளம்

வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப ஊடகங்கள் உடனுக்குடன் தங்களுக்கு தேவையான அரசு சார்ந்த செய்திகள், புகைப்படங்கள் மற்றும் வீடியோப் பதிவுகள் ஆகியவற்றை வலைதளத்தின் வாயிலாக பெற்றிடவும், அதேபோல, பொதுமக்களும் இவற்றை பார்த்துப் பயனடைய ஏதுவாகவும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் www.tndipr.gov.in என்னும் வலைதளம் சிறப்புடன் இயங்கி வருகிறது. செய்தியாளர்கள் இவ்வலைதளத்தின் உள் நுழைந்து தங்களுக்கு தேவையான அரசு சார்ந்த செய்திகள், புகைப்படங்கள் மற்றும் காணொலிக்காட்சிப் பதிவுகள் ஆகியவற்றை பதிவிறக்கம் செய்துகொள்ளவும், இணையதள பக்கத்திலேயே அவற்றை பார்த்துப் பயன்பெறவும், செய்தி மக்கள் தொடர்புத் துறையால் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகின்றது. இந்த வலைதளம் உலகளவிலுள்ள தமிழர்களும், பொதுமக்களும் தமிழகத்தின் அன்றாட நிகழ்வுகளை அறிந்துகொள்ளப் பெரிதும் பயன் தரும் வகையில் சிறந்த வலைதளமாக உள்ளது.

ஊடக மையம்

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஊடக மையம் தலைமைச் செயலக பழைய கட்டடத்தின் தரை தளத்தில் விடுமுறை ஏதுமின்றி 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தில் 16 தொலைக்காட்சி சேனல்களில் வெளிவரும் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகள் மற்றும் அரசு சார்பான செய்திகளும் பதிவு செய்யப்படுகிறது. தலைமைச் செயலகத்தில் இருந்து வெளியிடப்படும் செய்தி வெளியீடுகள், செய்திக்குறிப்புகள், புகைப்படங்கள் மற்றும் வீடியோ பதிவுகள் அனைத்தும் ஊடக மையத்திலிருந்து சென்னையில் உள்ள அனைத்து ஊடகங்களுக்கும் அனுப்பப்படுகிறது. அதோடு இவைகள் அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டு, அந்தந்த மாவட்டப் பதிப்புகளில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

புகைப்படப் பிரிவு

சென்னை தலைமைச் செயலகத்தில் இயங்கி வரும் புகைப்படப் பிரிவில் உள்ள புகைப்படக்காரர்களைக் கொண்டு தலைமையிடம் மற்றும் மாவட்டங்களில், மாண்புமிகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர், மாண்புமிகு பாரதப் பிரதமர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் அரசு நிகழ்ச்சிகளை

இந்தியாவிலேயே முதன்மை மாநிலம்

ஆரவாரமின்றி அமைதியாகவும், திடமாகவும் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுவதால், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

புகைப்படமெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மாவட்டங்களில் உள்ள புகைப்படக்காரர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து மாவட்ட அளவில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளை புகைப்படம் எடுத்து வருகின்றனர்.

தலைமைச் செயலகப் புகைப்படக்காரர்களால் எடுக்கப்படும் புகைப்படங்கள் தலைமைச் செயலக செய்தி வெளியீட்டுப் பிரிவின் மூலம் ஊடகங்களில் பிரசுரிப்பதற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் இந்த புகைப்படங்கள் பொதுமக்களின் பார்வைக்கு தலைமைச்செயலகம் மற்றும் புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்திலும் காட்சிப்படுத்தப்படுகிறது. அதுபோலவே, மாவட்டங்களில் உள்ள புகைப்படக்காரர்களால் எடுக்கப்படும் புகைப்படங்கள் பிரசுரிப்பதற்காக அந்தந்த மாவட்டத்தில் இயங்கி வரும் செய்தி நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகிறது. மேலும், அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள விளம்பரப் பலகைகள் மற்றும் முக்கிய அரசு நிகழ்ச்சிகளில் நடத்தப்படும் சிறு புகைப்படக் கண்காட்சிகளிலும் புகைப்படங்கள் பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்படுகிறது.

மேற்கோள் பிரிவு

அனைத்து நாளிதழ்கள், பருவ இதழ்கள், வெளிமாநில நாளிதழ்கள் போன்றவற்றில் வெளிவரும் முக்கியச் செய்திகளை பல்வேறு இனங்களாக, பிரித்து துறை வாரியாக நாள்தோறும் அரசின் கவனத்திற்கு எடுத்துச்செல்லும் முக்கியப் பணியை செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மேற்கோள் பிரிவு செவ்வனே செய்து வருகிறது.

இப்பிரிவில் நாள்தோறும் காலை, மாலை நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் வெளிமாநில நாளிதழ்களில் வெளியாகும் முக்கியச் செய்திகள், செய்தி நறுக்குகளாக தொகுக்கப்பட்டு தினந்தோறும் காலையும், மாலையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஆகியோரின் பார்வைக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. அதேபோல, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசுத் துறைகளின் செயலாளர்களின் பார்வைக்காகவும், நடவடிக்கைகளுக்காகவும் அனுப்பப்பட்டு, சம்மந்தப்பட்ட துறையின் மூலம் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதை தவிர இப்பிரிவில், அரசுத் துறைகள் குறித்து வெளிவரும் முக்கியச் செய்திகள் 'உள்ளறி' (Scan) செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களுக்கு மின்னஞ்சல் (e-mail) மூலமும், கட்செவி (Whats App) மூலமும் உடனுக்குடன் அனுப்பப்பட்டு வருகின்றன.

நினைவகங்கள்

தமிழகத்தின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு, தமிழ்நாட்டிற்கு பெருமையினை தேடித் தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதிகளை விடுதலை உணர்வுகளை ஊட்டி வளர்த்த கவிஞர்கள் மற்றும் இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத

முன்னுரிமை

குடிதண்ணீருக்கு முன்னுரிமை, கல்விக்கு முன்னுரிமை, எல்லாவற்றிற்கும் மேலாக, விவசாயத் துறைக்கு முன்னுரிமை வழங்குகின்ற அரசாக அம்மாவினுடைய அரசு திகழ்கிறது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

சாட்சியங்களாக விளங்கும் தியாகிகளின் நினைவுகளைப் போற்றி பெருமைப்படுத்துகின்ற வகையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், 71 நினைவகங்கள், 4 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள், ஒரு நினைவுச் சின்னம் ஆகியன உருவாக்கப்பட்டு, இன்றைய தலைமுறையினரும் எதிர்கால சந்ததியினரும் அறிந்து பயனடையும் வகையில், சிறந்த முறையில் பராமரிக்கப்படுவதோடு பாதுகாக்கப்பட்டும் வருகின்றன.

தமிழகத்தில் அமைந்துள்ள நினைவகங்களின் விபரம்

1. பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம், சென்னை
2. பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் (ம) புரட்சித்தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா நினைவிடம், சென்னை
3. பெருந்தலைவர் காமராஜர் நினைவகம், சென்னை
4. பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம், சென்னை
5. காந்தி மண்டபம், சென்னை
6. மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம், சென்னை
7. மகாகவி பாரதியார் நினைவு இல்லம், சென்னை
8. பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம், சென்னை
9. வள்ளுவர் கோட்டம், சென்னை
10. மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபம், சென்னை
11. தியாகிகள் மணிமண்டபம், சென்னை
12. இரட்டைமலை சீனிவாசன் நினைவகம், சென்னை
13. கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் முகம்மது இஸ்மாயில் மணிமண்டபம், சென்னை
14. சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் மணிமண்டபம், சென்னை
15. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபம், சென்னை
16. பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம், காஞ்சிபுரம் மாவட்டம்
17. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர் மாவட்டம்
18. பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம், திருப்பூர் மாவட்டம்
19. தந்தை பெரியார் நினைவகம், கேரள மாநிலம்
20. பெரியார் – அண்ணா நினைவகம், கேரள மாநிலம்
21. தீரன் சின்னமலை மணிமண்டபம், ஈரோடு மாவட்டம்
22. மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம், கிருஷ்ணகிரி மாவட்டம்
23. வள்ளல் அதியமான் கோட்டம், தருமபுரி மாவட்டம்
24. தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம், தருமபுரி மாவட்டம்
25. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லம், நாமக்கல் மாவட்டம்
26. வ.வே.சுப்பிரமணிய அய்யர் நினைவு இல்லம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்
27. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம், தஞ்சாவூர் மாவட்டம்
28. பட்டுக்கோட்டை அழகிரிசாமி நினைவு மண்டபம், தஞ்சாவூர் மாவட்டம்
29. தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், நாகப்பட்டினம் மாவட்டம்
30. தமிழிசை மூவர் மணிமண்டபம், நாகப்பட்டினம் மாவட்டம்
31. தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவு இல்லம், திருவாரூர் மாவட்டம்
32. தியாகி பி.சீனிவாசராவ் நினைவு மண்டபம், திருவாரூர் மாவட்டம்
33. மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம், திருவாரூர் மாவட்டம்
34. கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம், சிவகங்கை மாவட்டம்
35. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம், சிவகங்கை மாவட்டம்

36. மருதுபாண்டியர் நினைவு மண்டபம், சிவகங்கை மாவட்டம்
37. வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம், சிவகங்கை மாவட்டம்
38. தியாக சீலர் கக்கன் மணிமண்டபம், மதுரை மாவட்டம்
39. தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம், மதுரை மாவட்டம்
40. பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லம், மதுரை மாவட்டம்
41. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபம், மதுரை மாவட்டம்
42. பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லம், விருதுநகர் மாவட்டம்
43. பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா மணிமண்டபம், விருதுநகர் மாவட்டம்
44. தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம், விருதுநகர் மாவட்டம்
45. மகாகவி பாரதியார் மணிமண்டபம், தூத்துக்குடி மாவட்டம்
46. மகாகவி பாரதியார் இல்லம், தூத்துக்குடி மாவட்டம்
47. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் இல்லம், தூத்துக்குடி மாவட்டம்
48. வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம், தூத்துக்குடி மாவட்டம்
49. சுதந்திரப் போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம், தூத்துக்குடி மாவட்டம்
50. சுதந்திரப் போராட்ட வீரன் வெள்ளையத்தேவன் நினைவகம், தூத்துக்குடி மாவட்டம்
51. அமுதகவி உமறுப்புலவர் நினைவகம், தூத்துக்குடி மாவட்டம்
52. வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம், தூத்துக்குடி மாவட்டம்
53. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபம், திருநெல்வேலி மாவட்டம்
54. பூலித்தேவன் நினைவு மாளிகை, திருநெல்வேலி மாவட்டம்
55. தமிழறிஞர் கால்டுவெல் நினைவு இல்லம், திருநெல்வேலி மாவட்டம்
56. தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபம், திருநெல்வேலி மாவட்டம்
57. விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன் மணிமண்டபம், திருநெல்வேலி மாவட்டம்
58. பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம், கன்னியாகுமரி மாவட்டம்
59. காந்தி நினைவு மண்டபம், கன்னியாகுமரி மாவட்டம்
60. பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம், கன்னியாகுமரி மாவட்டம்
61. சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவு மண்டபம், கன்னியாகுமரி மாவட்டம்
62. மார்ஷல் நேசமணி மணிமண்டபம், கன்னியாகுமரி மாவட்டம்
63. முத்து மண்டபம் (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ராம ராஜ சிங்கன் நினைவகம்), வேலூர் மாவட்டம்

64. விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம், திண்டுக்கல் மாவட்டம்
65. மாமன்னர்கள் ஹைதர் அலி, திப்பு சுல்தான் மணிமண்டபம், திண்டுக்கல் மாவட்டம்
66. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மணிமண்டபம், விழுப்புரம் மாவட்டம்
67. விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை நினைவு சின்னம், சேலம் மாவட்டம்
68. சுவாமி சகஜானந்தா மணிமண்டபம், கடலூர் மாவட்டம்
69. உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு மணிமண்டபம், கோயம்புத்தூர் மாவட்டம்
70. இராமசாமி படையாட்சியர் நினைவு மண்டபம், கடலூர் மாவட்டம்
71. டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபம், தூத்துக்குடி மாவட்டம்

அரசு விழாக்கள்

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட தன்னிகரில்லாத் தலைவர்களையும், செம்மொழி, அமுதமொழி என சிறப்புப் பெற்ற நம் தாய்மொழி, தமிழ்மொழி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்த அறிஞர் பெருமக்களைப் போற்றி புகழ்ந்திடவும் அவர்களது நோக்கங்கள் மற்றும் உயரிய சிந்தனைகளை எதிர்காலத் தலைமுறையினர் அறிந்து கொள்ளவும் அவர்களது பிறந்தநாள் விழாக்கள் மற்றும் நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன.

கள விளம்பரம்

மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கடந்த 2013ஆம் ஆண்டில் தமிழக அரசின் திட்டங்களையும், அரசின் சாதனைகளையும் அனைத்து மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் விளம்பரப் பணிகளையும், தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு அரசின் நலத்திட்டங்களால் மக்கள் அடைந்துள்ள பயன்களை ஆவணப்படுத்தும் பணிகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு கள விளம்பரப் பிரிவு என்னும் புதிய பிரிவை இத்துறையில் உருவாக்கினார்கள்.

வீடியோ வாகன மின்னணு விளம்பரத் திரைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நவீன தொழில்நுட்ப முறையில் மின்னணு விளம்பரத் திரை பொருத்திய 32 புதிய மின்னணு விளம்பரத்திரை வீடியோ வாகனங்களை அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கியுள்ளார்கள். இந்த மின்னணு விளம்பரத்திரை வீடியோ வாகனங்கள், பகல், இரவு மற்றும் அனைத்து நேரங்களிலும் மக்கள் கூடும் இடங்களிலும், அரசு விழாக்கள் நடைபெறும் இடங்களிலும் அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்த விளம்பரப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ளன.

இவ்விளம்பரக் காட்சி ஊர்திகளின் அன்றாட நடமாட்டத்தை 'புவிதிசைச்சுட்டி' (GPS) வாயிலாக கண்காணிக்கும் பணியை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

திரைப்பட விருதுகள்

சமுதாயச் சிந்தனைகளுடன் கூடிய சிறந்த கலைப்படைப்புகளுடன், மனித நல்லுணர்வுகளை பிரதிபலிக்கும் தரமான திரைப்படங்களை தயாரிப்பதை ஊக்கப்படுத்திட சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்குத் திரைப்பட விருதுகள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கென, தகுதிவாய்ந்த தேர்வுக்குழு ஒன்றை அமைத்து சிறந்த திரைப்படங்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்ப கலைஞர்களுக்கான விருதுகளை பெறுவதற்குத் தகுதியான கலை வல்லுனர்களை தமிழ்நாடு அரசு தேர்வு செய்து வருகிறது.

சின்னத்திரை விருதுகள்

மக்களின் அன்றாட வாழ்க்கையில் மிகப் பெரும் பங்கு வகித்து வரும் சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் நெடுந்தொடர்கள், குறுந்தொடர்கள் அதில் பங்கேற்கும் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், தமிழ்நாடு அரசின் சார்பில், சின்னத்திரை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசாக 2 இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 1 இலட்சம் ரூபாய் ரொக்கம், நினைவுப் பரிசு உள்ளிட்ட சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

திரைப்படத்துறையினர் நலவாரியம்

திரைப்படங்களிலும், சின்னத்திரையிலும் பங்களித்து கலையினை வளர்க்கும் கலைஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அவர் தம் குடும்பத்தினருக்கு உதவிட, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கீழ் திரைப்படத்துறையினர் நலவாரியம் தோற்றுவிக்கப்பட்டு பலவிதமான நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நலவாரியத்தில், 39 சங்கங்களைச் சார்ந்த திரைப்பட / சின்னத்திரைத் தொழிலாளர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் உறுப்பினர்களாக சேரத் தகுதி பெற்றவர்கள் ஆவர். இந்நலவாரியத்தில் 21,656 நபர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

திரைப்படத்துறை மற்றும் சின்னத்திரையின் படைப்பாக்கத்தில் பங்கேற்றுப் பணியாற்றும் பல்வேறு சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, கருக்கலைப்பு மற்றும் கருச்சிதைவு உதவித்தொகை, மூக்குக்கண்ணாடி உதவித்தொகை, விபத்து ஈட்டுறுதித் திட்டம், இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை போன்ற பல்வேறு நலத்திட்டங்கள் வாயிலாக உதவிகள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

செய்தி படப்பிடிப்பு

அரசின் அன்றாட செயல்பாடுகளை மக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொள்ளும் பொது நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் நிகழ்ச்சிகளை வீடியோ மூலம் ஒளிப்பதிவு செய்து, அவற்றைத் தொகுத்து தலைமைச் செயலகத்தின் ஊடக மையத்தின் வழியே வீடியோ செய்தி நறுக்குகளாக அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகளுக்கு பதிவேற்றம் செய்து ஒளிபரப்பிடும் பணிகளை தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

தயாரிப்பு மற்றும் வெளியீடு

தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் முக்கியப் பணியாக தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்கள், அறிவிப்புகள், வளர்ச்சிப் பணிகள், செயல்பாடுகள் மற்றும் அரசின் பல்வேறு நிகழ்ச்சிகள் குறித்து அவ்வப்போது நிகழும் சமூக மாற்றத்திற்கேற்ப பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பின்வருமாறு தயாரித்து வெளியிடப்பட்டு வருகிறது:

எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

திரைப்படத் தயாரிப்பு மற்றும் திரைப்பட தொழில்நுட்ப நுணுக்கங்களை பயிற்றுவித்து கலை உணர்வுகளை வெளிப்படுத்த வைத்திடும் முதன்மை நிறுவனமாக எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் விளங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் பலதரப்பட்ட திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பிற திரைப்படத் துணைப்பாடங்களையும் மாணவர்களுக்கு கற்றுத் தருவதே இதன் முக்கிய இலக்கு ஆகும்.

தமிழக அரசின் செய்தி மற்றும் விளம்பரத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் இந்நிறுவனம் 15.25 ஏக்கர் நிலப்பரப்பில் செயல்பட்டு வருகிறது. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் அகில இந்திய அளவில் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சியை அளிக்கும் மூன்று முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும். மற்றவை, பூனாவில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமும், கொல்கத்தாவில் உள்ள சத்தியஜித்ரே திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனமும் ஆகும்.

தமிழரசு

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் "தமிழரசு" இதழ், தமிழ்நாடு அரசின் திட்டங்கள், மக்கள் நலப்பணிகள், நலத்திட்ட செயல்பாடுகள், சாதனைகள் மற்றும் அறிவிப்புகள் ஆகியவற்றை மக்களிடம் கொண்டு சேர்க்கும் அச்சு ஊடகமாக திகழ்ந்து வருகிறது. "தமிழரசு இதழ்" தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

அரசின் பயனுள்ள பல தகவல்களை வாசகர்களுக்கும், பொதுமக்களுக்கும் தமிழரசு இதழ் அளித்து வருகிறது. மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களின் உரைத் தொகுப்புகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்புகள், அனைத்துத் துறைகளின் சார்பில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள், அனைத்துத் துறைச் சார்ந்த அறிவிப்புகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விரிவான கட்டுரைகள், மாநிலம் முழுவதிலும் அரசு நலத் திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் நேர்காணல்கள் உள்ளிட்ட வெற்றிக்கதைகள் ஆகியவை அனைத்துத் தரப்பினரும் படித்துப் பயனடைந்திடும் வகையில் தமிழரசு இதழில் வெளியிடப்படுகின்றன.

தமிழரசு தமிழ் மற்றும் ஆங்கில இதழ்களின் பிரதி விலை 20/– ரூபாயாகவும், ஆண்டு சந்தா ஒவ்வொன்றிற்கும் 240/– ரூபாயாகவும், ஆயுள் சந்தா தமிழ் (10 ஆண்டுகள்) 2,000 ரூபாயாகவும், ஆங்கிலம் (10 ஆண்டுகள்) 2,400 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழரசு மாத இதழ்களை பெற்றுக்கொள்ள www.tamilarasu.org என்ற இணையதளம் மூலமாக சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

சிறப்பு வெளியீடுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முக்கிய நிகழ்ச்சிகளில் ஆற்றிய தமிழ் மற்றும் ஆங்கில உரைகள் அடங்கிய சிறப்பு வெளியீடுகள் அவ்வப்பொழுது வெளியிடப்பட்டு, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் வாயிலாகப் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இதரப் பிரிவுகளுக்குரிய விண்ணப்பங்கள் மற்றும் படிவங்கள் போன்றவையும் இங்கு அச்சிடப்படுகின்றன.

மடிப்பேடுகள்

அனைத்து மாவட்ட நினைவகங்களுக்குத் “தமிழரசு” சார்பில் கடந்த 2011ஆம் ஆண்டு மே திங்கள் தொடங்கி, நாளதுவரை பல்வேறு தலைவர்கள், தியாகிகள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள் மடிப்பேடுகளாக அச்சடிக்கப்பட்டு, அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

“முத்திரை பதித்த மூன்றாண்டு,
முதலிடமே அதற்குச் சான்று”

– மூன்றாண்டு சிறப்பு மலர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தன்னிகரற்ற தலைமையில் மூன்றாண்டு சிறப்புடன் நல்லாட்சியை நிறைவு செய்தமைக்கான சிறப்பு மலர்கள் இத்துறையின் சார்பாக அச்சிடப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 17.02.2020 அன்று நடைபெற்ற மூன்றாண்டு சாதனை விழாவில் வெளியிடப்பட்டுள்ள சிறப்பு வெளியீடுகளின் விவரம் பின்வருமாறு:

- “முத்திரை பதித்த மூன்றாண்டு, முதலிடமே அதற்குச் சான்று” – தமிழ் பதிப்பு
- STERLING THREE YEARS’ PERFORMANCE TESTIFIED BY NUMBER ONE POSITION – ஆங்கில பதிப்பு
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் – தொகுப்பு–1
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் – தொகுப்பு–2
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் சட்டப்பேரவையில் ஆற்றிய உரைகள்
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் நிகழ்த்திய உரைகளிலிருந்து தொகுக்கப்பட்ட முத்தான கருத்துரைகள்

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள்
- மூன்றாண்டு சாதனைகள்— மாவட்டம் வாரியாக (32 மாவட்டங்கள்)

பொருட்காட்சிப் பிரிவு

தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள், சாதனைகள் மற்றும் செயல்பாடுகளை அனைத்துத்தரப்பு மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, வேலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில் ஆண்டுதோறும் ஏனைய மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில், 4 மாவட்டங்களில் சுழற்சி முறையிலும் மொத்தம் 10 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

அதனடிப்படையில் கடந்த ஒன்பது ஆண்டுகளில் (மார்ச் 2011 முதல் பிப்ரவரி 2020 வரை) 80 அரசுப் பொருட்காட்சிகளின் மூலம் 14 கோடியே 5 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் அரசிற்கு நிகர வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

தனியார் பொருட்காட்சிகள்

வரைமுறைகளின்றி, முற்றிலும் வணிக நோக்குடன், தனியாரால் நடத்தப்பட்டு வந்த பொருட்காட்சிகள், முழுமையாக ஒழுங்குபடுத்தப்பட்டு, பொதுமக்களின் நன்மைக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் பயன்படும் வகையில் உரிய விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. தற்போது மாவட்டங்களில், தனியார் பொருட்காட்சி நடத்துபவர்களிடம், சமீபத்திய மூன்றாண்டுகளுக்கு வருமான வரி செலுத்திய விபரங்கள், 88 முதலமைச்சர் நிவாரண நிதிக்கு அரசு நிர்ணயித்த தொகை போன்றவைகளை வழங்கச் செய்து, தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரின் முறையான பரிந்துரையின் அடிப்படையில், தனியார் பொருட்காட்சிகளுக்கு செய்தி மக்கள் தொடர்புத் துறையால் அனுமதி வழங்கப்பட்டு வருகின்றன.

புதுடெல்லி பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி

புதுடெல்லியில், ஆண்டுதோறும் நடைபெறும் அகில இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில், தமிழ்நாடு அரசு சார்பில் செய்தி மக்கள் தொடர்புத்துறை ஒவ்வொரு ஆண்டும் பங்கேற்று, தமிழக அரசின் பல்வேறு துறைகள் தொடர்பான சாதனைகள், திட்டப்பணிகள், கொள்கை விளக்கங்கள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் குறித்த விளக்கப் புகைப்படங்கள் மற்றும் காட்சிப் பொருட்களை, காண்போரைக் கவரும் வகையில் அமைத்து, அனைத்துத் தரப்பு மக்களும் அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் மற்றும் சிறப்புகளை அறிந்துகொள்ளவும், பயனாளிகள் நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கான வழிமுறைகளை அறியும் வகையிலும் அரங்குகளைக் குறிப்பிடத்தக்க வகையில் அமைத்து வருகிறது.

ஏனைய மாநிலங்கள், நம் மாநில அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை அறிந்துகொள்ள ஒரு நல்ல வாய்ப்பாக, அகில இந்திய அளவில் நடைபெறும் விதமாக இப்பொருட்காட்சி அமைந்துள்ளது. மேலும், நம் மாநில மகளிர் சுய உதவிக் குழுக்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களை விற்பனை செய்ய, நாடு தழுவிய அளவில் வணிக வாய்ப்பு அமைத்துக் கொடுக்கப்படுகிறது.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/18-20
& WPP No. TN/PMG (CCR) 518/18-20

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **பன்வாரிலால் புரோஹித்** அவர்களை, 04.05.2020 அன்று, ஆளுநர் மாளிகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விளக்கினார்கள்.

Published by Dr. P. SANKAR, IAS, on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr. P. SANKAR, IAS